★

# உதயன்

சுடர் 27
கதிர் 81

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 03 புதன்கிழமை (15/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# இலங்கைக்கு தொடர்ச்சியாக மேற்குலகம் அநீதியிழைப்பு

## அமெரிக்க இராஜதந்திரிகளிடம் நேரில் குற்றஞ்சாட்டினார் ஜனாதிபதி



கொழும்பு, பெப்ரவரி 15

மேற்குலக நாடுகளுடன் நட்புறவைப் பேணிவரும் இலங்கைக்கு அந்நாடுகள் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன, அநீதி இழைக்கின்றன - என்று அமெரிக்க இராஜதந்திரிகளிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகவே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஓ பிளேக், பொதுமக்கள் பாதுகாப்பு ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் மரியா ஓட்ரேரோ ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்படி குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

மேலும் இந்தக் கலந்துரையா » 27

## சவேந்திர சில்வா நியமனம் குறித்து நவநீதம்பிள்ளை பெரும் அதிருப்தி

### பான் கீ மூனுக்கு கடிதமும் அனுப்பிவைப்பு

கொழும்பு, பெப்.15

ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, அமைதி காப்பு நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்கும் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார் ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

மேலும், மனித உரிமை மீறல்களைப் புரிந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் தனிநபர்கள் பற்றிய பட்டியல் ஒன்றை நாங்கள் பேணி வருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு கடிதம் ஒன் » 27

## வன்னிப் பகுதியில் இன்னும் 1 மில்லியன் மிதிவெடிகள்

யாழ்ப்பாணம்,பெப்.15.

வன்னிப் பகுதியில் சுமார் 3 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என வடமாகாண ஆளுநரினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

சுமார் 3 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றரில் மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன.

வெளிநாட்டு நிதியு » 27

## டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி

கொழும்பு, பெப்.15

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று 120 ரூபா 25 சதமாகக் வீழ்ச்சியடைந்தது.

நாணயப் பரிமாற்ற வீதத்தில் இலங்கை மத்திய வங்கி தனது தலையீட்டை விலக்கிக்கொண்டதையடுத்து இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் எரிபொருள் விலையேற்றம் போன்ற காரணங்களினால் கொழும்பு பங்குச் சந்தை நிலவரம் மேலும் சரியும் சாத்தியம் காணப்படுகின்றது. தென்னாசியாவில் கடந்த சில வருடங்களுக்கு முன் உச்சத்தில் இருந்த கொழும்பு பங்குச்சந்தை கடந்த இரு வருடங்களில் படுபாதாளத்தில் வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## அத்தியாவசியப் பொருள்களும் கிடுகிடுவென விலை எகிறின

### எரிபொருள் ஏற்றத்தின் எதிரொலி

யாழ்ப்பாணம், பெப்.15

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் கிடுகிடுவென உயர்வடைந்துள்ளன. சில பொருள்களின் விலைகள் 5 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினால் அதிகரித்திருப்பதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. முன்னெப்போதும் இல்லாத வகையில் அவற்றின் விலைகளை இரண்டு இயக்க எண்ணிக்கையில் அதிகரித்தது அரசு.

இந்த எரிபொருள் விலையேற்றம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளிலும் அதிக தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

இதனால் நேற்றுமுன்தினம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் கிடுகிடுவென உயர்த்தப்பட்டன.

நேற்றுக் காலை வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற நுகர்வோருக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. சிலபொருள்களின் விலை உயர்த்தப்பட்டதுடன் மேலும் சில பொருள்கள் தட்டுப்பாடாகவும் இருந்தன.

சீனியின் விலை நேற்று முதல் குடாநாட்டில் 5 ரூபா » 27

## மீனவர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்க அமைச்சு முடிவு

யாழ்ப்பாணம், பெப்.15.

மானிய விலையில் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள்களை வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது. கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் கலாநிதி ராஜித சேன ரட்ன இதனை உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்தார்.

டீசல் 12 ரூபா, மண்ணெண்ணெய் 25 ரூபா விலைகுறைக்கப்பட்டு மானிய அடிப்படையில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் தோறும் உள்ள கடற்றொழில் திணைக்களங்களுக்கு இதனை அமைச்சு அறிவித்துள்ளது. இந்த மானிய விலை எரிபொருள் பற்றிய அறிவிப்பு அமைச்சிடம் இருந்து தமக்குக் கிடைத்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் உறுதிப்படுத்தினார்.

மானிய அடிப்படையில் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை வழங்குமாறும் இல்லையேல் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் நேற்றுமுன்தினம் சமாசம் அறிவித்திருந்தது. அத்துடன் தென்னிலங்கை மீனவர்களும் மன்னார் மாவட்ட மீனவர்களும் எரிபொருள் விலை ஏற்றத்தை ஆட்சேபித்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் கடற்றொழில் அமைச்சு எரிபொருள்களை மானிய விலையில் வழங்குவதாக அறிவித்துள்ளது. (10-03)



## பிளேக்குக்கு விசராம்!

### சண்டியர் மேர்வினின் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப்.15

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக்கிற்கு விசர் பிடித்துள்ளது. இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு பிளேக்கிற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது- என்று அமைச்சர் மேர்வின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசிற்கும் ரொபேட் ஓ பிளேக்கிற்கும் இடையிலான பேச்சின்போது தாம் பிரசன்னமாகியிருந்தால், வேறுவிதமான முடிவுகள் கிடைக்கப் பெற்றிருக்கும் என்றும் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். » 27

## பிரிட்டன் விசா நடைமுறையில் மாற்றம்

பிரிட்டனில் கல்வி கற்பதற்கான மாணவர் விஸாவுக்கான புதிய ஒழுங்குவிதிகள் 2012 ஏப்ரல் மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்படும் என பிரிட்டன் உயர் ஸ்தானிகராலயம் நேற்று விடுத்த ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குவிதிகள் மூலம் துஷ்பிரயோகங்கள் குறைக்கப்படும் எனவும் புத்திசாலித்தனமான சிறந்த மாணவர்கள் மாத்திரம் பிரிட்டனில் தங்கியிருப்பதையும் வேலை செய்வதையும் இது உறுதிப்படுத்தும் எனவும் பிரிட்டன் குடிவரவு அமைச்சர் டேனியன் கிறீன் கூறியுள்ளார். புதிய விதிகள் மூலம், மாணவர்கள் கல்வியின் பின் பிரிட்டனில் இரு வருடங்கள் தங்கியிருந்து தொழில்புரிவதற்கான வாய்ப்புகள் நிறுத்தப்படும்.

## அதிவேக சாலை கட்டணமும் உயர்வு

எரிபொருள்களின் விலை அதிகரிப்பினை அடுத்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பயணிகள் பஸ் கட்டணமும் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது. இதற்கிணங்க முன்னர் 400 ரூபாவாக இருந்த பஸ் கட்டணம் தற்போது 470 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

## பல்கலை மாணவர் புறக்கணிப்பு தொடர்கிறது

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களின் விரிவுரைப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது. மாணவர் பிரதிநிதிகளுக்கும் விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களுக்கு இடையே சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது. இதன் போது விரைவில் சாதகமான முடிவு தெரிவிக்கப்படும் எனவும் மாணவர் பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சாதகமான முடிவு கிடைக்கும் பட்சத்தில் மாணவர் புறக்கணிப்புப் போராட்டமும் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ங)

## எரிந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம்

கொழும்பு - டொரிங்டன் மற்றும் பொத்தேஜு மாவத்தைக்கு இடைப்பட்ட பகுதியில் மின்சார கம்பத்துக்கு அருகில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுப்பகல் மீட்கப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நாரஹேன்பிட்டி பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர், நீதிமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டவராக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து மீனவர்கள் பேரணி

## மன்னாரில் நூற்றுக்கணக்கானோர் திரண்டனர்

மன்னார், பெப். 15.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராகவும் எரிபொருள் விலையேற்றத்தை மீளப்பெற வலியுறுத்தியும் மன்னார் மாவட்ட மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாரில் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணியின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்துகொண்டு மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.




மன்னார் உப்பள வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கட்டடத்துக்கு முன்பாக ஆரம்பமான குறித்த பேரணி சந்தைக் கட்டடத் தொகுதியூடாக பஸார் பகுதிக்குச் சென்று மன்னார் மாவட்டச் செயலகத்தினைச் சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திரவிடம் எரிசக்தி அமைச்சருக்கான மனுவை மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எம்.எம்.ஆலம் கையளித்தார்.

சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த எதிர்ப்புப் பேரணியில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்து கொண்டிருந்தனர். மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல மீனவ சங்கங்களில் இருந்தும் அங்கத்தவர்கள் வருகை தந்திருந்தனர்.

கத்தோலிக்க மதகுருமாரும் குறித்த பேரணியில் கலந்துகொண்டு மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதேவேளை மன்னார் வர்த்தகர் சங்கமும் குறித்த அமைதி எதிர்ப்புப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்திருந்த நிலையில் காலை 8 மணி முதல் 10.30 மணிவரை வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. (ஒ)

## பித்தளைப் பாத்திரத்தைத் திருடிய சிறுவன் 3 வருடங்களுக்கு நம்பிக்கை இல்லத்தில்

### தந்தையை அழைத்து நீதிவான் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.15

பித்தளைப் பாத்திரம் திருடிய சிறுவனை 3 வருடங்களுக்கு சிறுவர் நம்பிக்கை இல்லம் ஒன்றில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சிறுவனின் தந்தையை மன்றுக்கு அழைத்து கடும் எச்சரிக்கை செய்தார்.

யாழ். முஸ்லிம் தெருவைச் சேர்ந்த சிறுவன் ஒருவனே பித்தளைப் பாத்திரம் ஒன்றைத் திருடியுள்ளான். அது பற்றி பாதிக்கப்பட்டவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் சிறுவனைக் கைது செய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினார்.

விசாரணையின் போது சிறுவன் தனது குற்றதை ஒப்புக்கொண்டான். அதனையடுத்து 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவித்து மூன்று வருடங்களுக்கு சிறுவர் நம்பிக்கை இல்லம் ஒன்றில் பராமரிக்க உத்தரவிட்டார். சிறுவனின் தந்தையை மன்றுக்கு அழைத்த நீதிவான் கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தோடு எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாமல் பார்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார். (ஒ-4)

## புலிச் சின்ன முத்திரைக்காக மன்னிப்பு கோரும் ஜேர்மனி

தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தபால்முத்திரைகள் வெளியிடப்பட்டமை தொடர்பில் ஜேர்மனிய அரசு மன்னிப்புக் கோரியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேண்டுமென்றே தபால் முத்திரை வெளியிடப்படவில்லை என்றும் ஜேர்மன் அரசு தெரிவித்துள்ளது.

இவ்வாறான புலிச் சின்னங்கள் தாங்கிய தபால் முத்திரைகள் எதிர்காலத்தில் அச்சிடப்பட மாட்டாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடக உயர் கல்வித்துறை அமைச்சர் மேடையில் மயங்கி வீழ்ந்து மரணம்



கல்லூரி நிகழ்ச்சியின் போது மேடையில் மயங்கி விழுந்த கர்நாடக மாநில உயர் கல்வித்துறை அமைச்சர் வி.எஸ்.ஆச்சார்யா மரணமடைந்தார்.

கர்நாடக மாநில உயர் கல்வித் துறை அமைச்சர் வி.எஸ்.ஆச்சார்யா (வயது - 71). அவர் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காக நேற்றுக் காலை மங்களூரில் இருந்து விமானம் மூலம் பெங்களூர் வந்தார். விமான நிலையத்தில் இருந்து நேராக நிருபதுங்கா வீதியில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சென்றார்.

அங்கு நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் திடீர் என்று மேடையில் மயங்கி விழுந்தார். உடனே அவரை மல்லிகே மருத்துமனைக்குக் கொண்டு சென்றனர். அவரைப் பரி சோதித்த மருத்துவர்கள் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது எனத் தெரிவித்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார்.

அவருக்கு சாந்தா என்ற மனைவியும், 4 மகன்கள் மற்றும் மகளும் உள்ளனர்.

நேர்மையானவர் என்று பெயரெடுத்த ஆச்சார்யா கர்நாடக உள்துறை அமைச்சராகவும் இருந்துள்ளார். இந்திரா காந்தி பிரதமராக இருக்கையில் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டபோது பா.ஜ.க. மூத்த தலைவரான ஆச்சார்யா 19 மாதங்கள் சிறையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புகலிடம் கோரி போராட்டம்

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் முன்பாக இலங்கையர் ஒருவர் புகலிடம் கோரி தனது குடும்பத்துடன் போராட்டம் நடத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புகலிடம் வழங்கப்படாவிட்டால் தீக்குளிக்கப் போவதாக, அதிகாரிகளை அவர் அச்சுறுத்தியுள்ளார்.

37 வயதான கவினமுதம் தேவகுமார் என்ற இலங்கையரே இவ்வாறு போராடி வருகிறார். தேவகுமார், அவரது மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் முன்பாக போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் மீளவும் தம்மையும் தமது குடும்பத்தாரையும் இலங்கைக்கு நாடு கடத்தக் கூடுமென்றும் தேவகுமார் அச்சம் வெளியிட்டுள்ளார்.

## உயர்ந்தது பஸ் கட்டணமும்!

யாழ்ப்பாணம், பெப். 15.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து நேற்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் 20 'வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகியன பஸ் கட்டணங்களின் உயர்வு குறித்து அறிவித்துள்ளன.

அதன் பிரகாரம் வட பகுதியின் பஸ் கட்டணம் (யாழ்ப்பாணத்தில் இருந்து) சில வருமாறு :-

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கான அதிகரித்த பஸ் கட்டணம் 177 ரூபா. பழைய கட்டணம் 148 ரூபாவாகும்.

முல்லைத்தீவுக்கான கட்டணம் 151 ரூபாவிலிருந்து 177 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கான கட்டணம் 76 ரூபாவிலிருந்து 92 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பரந்தன் ஊடாக மன்னாருக்கான கட்டணம் 174 ரூபாவிலிருந்து 209 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இதேபோல், யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடி, மற்றும் தொண்டமனாறு ஊடான பருத்தித்துறைக்கான கட்டணம் 58 ரூபாவிலிருந்து 69 ரூபாவாகியுள்ளது.

காரைநகர் துறைமுகத்துக்கான 785ஆம் இலக்க பாதை 45 ரூபாவிலிருந்து 55 ரூபாவாகவும், 786ஆம் இலக்க பாதை 41 ரூபாவிலிருந்து 49 ரூபாவாகவும், 782ஆம் இலக்க பாதை 44 ரூபாவிலிருந்து 53 ரூபாவாகவும் அதிகரிப்பு.

தெல்லிப்பழை ஊடாக கீரிமலைக்கான கட்டணம் 38 ரூபாவிலிருந்து 45 ரூபாவாகியுள்ளது.

ஊர்காவற்துறைக்கான கட்டணம், 777ஆம் இலக்க பாதை 43 ரூபாவிலிருந்து 52 ரூபா. 780ஆம் இலக்க பாதை 54 ரூபாவிலிருந்து 64 ரூபா.

குறிகாட்டுவானுக்கான 776ஆம் இலக்க பாதை 61 ரூபாவிலிருந்து 73 ரூபாவானது.

ஏ-9 வீதியூடான பளைக்கான கட்டணம் 46 ரூபாவிலிருந்து 55 ரூபா. கொடிகாமம் 32 ரூபாவிலிருந்து 38 ரூபா. சாவகச்சேரி 27 ரூபாவிலிருந்து 32 ரூபா.

ஆழியவளைக்கான கட்டணம் 68 ரூபாவிலிருந்து 82 ரூபா.

புன்னாலைக்கட்டுவன் வடக்குக்கான 764ஆம் இலக்க கட்டணம் 22 ரூபாவிலிருந்து 27 ரூபா.

அளவெட்டி வடக்குக்கான 768ஆம் இலக்க கட்டணம் 38 ரூபாவிலிருந்து 45 ரூபா.

இளவாலைக்கான 788 ஆம் இலக்க கட்டணம் 35 ரூபாவிலிருந்து 41 ரூபா.

இதேவேளை கொழும்புக்கான அரை சொகுசு பஸ் கட்டணம் 720 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின்தனியார்பஸ் கட்டணங்களாகும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் கட்டணத்துக்குச் சமமாகவே அதிகரிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து தனியார் பஸ் சேவைகள் நேற்று முன்தினம் நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். (ஒ-03, 05)

## இரு சந்தேக நபர்களின் பிணை மனுக்கள் தீர்ப்பு நாளைய தினத்துக்கு ஒத்திவைப்பு

### மீசாலைப் பெண் கொலைவழக்கு

யாழ்ப்பாணம், பெப். 15.

மீசாலைக் கொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களில் இரண்டு பேரின் பிணை மனுக்கள் மீதான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர்களான பால்றாஜ் மோகனபிரசாத் (வயது-26) மற்றும் நவரத்தினம் கோபிகிருஷ்ணா (வயது -19) ஆகிய இருவர் தொடர்பான பிணை மனுக்களே நாளையதினம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.


கனடாவிலிருந்து நாடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் நண்பர்களின் உதவியுடன் மனைவியைக் கொலை செய்தார் என்பது குற்றச்சாட்டு.

கடந்த வருடம் மார்ச் மாதம் 6ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. மீசாலையைச் சேர்ந்த குகதாஸ் சாந்தினி என்பரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே இரண்டு சந்தேக நபர்களுக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவ்விருவரில் ஒருவர் இளம் பெண்ணாவார். இறந்தவரின் கணவன் உட்பட மூன்றுபேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இரண்டு பேர் வவுனியாவைச் சேர்ந்தவர்களாவார்.

இந்த வழக்குடன் தொடர்பான குறித்த பிணை மனுக்கள் சட்டத்தரணி சர்மினி விக்கினேஸ்வரன் மூலம் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. எதிர் மனுதாரர்களான சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரன் முன்னிலையாகி, பிணை மனுக்கள் [illegible] சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா வாதாடினார். (ஒ-4)

### இனி இதுதான் கதி



எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எதிர்க்கட்சியினர் மாகாண சபைக்கூட்டத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மாட்டு வண்டியில் பயணம்மேற்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 13 ஆவது திருத்தம் குறித்த காலம்பிந்திய கருத்து...

இனப் பிரச்சினைக்குரிய தீர்வாகக் காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதனால் அது நாட்டைப் பிரிப்பதாகாது. இதனைச் சில பேரினவாதக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவில் நடைமுறையில் உள்ளது போன்று அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் முறையே பதின்மூன்றாவது திருத்தத்தில் அடங்கியுள்ளது. இந்தியா, அதிகாரப்பகிர்வு முறையைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துகிறது. 13 ஆவது திருத்தத்தில் பல சிறந்த அம்சங்கள் உள்ளன. இது குறித்து எம்மில் சில சாரார் புரிந்துகொள்ளாமல், அதிகாரப் பரவல் தனிநாட்டை உருவாக்கும் முறை என்றே நினைக்கின்றனர். அது தவறான கருத்தாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா.

யாழ்ப்பாணத்தில் வசிப்பவரதும், மாத்தறையில் வசிப்பவரதும், நுவரெலியாவில் வாழ்பவரதும் தேவைகள் ஒரேமாதிரியானவை அல்ல. அவை மாறுபட்டவை. ஆகையால், நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் வாழும் மக்களினதும் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமானால் அதிகாரங்களைப் பரவலாக்குவது இன்றியமையாதது. அது மட்டுமன்றி, நாட்டின் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தவும் அதுவே உகந்த வழி என்றும் எடுத்துரைத்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர்.

இவற்றைவிடவும், பதின்மூன்றாவது + திருத்தத்தின் மூலம், மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைப்பதன் ஊடாக ஏற்படக்கூடிய நன்மைகளையும், மாகாணங்கள் தம்மிடம் உள்ள வளங்களைப் பகிர்ந்துகொள்வதால் உண்டாகக் கூடிய அபிவிருத்தி சார்ந்த நலன்களையும் முன்னாள் பிரதம நீதியரசர் தாம் வழங்கிய நீண்ட செவ்வியொன்றில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தியா, கனடா, அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, ஜேர்மனி மற்றும் வேறு பல நாடுகளில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் நடைமுறை வெற்றிகரமாக நடைமுறையில் உள்ளதையும் அவர் விவரித்திருக்கிறார். அதிகாரங்களை ஒரே இடத்தில் குவித்து வைப்பதால், மத்திய அரசு தன்னிடமே பொதுக்கி வைத்திருப்பதால், பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது. மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அதிகாரங்கள் வகுக்கப்படுகின்றன--

மாகாணங்களின் எல்லைகளை, வகுக்கப்பட்ட ஓர் அடிப்படையில் நிர்ணயித்துக் கொண்டால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்-- என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவிக்கிறார்.

அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் பல, தென்னிலங்கை இனவாதத் தலைவர்களுக்குக் கோபத்தையும் அவர் மீது வெறுப்பையும் ஊட்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேவேளை, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கைப் பிரிப்பதற்குத் தீர்ப்பு வழங்கிய சரத் என் சில்வா, இப்போது புதிய சித்தாந்தம் பேசுகிறார் என்று தமிழர் தரப்பு முகத்தைச் சுழித்துக்கொள்வதும் இயல்பே; தவிர்க்க முடியாததும் ஆகும்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டின் மூவின மக்களும் சம உரிமைகளுடனும், சகோதரத்துவத்துடனும், நல்லுறவுடனும் வாழ்வதற்குக் கிடைத்த வாய்ப்பைக் கொட்டிக் குழப்பியவர்கள் தென்னிலங்கை அரசியல் தலைவர்களே. தமக்கான உரிமைகள் வழுவின்றியும் வலுவுடனும் வழங்கப்பட வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் கோரிக்கைகள் மிதித்து நசுக்கப்பட்டதாலேயே, ஆயுதப் போராட்டம் முகிழ்த்தது; ஓங்கி, உயர்ந்து வளர ஏதுவானது.

தமிழ் மக்களின் முன்னைய சாத்வீகப் போராட்டத்தையும், பின்னைய ஆயுதப் போராட்டத்தையும் ஒடுக்கி நசுக்கிவிட்டோம் என்ற மமதையுடனும், செருக்குடனும், இனவாதத்துடனும் அவற்றுடன் இரண்டறக் கலந்த நிலையில், அரசாங்கமும் அதன் அரசியல்சார் ஆதரவுத் தரப்புகளும் சமாதான சகவாழ்வுக்குக் குந்தகமாக இருக்கவே விரும்புகின்றன.

அதனால், நியாயத்தையும் நீதியையும், ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் அவை பாற்பட்டு எழும் அபிவிருத்தி, முன்னேற்றம், சகவாழ்வு குறித்து ஆக்கபூர்வமான, நற்பயன் விளைக்கவல்ல கருத்துக்களை வெளியிடுவோரை நெருப்புக் கண்களாலேயே அவர்கள் பார்ப்பர்.

பிரதம நீதியரசராக இருந்த வேளை தமது ''கைகள் கட்டப்பட்ட'' நிலையில் வடக்குக் கிழக்கைப் பிரித்துவிட திசைகாட்டிய, வழிசெய்த சரத் என். சில்வா கூறுவது, இப்போது அரச உயர் மட்டங்களின் காதில் விழாது என்பது மிக இலகுவான சமன்பாடு.

எனினும் நாட்டுக்கு நன்மை விளைவிக்கக் கூடிய கருத்துக்களை வெளியிடும் புத்திஜீவிகள், கற்றுயர்ந்தோர், நியாய சிந்தனை உடையோரின் எண்ணிக்கை தெற்கில் அதிகரித்தால், அதனால் தீமை ஏற்பட வாய்ப்பில்லை.

அரசாங்கம் தனக்குப் பெருமை, புகழ், ஆதரவு சேர்க்கப் பயன்படுத்திவரும் போர் வெற்றி என்ற மாயையை-

தென்னிலங்கையின் ஆக்கபூர்வமான சிந்தனை படைத்த புத்திஜீவிகள் மற்றும் சமூக மட்டத்தில் மதிக்கப்படுவோர் தமது மனங்களிலிருந்து வெளிப்படுத்தும் பெறுமதிமிக்க கருத்துக்கள், இன்னும் சில காலங்களில் மாயையை தேய்த்துவிடும் நிலை உருவாக -

வழி செய்யும் என நம்பலாம்.

நாள்கள் நகர நகர, போர் வெற்றியின் வீச்சும் வீறாப்பும் மங்கிப் போகும் என்று அவர்களில் பலர் சொல்வதன் பெருக்கம், ஓரளவிலேனும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும் எனக்கொள்வதில் தப்பில்லை. மாற்றங்கள் திடீர் திடீரென வருவதும் உண்டல்லவா?

# 822 மில்லியன் டொலர் செலவில் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள்

### தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.15

நிதி வழங்குநர்கள் மூலம் பெறப் பட்ட 822 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் இணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது வடமாகாணத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்க்கா ஆகிய மூன்று நிதி வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட நிதி மூலமே வடக்கில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 407.9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் 6 பெரிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் மீள்எழுச்சித்திட்டம், வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீளமைப்புத் திட்டம், வடக்கின் துரித மீட்சித் திட்டம், உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்றத் திட்டம், வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றத்திட்டம், மாகாணவீதி அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 391.22 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஐந்து பெரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன. இதில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டம், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திட்டம், முரண்பாட்டால் பாதிக் கப்பட்ட பிராந்தியங்களுக்கான அவசரத் திட்டம், உலர் வலய நீர் விநியோகத்திட்டம், நிக்கொட் அபிவிருத்தித்திட்டம் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'ஜெய்க்கா' நிறுவனத்தின் 24.44 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் ஒரு திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(த-3)

## நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவி உயர்வில் சிக்கல் நிலை

யாழ்ப்பாணம்,பெப்.15

வடக்கு மாகாணத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் உள்வாரியாகப் பதவி உயர்வு பெறுவதற்கு, சேவையில் இருந்து கொண்டு வேறு தரநிலைப் பதவிகளுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் என்ற பதவி வடக்கு மாகாணத்தில் மட்டும் நியமனம் செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. மேற்படி பதவிக்கு 'முகாமைத்துவ உதவியாளர்' சேவை மற்றும் சேவைத் தரங்களைப் போன்று சேவைப் பிரமாணக் குறிப்பும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.

இலங்கையில் உள்ள ஏனைய மாகாண சபைகளிலும் மத்திய அரசின் அலு வலகங்களிலும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் என்ற பதவி இல்லை. திட்டமிடல் உதவியாளர் என்ற பதவியே உள்ளது. அதற்குத் தனியான சேவைப் பிரமாணக் குறிப்பும் உள்ளது.

வடக்கு மாகாணத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாகப் பதவி நியமனம் பெற்றவர்கள் குறித்த நியமனக் கடிதத்துடன் நேர்முகப் பரீட்சைகளுக்குச் சமுகமளிக்கும் போது நேர்முகப் பரீட்சைக்குக் குழுவில் இருப்பவர்கள் வேடிக்கையாகப் பார்த்து வினா எழுப்புவதுடன் ஏற்றுக் கொள்ள முடியாது என வும் நிராகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

**நிகழ்ச்சித்திட்ட உதவி யாளர் என்ற பதவி வடக்கு மாகாணத்தில் மட்டும் நியமனம் செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்படுகின்றன.**

இது தொடர்பாக வடக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் ஓய்வுபெற்ற செயலாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

மேற்படி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் என்ற நியமனப் பெயரில் இருக்கும் தவறு உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லாவிடில் அவர்கள் எதிர்காலத்தில் வடக்கு மாகாணம் தவிர்ந்த வெளியிடங்களில் எந்தப் பதவி உயர்வுக்கும் போட்டி போட முடியாத நிலையும், நேர்முகப் பரீட்சையில் குறித்த நியமனக் கடிதத்தைச் சமர்ப்பிக்கமுடியாத நிலையும் ஏற்படும்.

இந்த விடயம் தொடர்பாக பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுத் திட்டமிடல் உதவியாளர் என்ற பெயரில் புதிய நியமனக் கடிதம் வழங்கு வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதனை அடியொற்றி திட்டமிடல் உதவியாளர் என்ற பதவி நியமனம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

(த-11)

## அரச நிறுவனங்களில் நட்டத்தைக் குறையுங்கள்

இலங்கையில் முக்கியமான அரச நிறுவனங்களில் ஏற்பட்டுவரும் நட்டங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டியுள்ளதாகச் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் இறக்குமதிச் செலவினத்தை நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைக்கும் நிதி, வெளிநாடுகளிடமிருந்து பெறப்படும் கடன்கள் ஆகியவற்றின் மூலம் நிரப்பிக்கொள்ள முடியுமெனவும் அது தெரிவித்துள்ளது.

ஆனாலும் அரசு வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்கள் அதிகரித்துச் செல்வது மிகவும் சிக்கலானது எனவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 11 மாதங்களுக்குள் அரசு வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்கள் 42 வீதத்தால் 801 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளதுடன் இந்தக் காலப்பகுதியில் தனியார் துறையின் கடன் பெறுதல் வளர்ச்சி 33.5 வீதமாக உள்ளது.

இதேவேளை, அரச நிறுவனங்கள் பெற்றுக் கொண்ட கடன்களும் இந்தக் காலப்பகுதியில் 29 வீதத்தால் அதிகரித்து 179.3 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளன.

இந்த நிலையில் அண்மையில் இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், வட்டி விகிதாசாரங்களை அதிகரிப்பது, செலவாணி விகிதாசாரம் சுதந்திரமாகத் தீர்மானிக்கப்படுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவது ஆகியன போன்றே இலங்கையின் வரவு - செலவுத் திட்டப் பற்றாக் குறையை 6.2 வீதம் வரை குறைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெளிவுபடுத்தியுள்ளனர். (த-22)

## புதிய கடற்கரை விடுதி

அல்லைப்பிட்டியில் புதிய கடற்கரை விடுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கடற்கரை விடுதியில் முதியவர்களுக்கான தங்குமிட வசதிகள், மருத்துவ சேவைகள், நவீன வசதிகளுடனான நீச்சல் தடாகம் என்பனவும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## நிகழ்வுகள் இன்று

**சொற்பொழிவு**

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச இலக்கியக்குழு ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட இலக்கியச் சொற்பொழிவு நிகழ்வு மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ''பரத நாட்டியத்தின் படிமுறை வளர்ச்சியின் மூன்று [illegible] பொழிவை நிகழ்த்தவுள்ளார்.(த-14)

***

**கைத்திறன் போட்டி**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கைத்திறன் போட்டி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல் லூரியில் இடம்பெறும். (த-14)

***

**கலந்துரையாடல்**

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினூடாக நடத்தும் சங்கானைக் கோட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 2.30 மணிக்கு சித்தங்கேணி வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர் ஆகியோர் கலந்து கொள்வர். (த-14)

***

**கூட்டம்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வி.எஸ்.வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விரோதச் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு ஒத்துழைப்பு அவசியம்

## பிரதேச செயலர் கருத்து

கண்டாவளை, பெப்.15

சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பொது மக்கள் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பு மிக அவசியமாக உள்ளதாகக் கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவிப் பகுதியில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில், கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்டாவளைப் பிரதேசத்தில் பல்வேறு தேவைகளையுடைய மக்கள் உள்ளனர். இவர்கள் இந்த நடமாடும் சேவைகள் மூலம் பயனடைய வேண்டியவர்கள். அந்த வகையில் இந்த நடமாடும் சேவையானது மிகவும் பயனுள்ள ஒன்றாக அமைந்துள்ளது. இனியும் பொலிஸாரின் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

எமது பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி மிகவும் பரந்த அளவில் நடைபெறுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் முன்வர வேண்டும்.

உதாரணமாகக் கல்லாறு கிராமத்தில் அதிகளவான கசிப்பு உற்பத்தி காணப்பட்ட நிலையில், அங்கு பொலிஸாரால் அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு குழுவினால் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதுபோன்று ஏனைய இடங்களிலும் கசிப்பு உற்பத்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களினதும், பொலிஸாரினதும் முழுமையான பங்களிப்புத் தேவையாகவுள்ளது.

அத்தோடு குற்றச் செயல்கள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கு பல குடும்பங்களுக்குத் தெரியாத நிலை காணப்படுகின்றது.

மக்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் இடம்பெறுமாயின் பொலிஸாரிடமோ அல்லது உரிய அதிகாரிகளிடமோ, அணுகித் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவையானது, கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி புன்னைநீராவி அ.த.க.பாடசாலையில் இடம் பெற்றது.

இதில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகள், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுகள், ஆங்கில மற்றும் ஆயுள்வேத மருத்துவ சேவைகள், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாட்டுப் பதிவுகள் ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய சேவைகள் இடம்பெற்றன. (க-10-6)

பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகள், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுகள், ஆங்கில மற்றும் ஆயுள்வேத மருத்துவ சேவைகள், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாட்டு பதிவுகள் ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய சேவைகள் இடம்பெற்றன.

# மின்சார வசந்தம் எமக்கும் வேண்டும்

கிளிநொச்சி,பெப்.15

கிளிநொச்சி திருவையாறுப் பகுதிக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி திருவையாறுப் பகுதிக்கான மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், பிரதேச மக்களும் கூட்டாக இணைந்து பல்வேறு தரப்பினருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி திருவையாறுப் பகுதிக்கான மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச மக்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றினை கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் மாவட்ட அரச அதிபர், பொறியியலாளர். வடக்கின் வசந்தம், மின்சாரசபை வவுனியா, மின்சார சபை, கிளிநொச்சி ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் மேற்படி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தின் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட இப்பிரதேசத்துக்கு, கடந்த 1989 ஆம் ஆண்டு வரையான காலத்திலும், அதன் பின்னர் 2004ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையான காலத்திலும் மின்சார வசதியிருந்துள்ளது.

ஆனால் இன்று மீளக்குடியேறி இரண்டு ஆண்டுகளைத் தாண்டி விட்டது. ஆனால் மின்சார வசதிகள் எவையும் இல்லை. இந்த நிலையில் இப்பகுதிக்கான மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (க)

வடக்கின் வசந்தம், மின்சாரசபை வவுனியா மின்சார சபை கிளிநொச்சி ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பயிரழிவு

நெடுங்கேணி.பெப்.15

நெடுங்கேணிப் பிரதேசத்தில் சுமார் 50 ஏக்கர் வரையான நெற் பயிர்கள் நீரின்றி அழிவடைந்து வருகின்றன.

ஒதிய மலை, எருக்கலம் புலவு வயல்வெளிகளிலேயே இவ்வாறு பயிர்கள் வரட்சி காரணமாக அழிவடைந்து வருகின்றன.

இதனால் தாம், வங்கிகளிலிருந்து பெற்ற கடனை எவ்வாறு மீளளிப்பது என்ற கவலையில் விவசாயிகள் ஆழ்ந்துள்ளனர். (க-435)

## எப்படி இருந்த இடம் இப்போது....!



பரந்தனில் அமைந்துள்ள பஸ் நிலையம் மேற்கூரையின்றி மோசமான நிலையில் காணப்படுகின்றது. (121)

# மின்வசதி இல்லாத முல்லைக் கிராமங்கள்

முல்லைத்தீவு, பெபப்.15

முல்லைத்தீவு மாவட்டம் முத்துஐயன்கட்டு, பேராறு, கற்சிலைமடு ஆகிய கிராமங்கள் தொடர்ந்தும் மின்வசதி பெறாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இங்கு சுமார் ஆயிரத்து 500 குடும்பங்கள் வசிக்கின்றன. தொழிற்சாலைகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

மேலும் சுமார் 12இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் கணினி வசதிகளைக் கொண்டிருந்தபோதிலும் மின்சார வசதி இல்லாததால், மின் பிறப்பாக்கியை உபயோகிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கருவேலன்கண்டல் கிராமத்துக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இங்கு சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# வசதிகள் இல்லாததால் நோயாளர்கள் அவதி

அக்கராயன்.பெப்.15

மல்லாவி மருத்துவமனையில் ஆய்வுகூட வசதிகள், எக்ஸ்ரே வசதிகள் இல்லாததால் நோயாளிகள் பிற இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

டெங்கு, மலேரியா ஆகிய அபாயகரமான நோய்கள் பரவி வருகின்ற நிலையில் இங்கு ஆய்வுகூட வசதிகள் இல்லாமை பெரிய குறைபாடாகவே உள்ளது. இதனால் நோயாளர்கள் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர்.

மேலும் எக்ஸ்ரே வசதிகளும் இங்கு இல்லாததால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (க-410)

# இப்படியும் ஒரு மாற்றம்

மன்னார்.பெப்.15

மன்னாரில் எரிபொருள் நிலையங்களில் வாடிக்கையாளர்களை அதிகளவில் காண முடியவில்லை.

வழக்கமாக, மன்னார் நகரில் இயங்கி வருகின்ற மூன்று எரிபொருள் நிலையங்களிலும் மக்கள் அதிகளவில் காணப்படுவர்.

ஆனால் எரிபொருள்களின் விலைகள் என்றுமில்லாத அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால் வாடிக்கையாளர்களின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

முச்சக்கர வண்டிகள், கார்கள், மோட்டார் சைக்கிள் என்பனவற்றுக்குப் பெற்றோல் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆனால் மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு வருவோரின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. (க-12)

முச்சக்கர வண்டிகள், கார்கள், மோட்டார் சைக்கிள் என்பன வற்றுக்குப் பெற்றோல் பெற்றுக் கொள்ளப் படுகின்றது.

## மோசமான நிலையில் விளையாட்டு மைதானம்

மன்னார் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது விளையாட்டு மைதானம் மோசமான நிலையில் காணப்படுவதால், போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்வதில் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

மன்னார் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள இந்த விளையாட்டு மைதானம் துப்புரவு செய்யப்படாத நிலையில் மோசமாகக் காணப்படுகிறது. அத்துடன் மலசலகூடம் பாவனைக்கு உதவாத வகையில் மிகவும் சுகாதாரச் சீர்கேடான தோற்றத்துடன் காணப்படுகிறது.குடிதண்ணீர் வசதியும் இந்த மைதானத்தில் இல்லை.

தற்போது பாடசாலைகள் மற்றும் பொது விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள்,இளைஞர்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர்.

மன்னார் நகரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த விளையாட்டு மைதானத்தை சீர்படுத்தி வழங்குமாறு விளையாட்டு ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-14)

# பிள்ளைகள் வீட்டில் நிற்பதை பெற்றோர் அனுமதிக்கக் கூடாது

## கோட்டக் கல்விப் பணிப்பாளர் உரை

முல்லைத்தீவு,பெப்.15

பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் நிற்பதைப் பெற்றோர்கள் அனுமதிக்கக் கூடாது - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பங்கயற்செல்வன்.

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கற்சிலைமடுவை அண்டிய கிராமங்களில் வசிக்கின்ற மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் செல்வது அதிகரித்துக் காணப்படுகின்றது. 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் எந்தக் காரணம் கொண்டும் பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் நிற்பதைப் பெற்றோர்கள் அனுமதிக்கக் கூடாது.

வழக்கமாக இந்தப் பிரதேசத்திலிருந்து உத்தியோகத்தர்களினதும், வசதி படைத்தவர்களினதும் பிள்ளைகளே பல்கலைக்கழகங்களுக்குச் சென்று வந்தனர். ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. குக்கிராமங்களைச் சேர்ந்த சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் பல்கலைக் கழகங்களுக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

இந்தப் பாடசாலை வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

நாம் இந்தப் பகுதியிலுள்ள இரண்டு பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கெனத் தெரிவு செய்துள்ளோம். அவை கற்சிலைமடு அ.த.க. மற்றும் திருமுறிகண்டிப் பாடசாலை என்பனவாகும்.

க.பொ.த. உயர்தரத்தில் கற்சிலைமடுவும், தரம் 5 புலமைப் பரீட்சையில் ஆறுமுகம் வித்தியாலயமும் முன்னணியில் உள்ளன. இது எமக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

வசந்தபுரம் கிராமத்திலிருந்து கூட, ஒரு பிள்ளை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். இந்தப் பிரதேசத்தைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள்தான் வசந்தபுரத்தைப் பற்றி அறிவார்கள்.

மேலும் எதிர்காலத்தில் இந்தப் பாடசாலை மேலும் வளர்ச்சியடைந்து சாதனைகள் ஈட்டுவதற்கு, எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு பாடசாலைகளை, அபிவிருத்தி செய்வதற்கெனத் தெரிவு செய்துள்ளோம். அவை கற்சிலைமடு அ.த.க. மற்றும் திருமுறிகண்டிப் பாடசாலை என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையங்களில் முண்டியடித்த நுகர்வோர்

யாழ்ப்பாணம்,பெப்.15

எரிபொருள்களின் விலைகள் அரசினால் அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தில் யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களுக்கு நேற்றுக் காலை முதல் நுகர்வோர் படையெடுத்தனர்.

எரிபொருள் விலையேற்றம் அத்தியாவசிப் பொருள்களினது விலைகளிலும் தாக்கத்தைச் செலுத்தும் எனத் தெரிந்துகொண்ட நுகர்வோர் நேற்றுக் காலையிலேயே பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக நிலையங்களை அவசர அவசரமாக நாடினார்கள்.

இதனால் நேற்றுப் பல வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் பெரும் சனக்கூட்டம் காணப்பட்டது. குறிப்பாக யாழ்.நகரப் பகுதியிலுள்ள அத்தியாவசியப் பொருள் விற்பனை நிலையங்களுக்கு முன்னால் பொதுமக்கள் கூடினர். அவர்கள் அத்தியாவசியப் பொருள்களான கோதுமை மா, சீனி, அரிசி, தேங்காய் எண்ணெய், சமையல் எண்ணெய் ஆகியன உட்பட முக்கிய பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர்.

சில தினங்களில் இந்தப் பொருள்களின் விலைகளில் பெரும் அதிகரிப்பு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்தனர்.

ஆயினும் சில விற்பனை நிலையங்களில் அத்தியாவசியப் பொருள்கள் முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் சில கடைகளில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

இதனால் தாம் நினைத்தவாறு குறைந்த விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியவில்லை என நுகர்வோர் தெரிவித்தனர். (த-17)

## திருநெல்வேலியில் மரக்கறி விற்பனை மேல்மாடியில்

யாழ்ப்பாணம்,பெப்.15

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி விற்பனைப் பகுதி புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டடத் தொகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி தைப்பூசத் தினத்தன்று திறந்து வைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தொகுதியின் மேல்மாடியில் இப்போது மரக்கறி விற்பனைப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மரக்கறி விற்பனை முன்னர் சந்தையின் கீழ்மாடிக் கட்டடத்திலேயே நடைபெற்று வந்தது.

இந்தப் புதிய மாடிச் சந்தையின் நடைபாதைகளில் பொதிகளை வைக்கவோ, மரக்கறி விற்பனையை மேற்கொள்ளவோ கூடாது என வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மரக்கறி விற்பனைக்கெனச் சந்தையின் கட்டடத்தில் விசேடமாக மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மேடைத் தளங்களில் வைத்தே மரக்கறி விற்பனை இடம்பெறவேண்டும். அதனைவிட சந்தைப் பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்கும் கொள்கலன் கள் வைக்கப்பட்டுள்ளன. (த-17)

## வேலை தேடுவோர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம்.பெப்.15

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் கல்வி கற்று வேலையற்ற நிலையில் இருக்கும் இளைஞர், யுவதிகளின் விவரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எனவே வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பப்படிவங்களை கிராம சேவையாளரிடம் பெற்று, பூரணப்படுத்தி மீள படிவங்களை கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.



சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் அண்மையில் குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது. இதில் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினார்கள். (த-9)

## வட்டு கலட்டி வீதிக்கு குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.15

வட்டுக்கோட்டை கலட்டி வீதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் மாவட்ட பொறியியலாளர் எந்திரி.எஸ். செல்வகுமார் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்காக நிலத்தடிக் குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

வலி.மேற்குப் பிரதேச சபை வருமான அதிகாரி ரி.எஸ்.சிறிகாந்தன் எடுத்த முயற்சியைத் தொடர்ந்தே இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதேவேளை குடிதண்ணீர் விநியோகக் குழாய்களைப் பொருத்துவதற்காகத் தோண்டப்படும் கற்களை வட்டுக் கோட்டை பொதுச் சந்தையின் பாவனைக்குப் பயன்படுத்தவும். வலி.மேற்கு பிரதேச சபை சுகாதாரத் தொழிலாளர்களை இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவி திருமதி நா.ஐங்கரன் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## செயலிழந்தது கடிகாரம்

யாழ். மணிக்கூட்டு கோபுரத்தின் டிஜிற்றல் கடிகாரம் மீண்டும் செயலிழந்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு முதல் நாள் இரவிரவாக இந்த கடிகாரம் இயங்கச் செய்யப்பட்டது.

இயங்கவைக்கப்பட்டு ஒரு வாரம் கடந்த நிலையில் அது மீண்டும் செயலிழந்து விட்டது. இந்தக் கடிகாரம் சில நாள்கள் இயங்குவதும் பல நாள்கள் பழுதடைவதும் வழமையாகி விட்டது என்கின்றனர் பொது மக்கள் . (த-17)

## ‘காப்பெற்’ வீதிகளுக்கு குறியீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.நகரப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட ‘காப்பெற்’ வீதிகளுக்குப் பாத சாரிக் கடவைகள், குறியீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வின்சர் தியேட்டர் சந்தியில் இருந்து மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தி வரை ‘காப்பெற்’ வீதிக்குக் குறியீடுகள் வரையப்பட்டுள்ளதுடன் பாதசாரிக் கடவைக்கான மஞ்சள் கோடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு முன்பாகவும் வீதிக் கடவைகள் பொறிக்கப்பட்டு வருகின்றன.

நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் ‘காப்பெற்’ வீதிகளுக்கும் இந்தக் குறியீடுகள் வரையப்படவுள்ளன. (த-17)

## இ.போ.ச. பஸ் சேவையை மாவிட்டபுரம் வரை நடத்துக

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்ப்பாணத்தில் இருந்து மாவிட்டபுரம் வரை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையை நடத்துவதற்கான நடவடிக்கைகளை இ.போ.ச.யாழ். பிராந்திய அலுவலகம் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை வரையே தற்போது இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் மாவிட்டபுரம் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் யாழ்.நகருக்குத் தமது கடமைகளுக்காகவும் பாடசாலைகளுக்காகவும் வருவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் கீரிமலைப் புனித தீர்த்தக்கேணிக்குத் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் செல்கின்றார்கள்.

தற்போது தெல்லிப்பழை வரையுமே பஸ் சேவை நடைபெறுவதால் அங்கிருந்து மாவிட்டபுரம் வரை நீண்டதூரம் பயணிகள் நடந்து செல்லவேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு மாவிட்டபுரம் வரை பஸ் சேவையை நடத் துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-7)

## நயினாதீவுக்கு ஜெனரேற்றர்

யாழ்ப்பாணம்.பெப்.15

நயினாதீவுப் பிரதேசத்துக்கு விரைவில் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்திற்கு முழு மையான மின்சாரத்தை வழங்குவதற்காக வலுக் கூடிய ஜெனரேற்றர் ஒன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேற்றரை நயினாதீவுக்கு எடுத்துச் சென்று பொருத்தி மின் விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நயினாதீவு பிரதேசத்திற்குச் சுழற்சி முறையிலேயே மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. (த-17)

## மீன் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

குடாநாட்டுச் சந்தை களில் நேற்று கடலுணவுகளின் விலைகள் அதிகரித்திருந்தன.

கடந்த சில நாள்களாகக் குறைந்து காணப்பட்ட கடலுணவுகளின் விலைகள் நேற்றுத் திடீரென அதிகரித்திருந்தன.

டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் தாம் மீனின் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக மீன் வியாபாரிகள் தெரிவித்தனர்.

பெரும்பாலான மீனவர்கள் தற்போது இயந்திரப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கு டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் தாம் மீனின் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலை.**

இவற்றின் விலை அதிகரித்ததால் கடலுணவுகளின் விலைகளையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக மீனவர்கள் கூறினார்கள். நேற்றுச் சந்தைகளில் கடலுணவுகள் அதிக விலை[illegible] அவதானிக்க முடிந்தது. (த-17)

## 5 லட்சம் ரூபா மோசடி சந்தேகநபர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,பெப்.15

லண்டனுக்கு அனுப்புவதாக்கூறி 5லட்சம் ரூபா பெற்று மோசடிசெய்த கண்டியைச் சேர்ந்த நபர் யாழ். நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு தொகைப் பணத்தை உரியவருக்குச் செலுத்தி னார். மிகுதித் தொகையை அடுத்த முறை செலுத்தி முடிக்குமாறு மன்று உத்தர விட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் மீள விசாரணைக்கு வந்தது. யாழ்.விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த ஓகஸ்ட் மாதமளவில் கண்டியைச் சேர்ந்த சந்தேகநபர் யாழ்.இளைஞர்களிடமிருந்து 5 லட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

வவுனியாவில் இயங்கி வரும் தனியார் முகவர் நிலையம் ஒன்றில் கடமையாற்றியபோதே இந்த மோசடி இடம்பெற்றிருந்தது. (த-4)

## கணினி திருட்டு மூவர் கைது

வடமராட்சி. பெப். 15

பட்டப் பகல் வேளையில் பூட்டியிருந்த வீட்டுக்குள் இருந்து கணினியை திருடிய சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ளனர்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ப.செல்வராசா என்பவரது வீட்டில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி ஆரம்பப் பாடசாலைகள் மூடப்படவேண்டிய அபாய நிலை

## போதிய மாணவர்கள் சேர்க்கப்படாமையே காரணம்

அச்சுவேலி, பெப். 15

அச்சுவேலிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைகளில் போதிய மாணவர்கள் இணைக்கப்படாமையால் அவை மூடப்பட வேண்டிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பாடசாலைகளின் நிலை, எதிர் காலம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த பாடசாலைச் சமூகத்தின் முறையீடு தொடர்பாக ஆளுநர் யாழ். வலயக்கல்வி அலுவலகத்திடம் அறிக்கை கோரியிருப்பதால் யாழ். வலயக் கல்வி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பாடசாலைச் சமூகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அச்சுவேலிப்பகுதியில் கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் இந்த வருடம் தரம் 1 வகுப்பில் ஒற்றை இலக்க எண்ணிக்கையிலேயே மாணவர்கள் சேர்ந்துள்ளனர். பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் 06 மாணவர்களும், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலையில் 6 மாணவர்களும், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் 09 மாணவர்களும் தோப்பு அருள்நந்தி வித்தியாசாலையில் 09 மாணவர்களும் சேர்ந்துள்ளனர்

இதேநேரம் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் 110 மாணவர்களும், அச்சுவேலி மத்திய கல்லூரியில் 85 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அச்சுவேலி நகரப்பகுதியில் அமைந்துள்ள இரண்டு பெரிய பாடசாலைகளிலும் மூன்று, நான்கு பிரிவுகளுக்குத் தேவையான மாணவர்கள் சேர்த்துகொள்ளப்பட்டிருப்பதால் கிராமப் புறத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகி இருப்பதோடு எதிர்காலத்தில் 50 க்கு குறைந்த பிள்ளைகள் கற்கும் பாடசாலை என்று தரத்துக்கு இறக்கம்செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்தப்பாடசாலைகளை மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பதாக நூற்றுக்கணக்கான கையொப்பங்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அடுத்துப் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் யாழ். வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் யாழ். கல்வி வலயத் திட்டமிடல் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன், கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராசலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் சிறிய பாடசாலைகளை மாற்றாந் தாய் மனப்பான்மையோடு திட்டமிட்ட வகையில் புறக்கணிப்பதாகவும் இந்த விடயத்தில் இதுவரை காலமும் வலயக் கல்வித் திணைக்களம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கேட்கப்பட்டதோடு இந்தச் சூழ்நிலையில் அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவை புதிய பாடசாலையாக்க வேண்டியதன் அவசியம் என்ன? என்றும் வினாவப்பட்டது.

பெற்றோரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை நியாயப்படுத்தி மறுதலிக்க முடியாத நிலையில் எதிர் காலத்தில் இத்தகைய தவறுகளைத் தவிர்ப்பதோடு அதனைக் கருத்தில் கொண்டு திட்டமிட்ட முறையில் செயற்படுவதாகக் கல்வி அதிகாரிகள் உறுதி அளித்தனர். (த-11)

## கொல்லப்படும் தமிழ்

யாழ்ப்பாணம், பெப்.15

யாழ். நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில் காப்புறுதி நிறுவனம் ஒன்றால் நிறுத்தப்பட்டுள்ள இடப் பெயர்ப் பலகை எழுத்துப் பிழைகளுடன் நிறுத்தப்பட்டுள்ளது.




குறித்த வீதியில் நிலாவரைக் கிணற்றுக்குச் செல்லும் இடக்குறியீட்டில் 'நிளாவரைக்கிணரு' எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியைக் கொச்சைப்படுத்தும் வகையில் தனியார் நிறுவனங்கள் தமது விளம்பரத்துக்காக எழுத்துப் பிழைகளுடன் கூடிய பெயர்ப் பலகைகளை முக்கிய சந்திகளில் நிறுவுவது குறித்துக் கல்விச் சமூகம் பெரும் விசனம் தெரிவித்துள்ளது. இந்த விளம்பரப் பலகைகள் அதிகம் தென்னிலங்கையில் தயாரிக்கப்படுவதாலே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சிங்கள மொழியிலுள்ளதை தமிழ்மொழிக்கு மாற்றும் போதே எழுத்துப் பிழைகள் அதிகம் உண்டாகக் கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்றன. இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-14)

## குறுக்கு வீதிகளுக்கும் தார்

யாழ்ப்பாணம்,பெப்.15


கொழும்புத்துறை மணியந் தோட்டம் குறுக்கு வீதிகளையும் தார் வீதிகளாக புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது மணியந்தோட்டம் சந்தியில் இருந்து 11 ஆம் குறுக்கு வரையான வீதி தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட முதலாம் குறுக்கு வீதியிலிருந்து 11 ஆம் குறுக்கு வீதி வரையான பகுதியும் தார் ஊற்றிப் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு வசதியாக வீதியை அளந்து மதிப்பிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்த வீதியையும் தார் ஊற்றிப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு மணியம் தோட்டம் பகுதியில் உள்ள அனைத்துக் குறுக்கு வீதிகளும் கட்டம் கட்டமாகத் தார் ஊற்றி புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக மேலும் கூறப்பட்டது. குறுக்கு வீதிகளுக்கு தார் ஊற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அந்த வீதிகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் அப் பகுதி மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். புனரமைப்புக்கு வசதியாக இவர்கள் இந்தப் பணியை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)



நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சன சமூக நிலையத்தின் பவளவிழாவையொட்டி வன்னியில் போரினால் பெற்றோரை இழந்த மாணவி ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சமூகஜோதி ந.சிவசுப்பிரமணியம் ஆகியோர் சைக்கிள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்குகின்றனர். (த)

## ரூ.3,000 அபராதம்

கோண்டாவில் பொது இடத்தில் அநாகரிகமாக நடந்து கொண்ட இளைஞருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் 6 பேர் தொடர்புபட்டிருந்தனர். அவர்களில் முதல் ஐந்து பேரும் மன்றினால் தண்டிக் கப்பட்டிருந்தனர். 6ஆவது சந்தேக நபரான இவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். விசாரணையின் போது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து சந்தேக நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

## வல்வெட்டித்துறை ஊடாக சீரான முறையில் பஸ்சேவை

வடமராட்சி,பெப்.15

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஊடாக ஒரு மணி நேரத்துக்கு ஒரு பஸ் இரு வழிப்பாதைகளில் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருவதாக பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்தார்.

இதேவேளை, நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அரைமணி நேரத்துக்கு ஒரு பஸ் இரு வழிப் பாதையிலும் சேவையிலீடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (த-8)

## மண்டைதீவுப் பிரதேசத்துக்கு சுன்னாகத்தில் இருந்து மின்

யாழப்பாணம் பெப்.15

சுன்னாகத்தில் இருந்து மண்டைதீவுப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்திற்கு மின்இணைப்பு வழங்குவதற்கு மின்கம்பங்கள் நாட்டப்பட்டதுடன் இணைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஜெனரேற்றர் ஒன்றை இப்பிரதேசத்தில்பொருத்தி அதன் மூலம் மின்சாரம் வழங்குவதற்கும் முன்னர் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் அந்த நடவடிக்கை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அமுல்படுத்தப்படவில்லை. இதனால் இப்பிரதேச மக்கள் இரவில் இருளிலேயே பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது. கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் வருகை தந்த மின் சக்தி அமைச்சரிடமும் மின்சார விநியோகம் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. இப்பகுதிக்கான மின்விநியோகத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்து விட்டுச் சென்றார் .

இதனை அடுத்து சுன்னாகத்தில் இருந்து பண்ணை, மண்டைதீவுக்கு மின்விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## தனியார் பஸ் சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம்.பெப்.15

யாழ்.குடாநாட்டில் நேற்றுத் தனியார்பஸ்சேவை கள் அனைத்தும் வழமைக்குத் திரும்பின.

நேற்று முன்தினம் சகல தனியார் பஸ்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் போக்குவரத்துச் சேவைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து நாடு முழுவதும் தனியார் சேவைகள் நேற்று முன்தினம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டன. இந்த பகிஷ்கரிப்புக் கைவிடப்பட்டதை அடுத்து நேற்று மாலை சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பின. (த-17)

## நகர அபிவிருத்தி மையம் வல்வையில் அங்குரார்ப்பணம்

வடமராட்சி, பெப். 15

வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு 1989ஆம் ஆண்டு தயாரித்த வல்வை நகர அபிவிருத்தித் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு வல்வெட்டித்துறை நகர அபிவிருத்தி மையம் செயற்படும் என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையின் கல்வி, பொருளாதாரம், நகர உட்கட்டுமானம், விளையாட்டுத்துறை, கலை, பண்பாடு, பொழுதுபோக்கு அம்சங்கள், கைத்தொழில் துறை, ஆன்மிகம் போன்றவற்றில் உயர் நிலை அடைந்து, மக்களுக்கு நிரந்தரமான ஒரு வாழ்வை ஏற்படுத்தும் வகையில் வல்வை நகர அபிவிருத்தி மையம் என்ற பெயரில் அமைப்பு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை வடமராட்சி வடக்கு முன்னாள் பிரதேச செயலரும், வல்வையின் சமூக சேவையாளருமாகிய வை.வேலும்மயிலும் தெரிவித்தார்.

நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த



நிகழ்வில் முப்பதுக்கு மேற்பட்ட புத்திஜீவிகள், சமூக சேவையாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்த அமைப்பின் தலைவராக வை.வேலும்மயிலும், உப தலைவராக வங்கி முகாமையாளர் கோ.சற்குணபாலன், செயலாளராக முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா, உப செயலாளராக ஆசிரியர் சி.ஜெகப்பிரதாபன், பொருளாளராக க.பிரகலாதன் (ஆதவன்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் இணைந்து செயற்படக்கூடிய வகையில் வல்வை நகரப் பகுதியில் ஒவ்வொரு பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக 15 அங்கத்தவர்கள் தெரிவாகியுள்ளனர். இவர்களுடன் நகரசபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்களினது ஆலோசனைகள் வழிகாட்டலும்பெற்று ஒருங்கிணைந்த அபிவிருத்தியுடன் வல்வெட்டித்துறையைக் கட்டியெழுப்பவுள்ளதாக அமைப்புக் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை முன்னெடுத்துவரும் செயற்றிட்டங்களுக்கு ஆதரவு வழங்கி அவற்றைச் செயற்படுத்துவதற்கான நிதி உதவி, தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கும் வகையில் இந்த அமைப்பின் செயற்பாடுகள் அமையும் எனத் தெரிவித்தார் செயலாளர் சுந்தரம் டிவகலாலா. (த-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாட்டைக் கொன்ற நபருக்கு அபராதம்

அம்பாறை,பெப்.15
அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி, சவளக்கடை பிரதேசத்தில் இறைச்சிக்காக பசுமாடு ஒன்றைக் கொலை செய்த ஒருவருக்கு 2,000 ரூபா அபராதம் விதித்துக் கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

பசுமாடு ஒன்றை இறைச்சிக்காக அறுத்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இந்த நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, நீதிவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன் கைப்பற்றப்பட்ட 50 கிலோ இறைச் சியை உடனடியாக அழிக்கு மாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.


கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரின் 119 என்ற அவசரசேவை தொலைபேசிக்கு கிடைத்த தகவலை அடுத்து சவளக்கடை மாடு அறுக்கும் மடுவத்தை பொலிஸார் சுற்றிவளைத்து சோதனையிட்டனர். (ச)

## சிறப்பான சேவைகள் வழங்கப்படும்

கண்டி,பெப்.15
கண்டியிலுள்ள உதவி இந்திய தூதுரகத்துக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தருகின்றவர்கள் உரியவகையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கண்டி உதவி இந்திய தூதர் ஏ.நடராஜ் தெரிவித்தார்.

கண்டி உதவி இந்திய தூதரகத்துக்கு விசா பெறுதல் உட்பட பல்வேறு தேவைகளுக்கு வருகை தருகின்றவர்களுக்கு எமது தூதரகத்தின் ஊடாக தொடர்ந்து சிறப்பான சேவைகள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# காணிப் பிரச்சினைக்காக பிக்கு உண்ணாவிரதம்




**கிழக்குக்கு ஜனாதிபதி பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவரை அனுப்பிவைத்து காணிப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் உத்தரவாதமளிக்க வேண்டும்.**

கொழும்பு,பெப்.15
மட்டக்களப்பு மங்களராம ரஜமஹா விகாரையின் விகாராதிபதி அம்பிற்றிய சுமண ரத்தினதேரர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்குமாறு கோரியும் கிழக்கு மாகாணத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஏழை மக்களுக்கு பொறுப்புடன் செயற்பட வேண்டிய அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற பழிவாங்கல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதியின் தலையீட்டை வலியுறுத்தியும் தேரர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் மூவின மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்த்துவைக்குமாறும், இதற்காக ஜனாதிபதி பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவரை அனுப்பி வைத்துக் காணிப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் உத்தரவாதமளிக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந்த உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சில சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் பதாகைகளைத் தாங்கியவாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். உண்ணாவிரதம் நடைபெறுகின்ற இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.திஸாநாயக்கவிடம் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மனு ஒன்றையும் தேரர் கையளித்துள்ளார். (ச-21-31)

## கஞ்சா சேனையுடன் மூவர் கைது

மட்டக்களப்பு,பெப்.15
வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பல்லத்துச்சேனை பகுதியில் சேனைப்பயிர் செய்கையுடன் சேர்த்து செய்கை பண்ணப்பட்ட கஞ்சாசேனையை வாழைச்சேனைப் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கண்டுபிடித்துள்ளனர். இதன் போது, சந்தேகத்தின் பேரில் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, இந்தப் பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் செய்கை பண்ணப்பட்ட கஞ்சாச் செடிகளை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்களையும், கஞ்சா செடிகளையும் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ. ஜயவீர தெரிவித்தார். (ச)



இலங்கைக்கான சவூதி அரேபியா நாட்டுத்தூதர் ஸலாஹ் அல் பிறாக் நேற்று செவ்வாய்க்கிழமை காத்தான்குடிக்குச் சென்று புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் அமைக்கப்படவுள்ள கட்டட நிர்மாணத்துக்கான வரைபடத்தை பார்வையிட்டார்.

## பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

**அரசின் தனியார் பல்கலைக்கழக கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

கண்டி,பெப்.15
பேராதனை பல்கலைக் கழகக்கலைப்பீட மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளதாக கலைப்பிரிவு மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

கலைப் பிரிவு மாணவர் சங்க தலைவர் நுவன் சமீரவுக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடையை நீக்கக் கோரியும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மூவரை விடுதலை செய்யக் கோரியுமே மாணவர்கள் இந்த வகுப்பு ,பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழக கல்லூரிக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் தனியார் பல்கலைகழகக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# புதிய சட்டத்தை தோற்கடிக்க அனைவரும் இணைக!

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோருகிறார்

**இன, மத, கட்சி பேதமின்றி அனைவரும் இணைந்து மக்களின் காணி அபகரிப்புக்கான இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்.**

கொழும்பு,பெப்.15
நாடு நகர திட்டமிடல் சட்டத்தை தோற்கடிக்க அனைத்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களையும் ஒன்றுபடுமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மாசிலா மணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

நாடு நகரத் திட்டமிடல் சட்டம் என்ற தலைப்பில் இந்த அரசினால் காணி அபகரிப்புச் சட்டம் மீண்டும் எம்முன் கொண்டுவரப்பட்டுள்ளது. மீண்டும் உயிர்த்தெழுப்பப்பட்ட இச்சட்ட மூலம் எந்த ஒரு காணியையும் அரசு தான் விரும்பும்போது ஒரு சட்ட அறிவித்தல் மூலம் பொருளாதார, சமூக, சரித்திர, சுற்றாடல், புனித இடமாக முக்கியத்துவமான தாக் காட்டி அதை சுவீகரிக்க முடியும்.

இன, மத, கட்சி பேதமின்றி எமக்காக அல்லாமல் நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் சோகம் நிறைந்த அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளிவைத்து அவர்கள் வசமுள்ள காணிமற்றும் சொத்துக்களைக் காப்பாற்ற அடக்கு முறைகளுக்கும் சலுகைகளுக்கும் அப்பாற் சென்று ஒருமித்து இந்த சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்.

இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபொழுது காணி மாகாண சபைகளுக்காக இலங்கை யாப்பின் மூலம் பிரித்தொதுக்கப்பட்ட தலைப்பாக இருப்பதால், முதலில் இந்தச்சட்ட மூலம் மாகாண சபைகளின் ஒப்புதலை பெறவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கிழக்குமாகாண சபை தம் மக்களின் நலனுக்காக அரசுக்குச் சவாலாக இந்தச் சட்டமூலத்தை நிராகரிக்குமென அரசு திடமாக நம்புவதால் அவசர அவசரமாகப் பல தந்திரங்களைக் கையாண்டு கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தி இதற்கான ஒப்புதலைப் பெற ஆராயப்பட்டுள்ளது.

எமது ஒப்புதலைப் பெறுவதற்காக சட்டத்துக்குப் புறம்பான முறையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு எம்மை நிர்ப்பந்திக்கக்கூடும். கடந்த காலங்களில் இவற்றை நாம் கண்டிருக்கிறோம்; அனுபவித்திருக்கின்றோம்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால் யாப்பு மூலம் எமக்கு அளிக்கப்பட்டிருந்த காணி அதிகாரம் அனைத்தையும் அரசுக்கு அடிமைச் சாசனம் எழுதி மக்கள், மற்றும் அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் அரசுக்கு தாரைவார்த்து கொடுத்த துரோகிகளாவோம்.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுமானால் கிழக்கு முதல் மேற்கு வரை, வடக்கு முதல் தெற்கு வரை உள்ள காணிகள் சிங்களவர், தமிழர், முஸ்லிம் எவருக்கு சொந்தமானாலும் ஏழைகளின் சில பேர் காணி முதல் பணக்காரர் வசமுள்ள பல ஏக்கர் காணிகள் வரை அரசு இலகுவில் கைப்பற்றும் அபாயமுள்ளது.

இந்த அரசின் முக்கியமானவர்களின் காணிப் பசிக்கு தீனிபோட இந்த அரசு எதை வேண்டுமானாலும் செய்யும். 100 வருடங்களுக்கு மேலாக கொழும்பில் தொழிற்பட்டு வரும் நீதிமன்றத் தொகுதியை அரசு வேறு இடத்துக்கு மாற்றத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த இடம் துப்புரவு செய்யப்பட்டு இந்தியர்களுக்கோ, சீனர்களுக்கோ விற்கப்படலாம்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அண்மையில் கட்டடங்கள் எரிக்கப்பட்டமை சிறைச்சாலை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டும் அதனைச் சீனாவுக்கு விற்பதற்காகவும் கூட இருக்கலாம்.

எனவே, இவ்வாறான தொரு சட்டமூலமே இல்லாத காலத்தில் கூட கொழும்பு இராணுவத் தலைமையகம் சீனருக்கு கொடுக்கப்பட்டது. தனியாருக்கு சொந்தமான காணிகள் வகை தொகையின்றி அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. அதைவிட அதிவேகப் பாதை அபிவிருத்தி, புதிய விமானநிலைய அபிவிருத்தி, புதிய துறைமுக அபிவிருத்தி என்று எண்ணிலடங்கா ஏழைகளின் நிலம் கைப்பற்றப்பட்டது. ஆனால் இதுவரை அவர்களுக்கு எதுவித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை.

இந்தச் சட்ட மூலம் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான சட்ட மூலமாக இருப்பதனால் கிடைக்கும் அற்ப சலுகைகளை துச்சமாக நினைத்து மக்களின் அவலநிலையை மட்டும் கருத்திற்கொண்டு நாம் ஒற்றுமையுடன் சகல பேதங்களையும் களைந்து இச்சட்டமூலத்தை தோற்கடிக்க வேண்டியநிலை உருவாகியுள்ளது- என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
30-02-1929

மறைவு
01-02-2012

## அன்னப்பிள்ளை சொர்ணவடிவேல் (மாசிலாமணி)

*அன்புக்கும், பண்புக்கும் உறைவிடமாய் இருந்தீர்
அனைவருக்கும் இல்லையெனாது அள்ளி அள்ளிக்
கொடுத்தீர் பொறுக்க முடியாமல் காலனும் வந்து
காவு கொண்டானோ. ஆறாது உங்கள் பிரிவு எந்நாளும்.*

**உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

01.02.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் செய்தியைக் கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் இரங்கலும், ஆறுதலும் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (15.02.2012) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.** (14490) (6,7,10) **குடும்பத்தினர்.**

# 22 லட்சம் ரூபா மோசடி: குடும்பஸ்தருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம், பெப்.15

மன்னாரைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரை இத்தாலிக்கு அனுப்பி வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 22 லட்சம் ரூபா பெற்று பண மோசடி செய்த குடும்பஸ்தர் மீது தொடரப்பட்ட வழக்கில் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இந்த வழக்கை யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர். நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புத்தளத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கடந்த ஒன்றரை மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். சந்தேக நபரின் சார்பில் செய்யப்பட்ட சமர்ப்பணங்களையடுத்து பிணை உத்தரவு வழங்கப்பட்டது. ரொக்கப்பிணையிலும் மூன்று ஆட் பிணையிலும் சந்தேகநபர் விடுவிக்கப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனும் முறைப்பாட்டாளர் தரப்பில் பொலிஸாருடன் சட்டத்தரணி எஸ். செலஸ்ரீனும் முன்னிலையாகியிருந்தனர்.


RE

## உங்கள் முச்சக்கரவண்டி பஜாஜ் ஆக இருக்கவேண்டியது



# ஏன்?

செலவு - மிகக்குறைவு!
எரிபொருள் சேமிப்பு - மிகக் கூடியது!
சத்தம் - மிகக்குறைவு!
சேமிப்பு - மிகக் கூடியது!
தொழிற்பாடு - மிகவும் சிறந்தது!
பாவனைக்காலம் - மிகக் கூடியது!
மீள் விற்பனைப் பெறுமதி - மிகக் கூடியது!
உதிரிப்பாகங்களின் விலை - மிகக்குறைவு!
விற்பனை வலையம் - மிகப்பெரியது!
சேவை முகவர் வலையம் - சிறந்த தொழிற்பாடுடையது!
பூரண நம்பிக்கை - மிகக் கூடியது!
முற்கொடுப்பனவு - மிகக்குறைவு!

முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்யும் போது நீங்கள் எதிர்பார்க்கும் எல்லா நடவடிக்கைகளும் அதியுயர் மட்டத்தில் உள்ளது பஜாஜ் முச்சக்கரவண்டி மட்டுமே என்பது இப்பொழுது உங்களுக்கே புரிந்திருக்கும்.

tradlanka

விலை ரூ. 340,125/=
மேற்குறித்த விலை VAT உள்ளடக்கப்படாததோடு, முன்னறிவிப்பு எதுவுமின்றி மாறுபடலாம்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
த.பெ. 1909,75, ஹைட்பார்க் கோணர், கொழ[illegible]
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: http://www.dpmco.com


### வாகனம் விற்பனைக்கு

709 டாட்டா வாகனம் அலுமினியம் பொடியுடன் விற்பனைக்குண்டு.
யாழ்ப்பாணம், 310 A, ஆஸ்பத்திரி வீதி,
சிறிசக்தி ஸ்ரோர்ஸ்.

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், சைவ போசனம் 7 இல் செவ்வாய், இளமையான தோற்றமுள்ள 1975 ஆம் ஆண்டு, திருவாதிரை, 5' 5'' உயரம், அரச உத்தியோகம், பட்டதாரி அழகான மணமகளுக்கு, சைவ போசன படித்த, பண்பான உள்ளூர் மணமகன் தேவை.
தொடர்பு: 021 3213579 (6-9.பி.ப)

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில், 310 A இலக்கம் உள்ள கடை வாடகைக்குண்டு. சத்திரச் சந்திக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் உள்ளது. பார்வையிடும் நேரம் காலை 9.30 - 1.30 மணிவரை.
நேரில் தொடர்புகொள்ளவும்.

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், சைவ போசனம் 8 இல் செவ்வாய், இளமையான தோற்றமுள்ள 1972 ஆம் ஆண்டு, மகம், 5' 6'' உயரம், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் சிவந்த, அழகான மணமகளுக்கு சைவ போசனபடித்த, பண்பான மணமகன் தேவை.
தொடர்பு: 021 3213579 (6-9.பி.ப)

### தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பின்வருவோர் தேவை
1. கணக்காளர்.
2. காசாளர்.
3. விற்பனையாளர்.
4. சிட்டை எழுதுநர்.

பாடசாலை உபகரணங்கள் விற்பனை செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள்/பழக விரும்புவோர் தேவை. நேரில்வரவும்.

**பேப்பர் ஹவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### மரண அறிவித்தல்

மனுவேற்பிள்ளை பல்தசார்
14.02.2012 பக்கம் 22 இல் பிரசுரமான மனுவேற்பிள்ளை பல்தசாரின் மரண அறிவித்தலில் முகவரியை 585, செல்வாநகர், கிளிநொச்சி என வாசிக்கவும்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**கமலம் குணானந்தன்**

பிறப்பு 26*09*1951
இறப்பு 17*01*2012

**அன்புடனும் பண்புடனும்
வாழ்ந்த உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களிலும் என்றும்
நீங்காது நிலைத்திருக்கும்**

அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து இறுதிச் சடங்குகளிலும் இறுதி ஊர்வலத்திலும் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆறுதல் கூறி பல வழிகளிலும் துணை நின்ற உறவுகள், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் நன்றி கூறி நிற்கின்றோம்.

சோனெழு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்ப அங்கத்தவர்கள்,
அன்பு உள்ளங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அமைதிப் படையை சிரியாவுக்கு அனுப்ப முடிவு

## ரஷ்யா மீண்டும் எதிர்ப்பு

கெய்ரோ, பெப். 15

சிரியாவில் பொதுமக்களுக்கு எதிராக இராணுவம் நடத்தி வரும் வன்முறையை தடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை - அரபு லீக் இணைந்த சர்வதேச அமைதிப் படையை சிரியாவுக்கு அனுப்ப முடிவு எடுத்துள்ளன.

சிரியாவில் கடந்த 11 மாதங்களாக ஜனாதிபதி அசாத்திற்கு எதிராக, மக்கள் போராடி வருகின்றனர். அவர்களை இராணுவம் மூலம் அடக்கி வருகிறார் அசாத். இப்போராட்டத்தில் இதுவரை 7,000 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் எகிப்து தலைநகர் கெய்ரோவில் கூடிய அரபு லீக் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஐ.நா. வின் பாதுகாப்பு குழு மற்றும் அரபு லீக் இணைந்து சர்வதேச அமைதிப் படை ஒன்றை சிரியாவுக்கு அனுப்ப வேண்டும் எனவும், எதிர்க் கட்சிகளுக்கு அரசியல் மற்றும் இராணுவத் தளவாடங்கள் ரீதியாக உதவி செய்யத் தயார் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை சிரியாவின் பிரதிநிதி இல்லாமல் எடுக்கப்பட்ட இந்த முடிவை நிராகரிப்பதாக அந்நாடு தெரிவித்துள்ளது. அரபு லீக்கின் இந்த முடிவை ரஷ்யா மீண்டும் எதிர்த்துள்ளது. இது குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லேவ்ரோவ் அளித்த பேட்டியில் , சர்வதேச அமைதிப் படை சிரியாவுக்குள் நுழைவதற்கு முன் அங்கு இருதரப்பும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். ஆனால் அங்கு அரசை எதிர்த்து வரும் ஆயுதக் குழு யார் கட்டுப்பாட்டிலும் இல்லை எனத் தெரிவித்தார்.

சீன வெளியுறவுத்துறை அமைச்சர் லியு வெய்மின் நேற்று இதுகுறித்து தெரிவித்ததாவது;

அரபு லீக்கின் இந்த முடிவு சிரியா விவகாரத்தில் சாதகமான சூழலைத் தோற்றுவிக்க வேண்டும் என்று மட்டும் தெரிவித்தார். அரபு லீக்கின் திட்டத்திற்கு சீனா ஆதரவா, எதிர்ப்பா என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் ஹோம்ஸ் மாவட்டத்தின் பல்வேறு நகரங்களில் நேற்று சிரியா இராணுவம் கடும் தாக்குதல் நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை லிபியாவைப் போல் சிரியாவிலும் நேட்டோ படைகளை அனுப்பி அமைதியைக் கொண்டு வருவதில் பல்வேறு அரசியல் ரீதியிலான சிக்கல்கள் இருப்பதால் அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் தயக்கம் காட்டி வருகின்றன.



தாய்லாந்து சத்தாகிப் பகுதியில் அமெரிக்கக் கடற்படை கூட்டுப் படையினருக்கு ஆண்டு தோறும் காடுகளில் 'கோப்ரா கோல்ட்' என்ற பெயரில் கடும்பயிற்சி நடைபெறும். பயிற்சியில் ஒரு பகுதியாக நாகப்பாம்பின் இரத்தத்தை சுவைக்கிறார் ஒரு வீரர்.

### ஈரான் மறுப்பு

தெஹ்ரான், பெப்.15

டில்லி பிரதமர் அலுவலகம் அருகே நடைபெற்ற இஸ்ரேல் தூதரக கார் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு தாங்கள் காரணம் இல்லை என்று ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கு இடையே நிலவிவரும் போராட்டத்தின் விளைவாக இந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் என்று அனைவரும் நினைத்திருந்த நிலையில், அமெரிக்கா, இது ஈரானின் செயல் எனக் கருத்து வெளியிட்டிருந்தது. இதற்கே ஈரான் மறுப்புத் தெரிவித்துள்ளது.

## பெண்ணாக மாறி குழந்தை பெற்ற ஆண்



பிரிட்டனைச் சேர்ந்த 30 வயது ஆண் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் பெண்ணாக மாறியதுடன் ஹார்மோன் சிகிச்சை மூலம் கருப்பையை செயற்படச் செய்தார். பின்னர் திருமணம் நடந்தையடுத்து 10 மாதங்களுக்குப் பின் அறுவை சிகிச்சை மூலம் அவருக்கு ஓர் அழகான குழந்தை பிறந்தது.

அதன் மூலம் ஆணாக இருந்து பெண்ணாக மாறி குழந்தை பெற்ற முதல் பிரிட்டிஷ் நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். ஆனால் அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

இவருக்கு முன்பு 2007ஆம் ஆண்டில் 38 வயது தோமஸ் பட்டி என்ற அமெரிக்கர் உலகிலேயே முதன் முறையாக சூசன், ஆஸ்டின், ஜென்சன் என்ற 3 குழந்தைகளைப் பெற்றுள்ளார். இவருக்கு அடுத்த படியாக ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஆணுக்கு குழந்தை பிறந்தது. தற்போது மூன்றாவதாக இவர் ஆணாக இருந்து பெண்ணாக மாறிக் குழந்தை பெற்றுள்ளார்.

## சத்தீஷ்கரில் பயங்கரவாத தாக்குதல் முறியடிப்பு

இந்தியாவின் சத்தீஷ்கர் மாநிலத்தில் பாது காப்புப் படையினர் நடத்திய வேட்டையில் 60 கிலோ பயங்கர வெடிபொருள்கள் சிக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

சத்தீஷ்கர் மாநிலம் ராஜ்னன்ட் கோவான் மாவட்டத்தின் வனப் பகுதியில், கோஹா மற்றும் மான்பூர் பகுதியில் பாதுகாப்புப் படையினர் ரோந்து சென்றனர்.

அப்போது பயங்கர வெடி பொருள்கள் பதுக்கி வைத்திருப்பதை கண்டுபிடித்து அந்தப் பொருள்களை பறிமுதல் செய்தனர்.

உடனடியாக இந்தோ-திபெத் எல்லை பாதுகாப்புப் படையின் வெடிகுண்டு செயல் இழக்கச் செய்யும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அவை பத்திரமாக மீட்கப்பட்டன.

இவை மொத்தம் 60 கிலோ இருந்த தாகவும், இவற்றைப் பயன்படுத்தி இந்த வழியாக வரும் பாதுகாப்புப் படையினரைத் தாக்க பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் பயங்கர தாக்குதல் சம்பவம் முறியடிக்கப் பட்டுள்ளதாகவும், இது மாவோயிஸ்ட்டுகளின் வேலையாக இருக்கலாம் என்றும் பொலிஸார் அஞ்சு கின்றனர்.

### இந்திய, சீனா தொழிலாளர்கள் வேண்டாம்

அமெரிக்க அதிபர் ஒபாமா, அமெரிக்க நிறுவனங்களுக்கு இந்தியா, சீனாவிலிருந்து திறமையான தொழிலாளர்கள் வேண்டாம் என்று அறிவித்துள்ளார் அதாவது, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு திறமையான தொழிலாளர்கள் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வேண்டாம் என்றும் அமெரிக்க மாணவர்களுக்கு சிறந்த கல்விக்கூடங்கள் மற்றும் ஆசிரியர்கள் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

2013 ஆம் நிதி ஆண்டு வரவு-செலவுத்திட்ட அறிக்கையை காங்கிரஸுக்கு அனுப்பிய பின்னர் இவ்வாறு ஒபாமா தெரிவித்துள்ளார்.

## புதிய அரசின் கொள்கைகள் விரைவில் முன்னாள் அதிபர் நஷீத் கட்சியினர் பீதியில்

மாலைதீவின் புதிய அதிபர் முகமது வகீத் அசன், விரைவில் அரசின் கொள்கைகளை வெளியிட உள்ளார். இந்நிலையில், முன்னாள் அதிபர் நஷீத் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் மீது அரசு பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளைச் சுமத்த முயல்வதாகப் பீதியடைந்துள்ளனர்.

மாலைதீவில், ராணுவ ஆட்சிக்குப் பின், 2008 இல் மக்கள் ஆதரவுடன் முகமது நஷீத் அதிபரானார். கடந்த வாரம் அவர் ஒரு நீதிபதியை குற்றம் சாட்டி சிறையில் அடைத்ததை அடுத்து, அங்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. மக்களும், பொலிஸாரும் அதிபருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, நஷீத் தனது பதவியை ராஜிநாமா செய்ய வேண்டிய நிர்பந்தம் உருவானது. துணை அதிபராக இருந்த அசன் அதிபராகப் பொறுப்பேற்றார். அவர் அனைவரையும் சமாளிப்பதற்காக, அனைத்துக் கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடம் கொடுத்தார். நேற்று முன்தினம், ஏழு புதிய அமைச்சர்களை இணைத்து அமைச்சரவையை விரிவாக்கினார். இந்நிலையில், அதிபர் மாளிகையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்று அளித்த பேட்டியில், புதிய அரசு எவ்விதம் இயங்கப் போகிறது, என்ன கொள்கைகளைப் பின்பற்றப் போகிறது என்பது பற்றி விரைவில் ஒரு முன்வரைவு வெளியிடப்படும் என்றார். இதற்கிடையில், முன்னாள் அதிபர் நஷீத் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், தங்கள் மீது புதிய அரசு, பயங்கரவாதக் குற்றம் சாட்டி சிறையில் அடைக்க முயல்வதாகத் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் எதிர்க்கட்சியை முற்றிலும் முடக்கிவிட அதிபர் அசன் முடிவு செய்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். (ந)

## கலிபோர்னியாவில் நில நடுக்கம்

கலிபோர்னியா

அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியாவில் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டது. வெஸ்ட் இண்டீஸ் தீவுகளின் டிரினி டாட் நகரின் கிழக்கே 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடல் பகுதியில் இந்த நில நடுக்கம் உருவானது.

இது ரிச்டர் அளவில் 5.6 ஆகப் பதிவாகி இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. கட்டடங்கள் மட்டுமே லேசாகக் குலுங்கின. (ந)

## காதலர் தினத்தில் குண்டருக்குத் திருமணம்



உலகிலேயே குண்டான மனிதரான மானுயல் உரிப்புக்கும், அவரது நீண்ட நாள் காதலியான கிளாடியாவுக்கும் காதலர் தினமான நேற்று காலை 9 மணிக்கு திருமணம் நடைபெற்றது.

மெக்சிக்கோவைச் சேர்ந்தவர் மானுயல் உரிப்(46). உலகிலேயே மிகவும் குண்டான மனிதர் என்ற பெயர் பெற்றவர். கடந்த 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவருடைய எடையைப் பற்றிய செய்திகள் தான் செய்தித்தாள்களில் பிரதானமாக இருந்தது. உடல் எடை காரணமாக அவர் 5 ஆண்டுகளாக படுக்கையை விட்டே எழுந்திருக்கவில்லை. உடல் எடையும் கூடிக் கொண்டே போனது. அவரது எடை 540 கிலோவைத் தொட்டபோது உலகிலேயே குண்டான மனிதர் என்று பெயர் பெற்றார். குண்டாக இருப்பதால் மனமுடைந்து தற்கொலைக்கு முயன்றார். ஆனால் மருத்துவர்கள் உதவியால் அவர் தற்போது 190 கிலோ எடையை குறைத்திருக்கிறார். இருப்பினும் அவரால் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை.

இந்நிலையில் அவர் உலக காதலர் தினமான நேற்று தனது நீண்ட நாள் காதலியான கிளாடியாவைக் கரம் பிடித்தார் இந்தக் குண்டர். (ந)

## செவ்வாய் கிரகத்தை ஆராயும் திட்டங்களை கைவிட்டது நாசா!

அமெரிக்க அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு போதிய பணம் ஒதுக்கப்படாததால் சில திட்டங்களைக் கைவிட வேண்டிய சூழலுக்கு நாசா தள்ளப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நிறுவனங்கள் இரண்டுடன் இணைந்து 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பூமிக்கு அருகில் உள்ள கோளான செவ்வாய் குறித்து விரிவான பல ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தத் திட்டங்களுக்காக 1.4 பில்லியன் செலவு செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் தற்போதைய அமெரிக்க அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டங்களைத் தொடர்வதற்கான தொகை ஒதுக்கப்படவில்லை. அதே நேரத்தில் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் செவ்வாய் கிரக ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றே தெரிகிறது. இருப்பினும் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு போதிய பணம் ஒதுக்கப்படாதது அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு வருத்தத்தினை உருவாக்கியுள்ளது. இது குறித்து தங்களை கலந்தாலோசிக்காமலேயே முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அண்டைக் கிரகம் குறித்து சிறப்பான ஆராய்சிகளை இதுவரை மேற்கொண்டது நாசா மட்டும் தான் என்றும் திடீரென அறிவியல் தொழில்நுட்பத்திற்கான செலவுகளை குறைத்துள்ளது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என கடந்த செப்ரெம்பர் மாதம் வரையிலும் நாசாவின் இணை நிர்வாகிகளில் ஒருவராகப் பணியாற்றிய எட்வேர்ட் வெய்லர் கூறியுள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசிபிக் பிராந்தியத்தில் அமெ.படைகள் குவிப்பு

## சீனத் துணை அதிபர் எச்சரிக்கை

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் படைக் குவிப்புக் குறித்துச் சீனத் துணை அதிபர் ஷி ஜின்பிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவின் அடுத்த ஜனாதிபதியாகப் பொறுப்பேற்க உள்ள தற்போதைய துணை ஜனாதிபதி ஷி ஜின்பிங் நான்கு நாள் சுற்றுப் பயணமாக நேற்று முன்தினம் அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டன் சென்றார்.

தனது பயணம் குறித்து 'தி வொஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகையில் அவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;



ஆசிய பசிபிக் மண்டலத்தில் சீனா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்குத் தேவையான இடம் உள்ளது. ஆனால் அமைதி, பொருளாதார வளர்ச்சியை விரும்பும் நாடுகள் அந்த மண்டலத்தில் படையைக் குவிப்பதை அந்தப் பகுதி நாடுகள் நம்பிக்கையுடன் பார்க்கவில்லை. இருப்பினும் அமெரிக்காவுடன் சீனா பல்வேறு தரப்புகளிலும் தனது ஒத்துழைப்பை முழுமையாக அளிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

**வொஷிங்டனில் இன்று ஷி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்திப்பு நடக்க உள்ளது. தொடர்ந்து அவர் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனில் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகிறார்.**

வொஷிங்டனில் ஷி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்திப்பு நடக்க உள்ளது. தொடர்ந்து அவர் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகனில் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்.

அதையடுத்து அயோவா மாகாணம் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர் ஆகிய இடங்களுக்குச் செல்கிறார். ஷியின் இந்தச் சுற்றுப் பயணம் உலகளவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பயணமாக எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

# 6 கிராமி விருதுகளை தட்டிச்சென்ற அடெலெ



அமெரிக்காவில் இடம்பெற்ற கிராமி விருதுகள் வழங்கும் விழாவில் பொப் பாடகி அடெலெ ஆறு விருதுகளைத் தனதாக்கிக் கொண்டார். அதில் சிறந்த பொப் அல்பம், சிறந்த பொப் தனி நிகழ்ச்சி, மற்றும் இசைச் சித்திரம் உட்பட ஆறு கிராமி விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

றோலிஸ் இன் தடீப், சம் வன் பஸ்கீ some one like ஆகிய அடெலின் பாடல்கள் மகா பிரபலம். அதில் Someone like தூணித என்ற பாடலுக்காகவும் இந்த விருது கிடைத்தது. அண்மையில் தொண்டையில் அறுவைச் சிகிச்சை செய்த அவர் விருது மேடையில் இந்தப் பாடலைப் பாடி அசத்தியுள்ளார். (ந)

# போராளிக் குழுத் தலைவர் சைனிஸ் பாத் கைது

பெருவில் பலம்வாய்ந்த சைனிங் பாத் போராளிக் குழுவின் தலைவர் உயிருடன் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளார் என பெரு அரசு அறிவித்துள்ளது.

தோழர் ஆர்டிமியோ என்று அழைக்கப்படும் சைனிங் பாத் அமைப்பின் தலைவர், பெரு அரச படைகளுடனான மோதலில் படுகாயமடைந்த நிலையில் ஒதுக்குப்புறமான காட்டுப்பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என பெரு பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

புளோரின்டோ எலியுரேரியோ புளோரஸ் என்ற இயற்பெயர் கொண்ட தோழர் ஆர்டிமியோ இறந்துவிட்டதாக முன்னதாகத் தகவல் வெளியானது.

ஆனால் பெரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் அவர் உயிருடன் இருப்பதாகவும், ஆனால் படுகாயமடைந்துள்ளார் எனக் கூறியுள்ளார். வலது கரத்தை இழந்துள்ள அவருக்கு தலைநகர் லிமாவில் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாவோயிஸ்ட் அமைப்பான சைனிங் பாத் 1980 கள் மற்றும் 90களில் பெரு அரசுக்குச் சவாலாக இருந்து வந்தது. சைனிங் பாத் அமைப்புக்கும் பெரு அரசுப் படைகளுக்கும் இடையில் நடந்த மோதல்களில் 70,000 பேர் வரை கொல்லப்பட்டனர். தற்போது அந்த அமைப்பு பலமிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# இணையத்தில் உடல் உறுப்பு விற்பனை

அழகான குழந்தை விற்பனைக்கு உள்ளது, அதன் உறுப்புகள் தேவைப்படுவோர் வாங்கிக் கொள்ளலாம் என்று மெக்சிகன் இணையத்தளத்தில் வெளியான விளம்பரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விளம்பரத்துக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து விளம்பரம் நீக்கப்பட்டுவிட்டது. எனினும் விளம்பரத்தைப் பதிவு செய்தவர் பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் செயலை அடுத்து இணையத்தளத்தில் மனிதர்களின் உடல் உறுப்புகளை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது என்ற விதிமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது. (ந)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

வைரமுத்து தங்கராசா

மண்மகிழ : 28.05.1945
கண்நெகிழ : 25.02.2011

திதி: 15.02.2012 (நவமி)

ஆண்டொன்று ஆனாலும் உம் நினைவு
என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்

என்றும் உம் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

வீமன்காமம்,
தெல்லிப்பழை.
(14460)(2-6-7)


## அறிவிக்கப்பட்ட விருதை 10 ஆண்டுகளுக்குப் பின் பெற்றார் சூகி

அமைதிக்குப் பாடுபட்டதற்காக, 2002ஆம் ஆண்டு ஐ.நா. அமைப்பின் சார்பில் வழங்கப்பட்ட விருதை, 10 ஆண்டுகளுக்கு பின் பெற்றார், மியன்மார் அரசியல் கட்சித் தலைவர் ஆங் சூகி.

இந்திய எழுத்தாளர் மந்தன்ஜித் சிங் நினைவாக, ஐக்கிய நாடுகள் சபையின் எஜூகேசனல், சயின்டிபிக் மற்றும் கல்ச்சுரல் ஆர்கனைசேசன் மூலம் வழங்கப்பட்டு வரும் இந்த விருது, 2002ஆம் ஆண்டு, ஆங் சான் சூகிக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அப்போது, அவர் ஜூண்டா அரசால் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தற்போது, அவர் வீட்டுச் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் அரவணைப்பில் 1984-08-17

மண்ணின் அரவணைப்பில் 2009-02-18



திதி: நவமி (15.02.2012)

அமரர்

கருணாகரலிங்கம் துஷ்யந்தன் (கஜன்)

வதிவிட முகவரி: கல்வாரி வீதி, மூங்கிலாறு, உடையார்கட்டு.

சந்தோஷ சாரல் வீச
தரணியிலே தலைநிமிர்ந்து
தன்மானத்துடன் வாழ்ந்த வாழ்க்கையிலே
ஊர் கண் பட்டதோ புரியவில்லை...
காலனவன் கண் பட்டதால்
கல்லறையில் இன்று நீ
கண்ணீரைக் காணிக்கையாக்கி
கலங்கி நிற்கின்றோம்
கண்ணா உன் புதிய வரவு எங்கேயென்று

உன் நினைவுகளைச் சுமந்து
அப்பா, அம்மா, அக்கா, அத்தான், தம்பிமார், உற்றார், உறவினர்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(14471) (6,7,10)

## முதலாம் ஆண்டு நினைவலை

தோற்றம் 09-08-1933
மறைவு 26-02-2011

திதி: நவமி

திருமதி

நாகமணி இரத்தினவடிவு



அன்புள்ள அம்மாவே! ஆண்டொன்று
ஓடினாலும் உன் அமைதியான புன்சிரிப்பும்
கனிவு மொழி பேசும் கள்ளமில்லா வெள்ளை
மனமும் அந்தரித்து வருவோர்க்கு அள்ளி
வழங்கும் குணம் கொண்ட அம்மாவே!
நீங்கள் பல நாடுகள் சென்று வந்தீர்களே
கூடிய கெதியில் உனது பிள்ளைச்
செல்வங்களை உனது உறவினர்களை
விட்டு இறைவனடி சென்றாய் அம்மா
உனது ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15-02-2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.449, இராமலிங்கம் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(14418) (6,7,10)

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகள்

9 ஆம் வருட நினைவஞ்சலி

20 ஆம் வருட நினைவஞ்சலி







அமரர் A.R.சிவகுருநாதன்

திருமதி தவமணி சிவகுருநாதன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவில் வாழ்கின்ற
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(14480)(2-6-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் அலுவலகம் அருகில் கார்க் குண்டு வெடிப்பு

## 4 பேர் காயம்



டில்லி, பெப்,15

டில்லியில் பலத்த பாதுகாப்பு நிறைந்த பிரதமர் இல்லம் அருகே நின்று கொண்டிருந்த ஸ்ரேலியத் தூதரகத்தின் கார் திடீரென தீப்பிடித்து வெடித்தது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணிக்கு நடை பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சம்பவத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனர். சம்பவம் நடந்த இடத்திலிருந்து பிரதமரின் இல்லம் சுமார் 200 மீற்றர் தூரத்தில் உள்ளது.

சம்பவ இடத்தில் தடயம் ஏதும் கிடைக்குமா என்று கைரேகை நிபுணர்கள் சோதனை நடத்தி வருகின்றனர். பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பலத்த பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரி ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் இது காரில் குண்டு வெடித்ததா அல்லது தீபிடித்ததா என்று கூற மறுத்துவிட்டார். காரில் குண்டு வெடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதனிடையே முதல் கட்ட விசாரணையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள், இஸ்ரேலிய தூதரகத்தின் காரை பின் தொடர்ந்து வந்துள்ளனர். சிக்னலில் நிற்கும் போது வாகனத்தில் சந்தேகத்துக்கிடமான பொருள்களை மறைத்து வைத்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் காரில் சிலிண்டர் வெடித்தது என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேல் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்; சம்பவத்தில் தொடர்புடைய கார் தூதரகம் அருகே நின்று கொண்டிருந்தது. தூதரக அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார். இஸ்ரேல் தூதரத்தை இலக்காக வைத்து குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது என்று தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு வெடி குண்டு தடுப்புப் பிரிவு அதிகாரிகள் விரைந்துள்ளதாகவும், சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் டில்லி பொலிஸாரின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். (வ)

## தீவிரவாதிகளை அடையாளம் காண நடவடிக்கை

### சிதம்பரம் கருத்து



டில்லி குண்டு வெடிப்பில் தீவிர வாதிகளை அடையாளம் காண நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய தூதரகத்துக்குச் சொந்தமான காரின் பின்புற கதவில் குண்டு வைக்கப் பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர் வெடிகுண்டை ஒட்டிவிட்டு சென்றுள்ளார் என்றும் குண்டு பொருத்தப்பட்ட 5 வினாடிகளில் வெடித்துச் சிதறியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர் தெரிவித்துள்ளார்.

## கலாம் எழுதிய அசாமிய மொழி பெயர்ப்பு நூலுக்கு விருது



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் எழுதிய 'இன்டோமிடபில் ஸ்பிரிட்' என்ற நூலின் அசாமிய மொழி பெயர்ப்புக்கு சாகித்திய அகடமி விருது கிடைத்துள்ளது.

மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருதுகளும் இளம் எழுத்தாளருக்கான (யுவ புரஸ்கார்) பரிசில்களும் நேற்று முன் தினம் திங்கள்கிழமை அறிவிக்கப் பட்டுள்ளன. மொழி பெயர்ப்புக்கான விருதுகளில் தமிழ், கன்னடம் உள்ளிட்ட 22 நூல்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழில் இந்திரன் மொழிபெயர்த்த 'பறவைகள் ஒருவேளை தூங்கிப் போயிருக்கலாம்' என்ற நூலுக்கு விருது கிடைத்துள்ளது. ஒரிய மொழிக் கவிஞரான மனோரமா பிஸ்வால் மஹாபாத்ரா எழுதிய 'பெர்ஹாப்ஸ் பேர்ட்ஸ் மைட் ஹேவ் ஸ்லெப்ட்' என்ற கவிதைத் தொகுப்பு நூலின் மொழிபெயர்ப்பு இது.

பரிசில் பெறும் ஒவ்வொரு நூலுக்கும் ரூ.50 ஆயிரம் ரூபா செப்புப் பட்டயம் வழங்கப்படும். வரும் ஓகஸ்ட் மாதம் விருதுகள் அளிக்கும் விழா நடைபெறும். (வ)

# இஸ்ரேல் தூதரகத் தாக்குதல்; ஐ.நா. சபை கண்டனம்

வாஷிங்டன், பெப்.15

இந்தியத் தலைநகர் டில்லியில் நடைபெற்ற இஸ்ரேல் தூதரகம் மீதான கார்க் குண்டுவெடிப்பு, மற்றும் ஜோர்ஜியாவில் நிகழ இருந்த தாக்குதல் உள்ளிட்டவைக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை, நீதிக்கு முன் நிறுத்தவும் சபை உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனின் செய்தித்தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட்டு, பயங்கரவாதத்தை வேரறுக்க வேண்டும். இதற்கு காரணமானவர்களை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் - என்று உள்ளது. (ந)





ஸ்ரீரங்கம், திருவானைக்காவலில் நடந்த அரசு விழாவில் பங்கேற்ற முதல்வர் ஜெயலலிதா, 160 கோடி ரூபா மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நட்டார். அருகில் அமைச்சர்கள் பன்னீர்செல்வம், செங்கோட்டையன், விஸ்வநாதன், முனுசாமி, சிவபதி.

## உருது மொழி கவிஞர் முஹம்மது கான் மரணம்

தேசிய புகழ்பெற்ற உருது கவிஞர் அக்லாக் முஹம்மது கான் (வயது 76) உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் இரவு மரணமடைந்தார்.

பொலிவுட் இலக்கியப் படமான உம்ராவோ ஜான் மற்றும் கமன், அஞ்சுமன் ஆகிய படங்களில் கசல் இசை அமைத்ததன் மூலம் அக்லாக் முஹம்மத் கான் பிரபலமடைந்தார். ஷஹாரியார் என்ற புனைப் பெயரால் அழைக்கப்படும் இவர், கடந்த 1987ஆம் வருடம் சாகித்திய அகாதமி விருதையும், ஞானபீட விருதையும் பெற்றுள்ளார்.

# நுகர்வோர் நம்பகத்தன்மையில் முதலிடத்தில் இந்தியா

டில்லி, பெப்.15

உலகரீதியில் நுகர்வோர் நம்பகத்தன்மையுடன் கூடிய சந்தைப் பட்டியலில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தை தக்க வைத்துள்ளது.


நுகர்வோர்களின் நம்பகத்தன்மையில் சிறந்த இடங்களை வகிக்கும் நாடுகள் குறித்து நீல்சன் நிறுவனம் ஆய்வு செய்துள்ளது. அந்த ஆய்விலேயே உலக அளவில் பல்வேறு பொருள்களுக்கான மிகப் பெரிய சந்தையாக இந்தியா விளங்குகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நிதி நெருக்கடிக்கு இடையிலும் சிறந்த பொருளாதார கொள்கைகள் மூலம் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கிறது. நுகர்வோர் நம்பிக்கை குறியீட்டெண்படி, டிசெம்பருடன் முடிந்த காலாண்டில் நுகர்வோரின் அதிக நம்பிக்கையுடன் சந்தையில் 122 புள்ளியுடன் இந்தியா முதலிடம் பிடித்தது. தொடர்ந்து 8 காலாண்டுகளாக இந்தியா முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் வளர்ச்சி சரிவு, பணவீக்க உயர்வு போன்றவை இந்தியாவுக்குச் சவாலாக இருக்கும். இந்தியாவைத் தொடர்ந்து 177 புள்ளிகளுடன் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகள், 2ஆவது இடத்தில் உள்ளன. உலக நுகர்வோர் நம்பிக்கையில் அமெரிக்கா, சீனா ஏற்றம் கண்டபோதிலும் ஐரோப்பா சரிவைச் சந்தித்தது.

# பஸ் - கார் விபத்து

## 4 பேர் சாவு



சென்னை, பெப்.15

மதுராந்தகம் அருகே பழுதடைந்து நடு வீதியில் நின்ற கார் மீது அரசு பஸ் மோதியது. தடுப்பை உடைத்துக் கொண்டு எதிர் வீதியில் பாய்ந்த கார் மீது மற்றொரு கார் மோதியது. இந்த விபத்தில் ஓய்வு பெற்ற ஆர்டிஓ உட்பட 4 பேர் பரிதாபமாக இறந்தனர். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

செங்கல்பட்டைச் சேர்ந்தவர் சுப்பிரமணியம் (வயது62) தனது உறவினர்களுடன் நேற்று அதிகாலை மேல்மருவத்தூர் கோயிலுக்கு காரில் சென்று கொண்டிருந்தார். மதுராந்தகம் அருகே கக்கிலபேட்டை பகுதியில் கார் டயர் காற்றுப்போய் நடு வீதியில் நின்று விட்டது. அப்போது பின்னால் வேகமாக வந்த அரச பஸ், திடீரென கட்டுப்பாட்டை இழந்து கார் மீது மோதியது. மோதிய வேகத்தில் வீதித் தடுப்பில் ஏறிய கார், தடுப்புக் கம்பியை உடைத்துக் கொண்டு எதிர் வீதியில் பாய்ந்தது.

அந்த நேரத்தில் சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த மாருதி கார், சுமோ மீது மோதியது. இதில் இரண்டு கார்களும் நொருங்கி உருக்குலைந்தன. சுமோவில் இருந்த சுப்பிரமணியம், அவரது உறவினர் சீமான் (வயது 62) மற்றும் மாருதி காரில் வந்த சென்னையை சேர்ந்த பூமிநாதன் (வயது 50), அவருடன் வந்த சபாபதி (50) என 4 பேர் உடல் சிதறி அந்த இடத்திலேயே இறந்தனர்.

விபத்துக்குள்ளான காரில் இருந்த செல்வராஜ், ரவி, உமா ஆகியோர் படுகாயம் அடைந்தனர். அந்த வழியாக வாகனங்களில் வந்தவர்கள் விபத்தை பார்த்து பொலிஸுக்கு தகவல் கொடுத்து விட்டு மீட்பு பணியில் ஈடுபட்டனர். தகவல் அறிந்ததும் மதுராந்தகம் பொலிஸ்அத்தியட்சகர் சேகர் தலைமையில் பொலிஸார் விரைந்து வந்து காயம் அடைந்தவர்களை செங்கல்பட்டு, மதுராந்தகம் அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோ தனைக்காக மதுராந்தகம் அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர்.

# அறிக்கை தாக்கல் செய்ய பொலிஸாருக்கு உத்தரவு

## ஆபாச அமைச்சர்கள் வழக்கு

கர்நாடக சட்டசபையில் அமைச்சர்கள் செல்போனில் ஆபாசக் காட்சிகளைப் பார்த்த விவகாரம் தொடர்பாக எதிர் வரும் 27ஆம் திகதிக்குள் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யும்படி விதான சவுதா பொலிஸாருக்கு பெங்களூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கர்நாடக சட்டசபையில் கடந்த 8ஆம் திகதி கைபேசியில் ஆபாசப்படம் பார்த்ததாக பா.ஜ.க. அமைச்சர்கள் பிடிபட்டனர். ஊடகங்களில் இந்தத்தகவல் வெளியானதும் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், அவர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர்.

மேலும் அவர்களுடைய சட்டசபை உறுப் பினருக்கான பதவியையும் பறிக்க வேண்டு மென்று சபாநாயகரை எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதற்கிடையே சட்டத்தரணி தர்மபால் கவுடா, 3 அமைச்சர்கள் மீது நடவடிக்கை கோரி பெங்களூர் பெருநகர 8ஆவது கூடுதல் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்தார்.

இந்தமனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றபோது, எதிர் வரும் 27 ஆம் திகதிக்குள் இதுதொடர்பாக விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று விதான சவுதா பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இதுகுறித்து சட்டத்தரணி தரம்பால் கூறுகையில், சட்டசபைக்குள் நடந்த இந்த அவமானத்திற்குரிய சம்பவம் குறித்து வழக்கு தொடர்வதற்கு சபாநாயகர் அனுமதி தேவை.

அதுகுறித்து கேட்டபோது சபாநாயகர் அனுமதி மறுத்துவிட்டார். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த பெங்களூர் பெருநகர 8ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் [illegible]

இதற்கிடையே பேரவையில் நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரிக்க 7பேர் கொண்ட குழுவை சபாநாயகர் போப்பையா நியமித்துள்ளார்.

அந்தக்குழுவின் முன் 13 ஆம் திகதிக்குள் முன்னிலையாகி முன்னாள் அமைச்சர்கள் விளக்கம் அளிக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் அவர்கள் மூவர் சார்பிலும் பேரவை செயலாளரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அதில் தாங்கள் விளக்கமளிக்க மேலும் ஒருவாரம் அவகாசம் கோரப்பட்டிருந்தது. [illegible] ஏற்றுக் கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெய் குருதேவ்

## பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி

அவர்களின்

**வாழும் கலைப் பயிற்சி- 01**

(எளிமையான யோகாசனங்கள், தியானங்கள், பிராணாயாமா ஆகியவை பயிற்றுவிக்கப்படுகிறது.

இடம்: வாழும் கலை நிலையம்
செட்டியார் மடம்,
அராலி வடக்கு.

**பயிற்சி நடைபெறும் நாள்கள்:**
புதன் முதல் ஞாயிறுவரை (15.02.2012 - 19 - 02 -2012)

நேரம்: மாலை 4.30 தொடக்கம் 6.30 வரை
மாலை 7.00 தொடக்கம் 9 வரை
குறிப்பு: மீட்டல் பயிற்சி பிரதி ஞாயிறுதோறும் காலை 7 தொடக்கம் 9 வரை நடைபெறும்
அனைவரும் வருக ஆனந்தம் பெறுக.

T.P: 077 4277375, 077 8787200

(14436) (45-6-7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.02.2012 புதன்கிழமை அன்று சிவ பதமடைந்த சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், ஓமந்தையை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வம்

அமரர்
**நமசிவாயம் சுகுமார்**
(செல்வம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று [14.02.2012] செவ்வாய்க்கிழமை கீரிமலையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 16.02.2012 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கத்தானை வீதி,
சாவகச்சேரி.

நாதஸ்வரம் S. சுப்பிரமணியம்
கனகா குடும்பத்தினர்.

(14217) (6,7,10)

## மரண அறிவித்தல்கள்



திருமதி **சச்சிதானந்தம் தங்கமுத்து**

கரணவாய் சோழங்கனை பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தம் தங்கமுத்து (13.02.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை தங்கம்மா தம்பதியரின் மருமகளும், சச்சிதானந்தத்தின் அன்பு மனைவியும், எந்திரி வசந்தகுமார் (பிரதி திட்டப் பணிப்பாளர், நிக்கொட்), யாழ்ப்பாணம் - கிளிநொச்சி), அவர்களின் பாசமிகு அருமைத் தாயும், தங்கமணி, அன்னலட்சுமி, சித்திரம் வள்ளிப்பிள்ளை, நவரட்ணம், இராசாத்தி, குரு குலசிங்கம், தேவராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் வாசுகி, கிருஷாந்தி (லண்டன்), விஜிதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பெரிய தாயும், ஸ்ரீரதி வசந்தகுமார் (ஆசிரியர் - C.C.T.M.S வவுனியா) அவர்களின் மாமியும் தரங்கினி, சுயானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அளவெட்டி மேற்கு. (14446)(45,6,9)

தகவல்:
**மகன்**

## முத்துக்கருப்பர் கந்தையா

திருகோணமலை, ஆலங்கேணியைச் சேர்ந்த முத்துக்கருப்பர் கந்தையா நேற்று (14-02-2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கேதாரகௌரி மற்றும் மகேஸ்வரன் (திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), மலர்விழி, றெங்கேஸ்வரி, கமலேஸ்வரி (சுவிஸ்), சிவனேஸ்வரன் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனா மகேஸ்வரன் (அதிபர் யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம்), யோகநாதன், விஜயன் (சுவிஸ்), வனஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14-02-2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**க.மகேஸ்வரன் (மகன்),**
திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

71/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(14433) (6,7,10)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,பெப்.15

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய புதிய தேர்முட்டி மண்டபம்,தேர்த்தரிப்பிட மண்டபம் கட்டும் பணிகள் தொடர்ந்து ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெறுகின்றன. ஆலய பரிபாலன சபையார் திட்டமிட்டபடி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் தேர்த் திருவிழா அன்று புதிய தேரில் அம்பாள் வீதியுலா வருதல் நடைபெறவுள்ளது. (வ-28)

***

சுழிபுரம்,பெப்.15

சுழிபுரம் வடகிழக்கு சோழியபுரம் சாத்தாவோலை சம்புநாதேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்று வரும் பெருந் திருவிழாவில் மகாசிவராத்திரிதின நான்கு சாமப் பூசைகளும் விஷேட நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெற பக்தர்கள் புடைசூழ கடற்கரைக்கு எம்பெருமான் எழுந்தருளுவார். (வ-28)

## அரிசியின் விலை சரிவு

கொழும்புத்துறை,பெப்.15

பெரும்போக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பித்துள்ளதையடுத்து அரிசியின் விலைகள் சந்தைகளில் சரிவடைந்து காணப்படுகிறது.

ஒருகிலோ 65 ரூபா முதல் 70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுவந்த குத்தரிசி தற்போது 60 ரூபா முதல் 65 ரூபா வரை விற்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்திலும் வன்னியிலும் இந்தமுறை அமோக நெல் விளைச்சல் கிடைத்துள்ளது. அறுவடை செய்யப்பட்ட நெல், விவசாயிகளால் விற்பனைக்கு விடப்பட்டுள்ளமையால் அரிசியின் விலைகளில் சரிவு ஏற்பட்டுள்ளது. (எ-135)

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் நடைபெறும் கட்டுமான வேலைகளுக்கு, கூலியாள்கள் தேவை. தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்பு:
078 6322140

(14489)

## ரிப்பர் வாகனம் விற்பனை

நல்ல நிலையில் உள்ள NP LG..... இலக்கமுடைய ரிப்பர் வாகனம் (Ashok Leyland) இரண்டு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0775788172, 077 5381172

(14487)

## காணி விற்பனைக்குண்டு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 0773249094

(14502) (5-7-10)

## மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்குமே கிடைக்காத மிக மலிவு விலையில்
Japan Sony Waga Flat T Vகள் 21"-13000/=,
25"-13500/=, 29"- 16000/= குளிர்
சாதனப்பெட்டிகள் - 19000/=, பைனியர் அம்பிளிபயர்
- 10000/= CD- Radio Cassette 3000/=
தொடர்புகளுக்கு: 077 0440570, 077 9712956
சொனி றேட்றசென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம் (14434) (45-7-9)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

(13823) (45-6-7)

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மூக்குக் கண்ணாடி நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

அடிப்படைத் தகைமைகள்.
O/L சித்தி மற்றும் A/L

வயது 18 - 30 (யாழ். மாநகர சபை எல்லைக்குள், வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 25.02.2012 இற்கு முன்னர் தங்கள் சுயவிபரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்பு: [illegible]

உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/8949) (6-7-[illegible])

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | சுட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

(13302) (45-7-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும்
திருமதி பு. மகேஸ்வரன் அவர்களின் அன்பு மாமனார்

**முத்துக்கருப்பர் கந்தையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்

(14445)(45,6,9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணாசலம் செல்வநாயகி

திதி: 15.02.2012

தோற்றம்
04★08★1932

மறைவு
25★02★2011

எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டை நினைவு கூருகின்றோம்

ஆ. அருணாசலம்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

(A/8944) (7,9)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
27
.
07
.
1976

உதிர்வு
16
.
02
.
2009



**அமரர் சந்திரலிங்கம் றதீஸ்**
(R.D.A கிளிநொச்சி)

ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறுமா எங்கள் துயரம்
கண் மூடித் திறக்கும் முன்பே
காலன் உமை அழைத்ததேனோ?

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

(14651)(6-7-8)

உங்கள் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03
-
07
-
1945

மறைவு
08
-
03
-
2010

**ஜெகதீஸ்வரி பத்மநேசன்**

திதி: மாசி மாத அபரபக்ஷ அட்டமி (15-02-2012)

*ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறுமா எங்கள் துயரம்*
*கண் மூடித் திறக்கும் முன் காலன் உன்னை*
*அழைத்தானே தினம் தோறும் உனது நினைவில்*
*கண்ணீர் காவியம் ஆகின்றது*

உனது பிரிவால் நிம்மதியைத் தொலைத்து விட்டோம்

சோம தீபம்,
கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.
தொ.பே:0212255085.

குடும்பத்தினர்.

(14482) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் எப்படி?
# உங்கள் குடும்பம் எப்படி?

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், குடும்பம் ஒரு கோயில், என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? ஒவ்வொருவருக்கும் நல்ல கணவனோ, நல்ல மனைவியோ கிடைத்தால் வாழ்க்கையில் கண்டிப்பாக வசந்தம் வரும்.

''மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்'' என்று சொல்வதுபோல் ஒரு பெண்ணுக்கும் கணவன் அமைவது அப்படித்தான், என்று கொள்ளவேண்டும். இரு மனங்களின் சங்கமமே இல்வாழ்க்கை. இதில் ஒரு மனம் முடங்கிப்போனாலோ, அல்லது தடம் மாறிப்போனாலோ இல்வாழ்க்கை இருண்ட வாழ்க்கையாகிவிடும் என்பதை குடும்பமானவர்களும், குடும்பமாகப் போகிறவர்களும் உணரவேண்டும்.

அந்தக் காலங்களில் காலையில் நித்திரைவிட்டு எழும்போது கடவுள்களை வணங்காமல் கணவனையே தெய்வமாகக் கருதி வணங்கிய பெண்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் பெண்கள் இப்படிச் செய்வது இல்லை. ஒருசிலர் விதிவிலக்காக இருக்கலாம். நாகரிக, அறிவியல் உலகில் இது அவசியமும் இல்லைத்தான். ஆனால் ஒரு பெண் இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குணங்களை உடையவளாகவும், தன் கணவரின் கஷ்ட, நஷ்டங்களில், நல்லது, கெட்டதுகளில் பங்கெடுப்பவராகவும், வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்பவராகவும் இருந்தால் நிச்சயமாக அது நல்ல வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் தரும். அதேபோல் கணவனும், மனைவியின் மனம் நோகாமல், அன்பாகவும், ஆதரவாகவும் தனிமனித ஒழுக்கம் கொண்டவனாகவும் இருந்தால் கண்டிப்பாக வாழ்க்கையில் நிம்மதியும், சந்தோஷமும் இருக்கும்.

எமது சமூகத்தில் தற்பொழுதெல்லாம் பல குடும்பங்களுக்குள் பிரச்சினைகளும்,சண்டை சச்சரவுகளும், மனமுறிவுகளும் ஏற்படுவதைப் பரவலாகப் பார்க்க முடிகிறது. இது சிலநேரம் திருமண முறிவில்கூட கொண்டு சென்று விட்டு விடுகிறது. பத்து, பதினைந்து வருட இல்வாழ்க்கையுடனும், ஓரிரு குழந்தைகளை பெற்றபின்பும் இப்படியான விவாகரத்துக்கள் இப்பொழுது பரவலாக இடம்பெறுகின்றன. குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மவர் மத்தியில் இவை நடக்கின்றன. இதற்கு என்ன காரணம்?

எங்கே தவறு நடக்கிறது? யார் பிழை விடுகிறார்கள்? என்ற கேள்விகள் எழும்பொழுதுதான் நாம் பலவற்றைப் பதிலாக அறியமுடிகிறது. தன்னலம், விட்டுக்கொடுக்காத சுபாவம், ஆணவம், நாகரிக மோகம், ஆடம்பர உச்சம், ஊதாரிச் செலவுகள். கருத்து மோதல்கள்,ஒவ்வொருவரின் ஒவ்வாத செயற்பாடுகள், பொருளாதரத்தில் தனித்து நிற்கக்கூடிய வல்லமை போன்ற காரணங்கள் இருபாலாரிடமும் ஏற்படுகின்றபோது, கருத்து மோதல்கள் ஏற்பட்டுக் கடைசியில் மணமுறிவு ஏற்படும் சூழல் வருகிறது.

மேற்குலக சமூகத்தில் இதுவொரு சாதாரண விடயமாக இருந்தாலும் எமது சமூகத்துக்கு இது ஒத்துவருமா? என்று பார்க்க வேண்டும். பல குடும்பங்கள் பிரிந்து வாழ்வதையும், பிள்ளைகள் வேறாக வாழ்வதையும் பார்க்க முடிகிறது. தமிழ் கலாசாரம், விழுமியங்கள் பற்றி அக்கறை இல்லாதவர்களுக்கு இது பெரிய விடயமாக இருப்பதில்லை.ஆனால் இந்த பண்பாட்டுக் கோலங்களில் வாழ விருப்புகிறவர்களுக்கு இது பல விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும்.எப்படியான பாதிப்பு? என்று பார்த்தால், மனஉளைச்சல், மன அழுத்தம், விரக்தி, தன்னிலை மறத்தல், இறுதியில் தற்கொலை முடிவு என்று செல்வதை நாம் பார்க்கலாம்.

மனித வாழ்க்கை என்பது ஒரு குறுகிய காலம்தான். இதில் ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் எப்படி வாழ்ந்தோம்,வாழ்கிறோம், வாழ்வோம் என்று பார்க்க வேண்டும். அதுதான் சொல்வார்கள், முப்பது வயதில் ஒருவர் தன் வாழ்க்கையை திருப்பிப் பார்க்கவேண்டும்.ஏன் தெரியுமா? ஏதாவது தப்புப் பண்ணியிருக்கிறோமா? என்று சிந்திப்பதற்காக. தப்பு பண்ணியிருந்தால் திருத்த வேண்டும். நாற்பது வயதில் மீண்டும் பார்க்க வேண்டும் தப்பெல்லாம் சரியாகிவிட்டதா? நாம் நன்றாக வாழ்கிறோமா என்பதற்காக. அறுபது வயதில் திரும்பப் பார்க்க வேண்டும் நாம் திருப்தியாக வாழ்ந்தோமா என்பதற்காக.

அறுபது வயதில் ஜெயித்தவர்களை அணுகிக் கேட்டால் சொல்வார்கள் தாங்கள் ஜெயித்ததற்கு காரணம் குடும்பமே என்று. குடும்பம் என்ற அமைப்பைச் சிதைத்துவிட்டு எப்படி வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பது? என்பதைச் சிந்தியுங்கள்.

உங்கள் கையிலேதான் வாழ்கையின் உந்துகோல் இருக்கிறது.தெரிந்து கொள்ளுங்கள்.வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்று. உலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி இல்லறம் மேற்கொண்டு வாழ்பவர்கள் வானுலகில் உள்ள தேவருள் ஒருவராக வைத்து மதிக்கப்படுவார்கள். நீங்கள் எப்படி? உங்கள் குடும்பம் எப்படி?

# மாணவரின் தவறான செயல் எம் சமூகத்தையே பாதிக்கும்

## மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

**மாணவர்களின் ஒழுக்கம் பற்றி தினமும் வெளியாகும் பத்திரிகைகளில் புத்திஜீவிகள், கல்விமான்கள் போன்றோரால் அறிக்கைகள் விடப்படுகின்றன. இவ்வாறான அறிக்கைகள் ஒரு சில மாணவர்கள் செய்யும் தவறுகள் அனைத்து மாணவ சமூகத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.**

தென்மராட்சி, பெப்.15

மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைகளுக்கும், விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளுக்கும் ஒரு ஒற்றுமை உள்ளது என மக்கள் வங்கியின் வடவலய பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:-

இவை இரண்டிலும் மீண்டும் பங்குபற்றும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. தட்டெறிதல், உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போன்ற விளையாட்டுக்களில் மூன்று தடவைகள் வீர, வீராங்கனைகளின் திறமைகளைச் சோதிக்க சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

மைதான நிகழ்வுகளில் வீரர்கள் துப்பாக்கி சுடுவதற்கு முன்னர் அல்லது, விசில் ஊதுவதற்கு முன்னர் புறப்பட்டாலும் மூன்று தடவைகள் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. இதேபோல் மாணவர்கள் தோற்றும் பரீட்சைகளிலும் மூன்று தடவைகள் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களின் ஒழுக்கம் பற்றி தினமும் வெளியாகும் பத்திரிகைகளில் புத்திஜீவிகள், கல்விமான்கள் போன்றோரால் அறிக்கைகள் விடப்படுகின்றன. இவ்வாறான அறிக்கைகள், ஒரு சில மாணவர்கள் செய்யும் தவறுகள் அனைத்து மாணவ சமூகத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

மாணவர்களைச் சமுதாயத்தில் பொறுப்புள்ளவர்களாக மாற்றக் கூடிய அறிக்கைகளை சமூகப் பெரியோர்கள், கல்விமான்கள் வெளியிட வேண்டும். பாடசாலைகளில் மாணவர்கள் 6,7 மணித்தியாலங்கள் செலவிடுகின்றனர். அந்த நேரத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் தமது பூரண கண்காணிப்பில் வைத்து கல்வியை ஊட்டுகின்றனர். மிகுதி நேரத்தை வெளியிலேயே செலவிடுகின்றனர். இந்த வேளையில் அவர்களை கண்காணித்து வழிப்படுத்த வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

இன்றைய போட்டிகளில் சிறந்த வீர, வீராங்கனைகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள், சக போட்டியாளர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் இல்லையெனில், உங்களது திறமை உங்களுக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் தெரியாமல் போயிருக்கும்.

நீங்கள் வீர வீராங்கனைகளாக வருவதற்கு பிரதியுபகாரம் எதிர்பாராமல் பயிற்சிகளையும், ஒழுக்கங்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்கள், அதிபர் போன்றோருக்கும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

இவர்களுக்கு நீங்கள் செலுத்தும் நன்றிக் கடன் வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலான போட்டிகளில் பங்கு பற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதிலேயே தங்கியுள்ளது- என்றார். (எ-9)

## நியமனம்

யாழ்ப்பாணம், பெப்.15

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேவை புரிவதற்கு மேலும் ஒரு மருத்துவ உத்தியோகத்தர் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியர் திருமதி ஜெ.சேனாதிராஜா என்பவரே இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் எனத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்

தென்மராட்சி, பெப்.15

கலாசார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டியில் ஆங்கில இலக்கியத் திறனாய்வில் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய மட்ட திறந்த போட்டிகளில் ஆங்கிலப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் இவர் ஒருவரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் கலாசார அமைச்சும் கலாசார திணைக்களமும் நடத்திய அரச தேசிய கலை இலக்கிய விழாவில் டாக்டர் சக்திவேல் கலாசார கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்காவினால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். (எ-29)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.15

உரும்பிராய் புனித மிக்கேல் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.

புதிய நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக இ.இராசதுரை, உபதலைவராக செ.கணேஸ், செயலாளராக த.பேரின்பநாயகம், பொருளாளராக றோ.ரொணி, உபசெயலாளராக மு.சிவசுந்தரலிங்கம் ஆகியோருடன் மேலும் 10 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# உள்ளூராட்சி சபைகளின் ஆளணி அதிகரிப்பு அபிவிருத்தியை முன்னெடுக்க உதவும்

## வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், பெப்.15

பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டுமாயின் உள்ளூராட்சி சபைகளின் ஆளணி உருவாக்கம் அதிகரிக்கப்பட வேண்டும். இதன் பிரகாரம் நிதிப் பிரமாணம் (FR - 71) 71 இன் அடிப்படையில் புதிய ஆளணியை உருவாக்க தாபனப்பகுதியும், திட்டமிடல் பகுதியும் இணைந்து இதற்கான தயார்ப்படுத்தலை முன்னெடுக்க வேண்டும் என வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார். இந்த விடயம் [illegible] தெரிவிக்கையில்:-

வலி.மேற்கு பிரதேச சபையில் உள்ள ஆளணி என்பது மிகக் குறைவு. இவ் ஆளணியைக் கொண்டு பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது.

எனவே நிதிப் பிரமாணம் 71 இன் அடிப்படையில் அதற்கான பத்திரத்தை தயார் செய்து அதற்கான தேவை, வருமானம், செலவு, புதிய ஆளணியின் பெயர் என்பவற்றை குறித்து, பட்டியல் இட்டு ஒவ்வொரு ஆளணிக்குமான விடயப்பரப்பை முன்வைத்து செயலுருப் பெற வைக்க வேண்டும்.

இதனை சபையின் அங்கீகாரத்தோடு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் ஊடாக வடக்கு மாகாண ஆளுநருக்கு விண்ணப்பிப்பதன் ஊடாக ஆளணித் தேவையை நிறைவு செய்யலாம்.

2006 இல் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்ட போதும், அரசியல் ஸ்திரமற்ற நிலையினால் இந்த தேவைப்பாட்டை நடைமுறைப்படுத்த முடியவில்லை. தற்போது வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி முழுமையாக சபைகள் இயங்குகின்றன.

எனவே ஆளணி உருவாக்கம் தொடர்பான எமது தேவையை முன்வைப்பதன் ஊடாக எமது வலி.மேற்கு பிரதேச சபையின் ஆளணித் தேவையும், புதிய ஆளணி உருவாக்கமும் முற்றுப் பெறும்.

இதன் மூலம் தேவையான அபிவிருத்தியை விரைந்து முன்னெடுக்கலாம் என்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பழி ஓரிடம்; லாபம் வேறிடம்

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து போக்குவரத்துக் கட்டணங்களிலும் அதிகரிப்புச் செய்ய வேண்டும் என்று தெரிவித்து தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் நாடு முழுவதும் போக்குவரத்துச் சேவை கிட்டத்தட்ட முடங்கி விட்டது.

மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மக்களின் சிரமங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசு எவ்வளவுதான் கத்தினாலும், அரச போக்குவரத்து நிர்வாகத்தின் கையாலாகாத்தனம் அன்றைய தினம் பட்டவர்த்தனமாக வெளிச்சத்துக்கு வந்தது. தனியார் பஸ்கள் சேவையில் இல்லை என்றால் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் என்று எல்லாமும் செயலிழந்துவிடும் என்கிற நிலையில்தான் அரச போக்குவரத்துத்துறை இருக்கின்றது என்ற உண்மையை மீண்டும் ஒரு தடவை தனியார் பஸ் உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் உணர்த்தி இருக்கிறது.

எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப தமக்குக் கொடுத்த எரிபொருள் மானியம் போதாது என்பதே தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டத்துக்கான காரணம். இதனால் கட்டண அதிகரிப்பை அவர்கள் கோரினார்கள். அரசு முதலில் அதற்கு மறுப்புத் தெரிவித்தது.

போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிப்பால் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிடும் என்ற காரணத்தாலேயே தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்க மறுப்புத் தெரிவிப்பதாக அரசு கூறியது. அதற்காகவே தனியார் பஸ்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுவதாகவும் அது தெரிவித்தது. ஆனால், தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டத்தில் குதித்து நாடு முழுவதும் போக்குவரத்தை ஒரு நாள் சீர்குலைத்த பின்னர் அரசு பணிந்து வந்தது. 20 சதவீத கட்டண அதிகரிப்புக்கு இணங்கிக் கொண்டது.

அரசு கொடுத்த மானியத்தை ஏற்றுக்கொள்ளாமலும் மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமலும் தனியார் பஸ் உரிமையாளர்கள் நடந்து கொண்டதாலேயே அரசு கட்டணத்தை உயர்த்த வேண்டியதாகி விட்டது என்று இந்த விடயத்தை மேலோட்டமாகப் பார்க்கும் எவரும் எண்ணுவர். ஆனால், கட்டண அதிகரிப்புக்கான பழி தனியார் பஸ் உரிமையாளர்கள் மீது விழவேண்டும் என்பதற்காக அரசு ஆடிய நாடகமே இது.

இல்லையெனில் தனியார் பஸ் கட்டணங்களுக்கு நிகராக அரச போக்குவரத்து பஸ்களின் கட்டணங்களையும் அரசு நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து ஏன் அதிகரிக்க வேண்டும்? ஆகக் குறைந்த கட்டணமான 9 ரூபாயில் இருந்து அனைத்துக் கட்டணங்களிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபை நேற்று அதிகரிப்பைச் செய்திருந்தது.

தனியார் பஸ் உரிமையாளர்களின் அடாத்தால்தான் கட்டண அதிகரிப்பு என்ற அரசின் வாதம் உண்மையானால் அரச பஸ் கட்டணங்களில் அதிகரிப்புச் செய்திருக்க வேண்டிய தேவை இல்லை. தனியார் பஸ் உரிமையாளர்களுக்குக் கொடுத்த எரிபொருள் மானியத்தை அரச போக்குவரத்து பஸ்களுக்கும் கொடுத்து அவற்றை இயக்கி இருக்க முடியும்.

அரசு அப்படிச் செய்யாமைக்குக் காரணம் பழியை யார் மீதாவது போட்டு விட்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அது விரும்பியதே. இப்போது பஸ் கட்டண அதிகரிப்புக்காக அரசை யாரும் திட்டமாட்டார்கள்; அந்தத் திட்டுக்கள் எல்லாம் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அல்லவா. சபாஷ். சரியான நடிப்பு!

# எப்படி முயன்றாலும் இலங்கை பதிலளிக்காமல் தப்ப முடியாது

ரேணுபிரேம்

பிரிட்டனின் 'தி இன்டிபென்டன்' பத்திரிகையில் இமானுவெல் ஸ்டோக்கெஸ் என்ற பத்திரிகையாளர் எழுதிய கட்டுரையின் தமிழ் மொழியாக்கம் இது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் முன்வைக்கப்படும் இலங்கை தொடர்பான பிரேரணையில் கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாத இறுதியில் நடைபெற உள்ள அந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட உள்ள அந்தப் பிரேரணை இலங்கையின் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பானதாக இருக்கும். பிரிவினைவாதிகளான விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

2008 - 2009 ஆம் ஆண்டுகளில்தான் நடத்திய போரில் இலங்கை அரசு பல கொடுமைகளைப் புரிந்தது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இருந்த ''பாதுகாப்பு வலயங்கள்'' மீது வேண்டும் என்றே தாக்குதல் நடத்தியமை, நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பலவந்தமாக ஆள்களைக் காணாமல்போகச் செய்தமை, வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொதுமக்கள் கட்டுமானங்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடத்தியமை போன்ற குற்றங்களும் அவற்றுள் அடக்கம். ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான மக்கள் சண்டைகளில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

அத்தகைய குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் முழுமையாக மறுப்பதன் மூலமே முன்னதாகப் பதிலளித்து வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு, பின்னர் சில விடயங்களை ஒப்புக்கொள்ள ஆரம்பித்தது. ''போரில் ஒரு பொதுமகன்கூடக் கொல்லப்படவில்லை'' என்று மஹிந்தரின் கோஷத்தை எதிரொலிப்பதை விடுத்து பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டனர் என்பதை நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு கண்டறிந்து சொல்லியது.

சில நகர்வுகள் - முன்னேற்றங்கள் - ஏற்பட்டுள்ளன என்பதற்கான சமிஞ்ஞை அது. ஆனால் மேலோட்டமான அந்த விசாரணை, - அனைத்து வகையான குற்றங்களில் இருந்தும் அரசை அந்த விசாரணை விடுவித்தமை ஆச்சரியமளிக்கத்தக்கதல்ல - சுயாதீனமான வெளியக துறைசார் வல்லுனர்களின் கருத்திலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் நியமித்த வல்லுனர்கள் கடந்த ஆண்டு விடுத்த அறிக்கையில், ''பொதுமக்களின் வாழ்விடங்கள் மீது பரவலான எறிகணைத் தாக்குதலை நடத்தியமை உட்பட பல மீறல்கள் - குற்றங்கள் - தொடர்பான நம்பத் தகுந்த குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசு மீது உள்ளன'' என்று கண்டறிந்திருந்தது.

இந்த அறிக்கை வெளியானதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப் பிள்ளை, ''சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்ட மீறல்கள் குறித்துக் கவனம் செலுத்துவது என்பது ஒரு தெரிவோ கொள்கையோ கிடையாது, சர்வதேசச் சட்டங்களின் கீழ் அது மிக முக்கிய கடமை'' என்றார்.

கடமையோ இல்லையோ, தனது விடயத்தில் சர்வதேச விசாரணை ஒன்று நடப்பதை இலங்கை அரசு இதுவரை தடுத்தே வந்திருக்கிறது. இந்த மாத விசாரணைக்கு மீண்டும் முயற்சிக்கப் போகிறார்கள்.

> “இலங்கையில் சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றை நடத்தியாகத்தான் வேண்டும். அதே போன்று அமெரிக்காவும் பிரிட்டனும்கூட அத்தகைய விசாரணைகளை நடத்த வேண்டும்.

ஐ.நா. வல்லுநர் குழுவின் அறிக்கைக்குப் பரிந்து பேசுவோர், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமைகள் அமைப்புக்களின் அறிக்கைகளாலும் படுகொலைகள் குறித்த காணொலிகளை வெளியிட்ட உலக ஊடகங்களாலும் வெளிக்கொண்டு வரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அது தயாரிக்கப்பட்டது என்கிறார்கள்.

இலங்கைக்கும் அதன் அசைக்க முடியாத தலைமைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்த புலிகளின் ஆதரவாளர்கள் மேற்குலக ஊடகங்களை விலை கொடுத்துத் தம் வசப்படுத்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகளே இவை - என்ற வறட்டுக் குற்றச்சாட்டுக்களை அனுதாபிகள் நிராகரிக்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, அரசின் மறுப்பு நிலைப்பாட்டைப் பலப்படுத்தும் நோக்குடன் அதிகாரிகள் சிலர் கொடுத்த மறுப்பு வாதங்களே மேலதிக ஆதாரங்களாகிப் போனமைதான் உலக அரங்கில் இலங்கை அரசின் நம்பகத்தன்மை மோசமாகப் பாதிக்கப்படுவதற்குக் காரணமாயிற்று.

நிராயுதபாணிகளான ஆண்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் குற்றஞ்சாட்டிய 'சனல்-04' தொலைக்காட்சியின் காணொலி, புலி ஆதரவுச் சதிகாரர்களால் போலியாகத் தயாரிக்கப்பட்டது என்று இலங்கையின் உள்ளூர் நிபுணர்கள் குழு ஒன்று ''அறிவியல் ஆதாரபூர்வமாக நிரூபித்ததுடன்'' அதற்கான தமது சான்றுகளையும் பட்டியலிட்டது.

அதற்குப் பதிலளித்த ஐ.நா. அதிகாரி பிலிப் அல்ஸ்ரன், (இவர், கூட்டுக் கொலைகள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள் குறித்த ஐ.நாவின் விசாரணையாளர்) அந்த உள்ளூர் நிபுணர் குழு விட்ட தவறுகளை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி நிராகரித்தார். உலகின் முன்னணி தடயவியல் நிபுணர்கள், காணொலித் தடயவியல் ஆய்வாளர்களின் உதவியுடனும் ஆயுதங்களின் சான்றாதாரங்களுடனும் அந்தக் காணொலிகள் உண்மையானவை என்பதை அல்ஸ்ரன் நிரூபித்தார்.

அவருக்குப் பின்னர் அந்தப் பதவிக்கு வந்த கிறிஸ்ரோபர் கென்ஸ், அந்தக் காணொலிகள் உண்மையானவை என்பதை மீண்டும் நிரூபித்தார்.

போர் முடிவுக்கு வந்து கிட்டத்தட்ட ஆயிரம் நாள்கள் கடந்து விட்டன. இதுவரைக்குமான காலப்பகுதியில் தன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை அரசு பதிலளித்த விதம் - நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை உள்ளடக்கிப் பார்த்தாலும் - திருப்திகரமானதாக இல்லை. உண்மையையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்குப் பதில் அரசியல் சுய சேவையை மட்டுமே இலங்கை அரசு இந்தக் காலப்பகுதிக்குள் மேற்கொண்டுள்ளது.

நிகழ்ந்த அத்தனை மீறல்களுக்கும் குற்றங்களுக்கும் காரணமான உத்தரவுகளை இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவே வழங்கினார் என்று இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியமையால், போர் தொடர்பான குற்றச்சாட்டுகளுடன் அவரைச் சிறையில் தள்ளியமை மட்டுமே அரசு இதுவரை செய்தது. ஆனால், பொன்சேகாவின் கூற்றை ஆதரித்து இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் இருவர் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

ஒவ்வொரு முறை குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்போதும் ராஜபக்ஷவை நெருக்கமாக ஆதரித்து நிற்கும் தீவிர நாட்டுப் பற்றாளர்கள், இவை ''பொய்கள், வெறும் பிரசாரம்'' என்றும் முன்வைக்கப்படும் ஆதாரங்கள் அரசுக்கு எதிராக சதிகார புலம்பெயர் தமிழர்களின் போலி நடிப்பு என்றும் தெரிவித்து வருகின்றனர். இந்தவித காரணங்களைக் கூறிக்கொண்டு அரசு தொடர்ந்து இருக்க முடியாது.

போர் வெற்றிகளின் மீதான வீராப்புகளில் அவர்கள் மயக்கம் தெளிந்து எழும்போது அரசு தரப்பில் சொல்லப்பட்டவைகளின் உண்மைத் தன்மைகள் தொடர்பாக இலங்கைக்கு எதிராகக் கேள்வி எழுப்புவதை எவரும் தடுத்துவிட முடியாது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த விளையாட்டில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் குறித்துத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் சுயாதீனமாக விசாரிக்கப்படுவதை இலங்கை அரசு அனுமதித்தேயாக வேண்டும். தன்னிடம் மறைக்க எதுவுமே இல்லை என்பதை அது நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இந்த இடத்தில், ஈராக் போரின் போது பலூஜா மற்றும் ஹடிதா அமெரிக்கப் படையினர் செய்யாத கொடுமைகளா? பிரிட்டனின் ஹுட்டன் அல்லது விட்கரி அறிக்கைகள் செய்யாததையா இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு செய்து விட்டன? என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அதற்காக இலங்கை விசாரணை நடத்தக்கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. இலங்கையில் சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றை நடத்தியாகத்தான் வேண்டும். அதேபோன்று அமெரிக்காவும் பிரிட்டனும்கூட அத்தகைய விசாரணைகளை நடத்த வேண்டும்.

அதற்காக உங்கள் நடவடிக்கைகளை நீங்கள் நிறுத்திவிடாதீர்கள். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சூறாவளிக்குள் வடக்கு தாதியம்

விஷ்ணு

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் போர் நடைபெற்று வந்த காலத்தில் வடக்கில் பிறரது தலையீடின்றி சுதந்திரமாகச் செயற்பட்டு வந்த பல துறைகள் 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன.

வடக்கின் கல்வித்துறையில் ஏற்கனவே அளவுக்கு அதிகமான அரசியல் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் வளர்ச்சிக்கு அத்திபாரமிடுகின்ற, சுதந்திரமாகச் செயற்பட வேண்டிய கல்வித்துறையிலேயே இப்போது அரசியல் விளையாடுகிறது. பல்கலைக்கழகம் முழுவதும் அமைச்சர் ஒருவரின் பிடியில் சிக்கிக்கிடக்கிறது. அங்கு அமைச்சர் சொல்பவர்களுக்குத்தான் நியமனங்கள், அமைச்சர் கைகாட்டுபவர்களுக்குத்தான் விரிவுரையாளர் நியமனங்கள் என்கிற அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

இதேபோன்று வடக்கின் சுகாதாரத்துறையிலும் அரசியல் அதிகளவில் விளையாடுகிறது. போர் இடம்பெற்ற காலங்களில் எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாது சுதந்திரமாக இயங்கிவந்த துறையாக வடக்கில் மருத்துவத்துறையே திகழ்ந்து வந்தது. ஆனால் அதிலும் இப்போது அரசியல் விசம் கலக்க ஆரம்பித்துவிட்டது.

மருத்துவத்துறையுடன் நெருங்கிய தொடர்புள்ள தாதியர் பிரிவில் அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் இந்த உண்மையை வெளிப்படுத்துகின்றன. தாதிய மாணவர் தெரிவு, தாதியர் நியமனம் என்பன முழு அளவில் அரசியல் செல்வாக்கிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாகாணங்களை விட தாதியர் பற்றாக்குறை வடக்கிலேயே நீண்டகாலமாகத் தொடர்கிறது. இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியாத பிரச்சினையாக அது தொடர்கிறது. நெடுங்காலமாகத் தொடரும் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்ட அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. வழமை போன்று மிகக் குறைந்தளவான மாணவர்களைத் தாதியர்களாகப் பயிற்றுவிக்கும் செயலே தொடர்கிறது. "இந்த ஆண்டு நிலைமை மேலும் மோசமாகி உள்ளது'' என்கின்றன தொடர்புடைய வட்டாரங்கள்.

யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரிக்குப் போதியளவு மாணவர்களை உள்வாங்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு அரசியல் உள்நோக்கங்களே காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதைவிட இம்முறை இடம்பெற்ற தாதிய மாணவர் தெரிவிலும் அரசியல் புகுந்து விளையாடியதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகின்றனர். உள்நாட்டுப் போர்க் காலத்தில் யாழ். தாதியர் கல்லூரிக்கு வடக்கில் இருந்தே மாணவர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். மிகக் குறைந்த அளவினதாகவே அதுவும் இருந்து வந்தது. ஆனால் இந்த ஆண்டு அந்த எண்ணிக்கையும் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டுள்ளது.

அதைவிட கடந்த வருடங்களில் யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரிக்கு நியமிக்கப்பட்ட எண்ணிக்கை யளவிலான மாணவர்கள் கூட இந்த முறை நியமனமாகவில்லை.



யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் தேசியக்கொடிகளுடன் கலந்துகொண்ட யாழ். தாதியர்கள்.

ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரிக்குத் தெரிவு நடைபெறும். இரு அணியினர் வருடாந்தம் தெரிவு செய்யப்படுவர். ஒவ்வொரு தடவையும் 500க்கும் மேற்பட்டோர் இதற்கு விண்ணப்பிக்கின்றனர். அவர்களில் நேர் முகத்தேர்வின் அடிப்படையில் சுமார் 450 பேர் தகுதியானவர்களாக இருந்த போதும் சுமார் 250 பேர் வரையிலானோரே தெரிவு செய்யப்படுகின்றனர். வடக்கில் தாதியர் பற்றாக்குறை நிலவுகின்றமை தெரிந்தும் தாதிய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எவரும் முன்வருவதில்லை.

இந்தமுறை தாதியர் கல்லூரிக்கு பல நூற்றுக்கணக்கான வடக்கு மாணவர்கள் விண்ணப்பித்துவிட்டுக் காத்திருக்க, அவர்களைத் தட்டிவிட்டு அம்பாறையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு யாழ். தாதியர் கல்லூரியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் அங்குள்ள தாதிய கல்லூரியில் சேர்க்கப்பட்டு வந்தனர். தவிர்க்க முடியாத பட்சத்தில் வவுனியா தாதியர் கல்லூரிக்கு குறிப்பிட்ட அளவானவர்கள் அனுப்பப்பட்டனர். ஆனால் இம்முறை யாழ். தாதிய கல்லூரிக்கு வடக்கு மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து பெரும் எண்ணிக்கையிலான அம்பாறை மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து இம்முறை சுமார் 56 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். "இது எமக்கு இழைக்கப்பட்ட அரசியல் வஞ்சத்தனம்'' என்று கோபத்துடன் தெரிவித்தார் கல்லூரியில் அனுமதி கிடைக்காத ஒருவர்.

"யாழ், கிளிநொச்சி மாணவர்கள் இங்கு பயிற்சி முடித்த பின்னர் இங்கேயே பணியாற்றியவர்கள். அம் பாறையிலிருந்து வந்த வர்கள் இங்கு தங்கி யிருந்து பணியாற்றுவார்களா? அவ்வாறு பணியாற்றுவதற்குச் சம்மதித்தாலும் எத் தனை வருடங்கள் யாழ். வைத்தியசாலைக்ளில் பணியாற்றச் சம்மதிப்பார்கள்? தமது குடும்பத்தவர்கள், உறவினர்கள் அங்கிருக்க இவர்கள் மட்டும் இங்கு தங்குவார்கள் என்பது கேள்விக்குறியே" என்று நிலைமையை விளக்கினார் வடக்கின் மருத்துவத்துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர்.

தவிர, அம்பாறையிலிருந்து வந்தவர்களும் தமது பயிற்சிக் காலமான மூன்று வருடங்களுக்கும் யாழ்ப்பாணம் வந்து போவதில் பெரும் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். அம்பாறையைச் சேர்ந்த ஒரு மாணவி ஏற்கனவே போக்குவரத்துப் பிரச்சினையைக் காரணம் காட்டி தனது நியமனக் கடிதத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டார்.

தாதிய பயிற்சி பெறத் தகுதியான பல மாணவர்கள் காத்திருக்க போக்குவரத்துப் பிரச்சினை உள்ள மாணவர்களை யாழ். தாதியர் கல்லூரிக்கு நியமனம் செய்த அரசின் செயலுக்குப் பின்னால் அரசியல் நோக்கம் தவிர்ந்த வேறு என்ன இருக்கின்றன என்று கேட்கிறார்கள் அதிகாரிகள்.

இந்த முறை தாதிய மாணவர்களாக உள்வாங்கப்பட்டவர்களிலும் பெரும்பாலானவர்கள் பட்டதாரிகளாவர். வேறு வேலை கிடைக்காததால் தாதிய சேவையைத் தெரிவு செய்துள்ளனர் என்று கூறுகின்றனர்.

தாதியக் கல்லூரியினர் மேலும் மாணவர்களுக்குப் பயற்சி வழங்கத் தயாராகவே இருக்கின்றனர். ஆனால் சுகாதார அமைச்சோ போதுமான அளவு நியமிக்கவில்லை, ஆள்களைச் சேர்ப்பதில்லை. இம்முறை சுமார் 161 பேரை சுகாதார அமைச்சு இங்கு சேர்த்தபோதும் 46பேர் இணையவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்குக்கு வெளியே உள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

திட்டமிட்ட அரசியலால் தாதியர் உருவாக்கமும் மருத்துவத்துறையும் வடக்கில் பாதிக்கப்பட்டு வருகின்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் 700க்கும் மேற்பட்ட தாதியர்களுக்கு வெற்றிடம் இருக்கும்போது போதியளவு தாதியர்களை உருவாக்குவதற்கும் வடக்கில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கும் அரசு பின்னடிப்பதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்? 'வடக்கின் வசந்தம்' என்று இதைத்தான் கூறுகிறார்களா? ✱

# மீண்டெழ முடியாமல் திணறும் வன்னிக் குடும்பங்கள்

பா.துவாரகன்

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் அந்தக் குடும்பத்தில் 7 அங்கத்தவர்கள் இருந்தனர். அது ஒரு விவசாயக் குடும்பம். தமக்குத் தேவையான தேவைகளைச் சுயமாகவே சம்பாதித்துக் கொள்ளும் திறன் அந்தக் குடும்பத்துக்கு இருந்தது. சொல்லிக் கொள்ளும்படி ''ஓகோ'' என்று இல்லாவிட்டாலும் அந்தக் குடும்பத்தினர் தன்னிறைவுடன் வாழ்ந்தார்கள்.

2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட இடப்பெயர்வு மற்றவர்களைப் போலவே இந்தக் குடும்பத்தின் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டது. அவர்களது சொந்த இடத்தில் இருந்து இடம்பெயர்ந்து அக்கராயன்குளம் ஒன்பதாம் கட்டைப் பகுதியில் தற்காலிகமாகக் குடியேறினர். அங்கும் ஏதோ கூலி வேலை, விவசாயம் என்று இரண்டு வருடங்களை அந்தக் குடும்பத்தால் கடத்த முடிந்தது. அதன் பின்னர் அங்கிருந்தும் இடப்பெயர்வு.

கண்டாவளை, புளியம்பொக்கணை, இருட்டுமடு, சுதந்திரபுரம், தேவிபுரம், இரணைப்பாலை, மாத்தளன் என இடப்பெயர்வுகள் தொடர்ந்தன. ஒவ்வொரு இடம்பெயர்விலும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து புதுமாத்தளனில் எல்லாவற்றையும் தொலைத்து கையறு நிலையில் நின்றது அந்தக் குடும்பம்.

30 ஆண்டுகள் உழைப்பில் தேடிய சொத்துக்கள், கால்நடைகள் எல்லாமும் போயின. இறுதியில் இழப்பதற்கு எஞ்சியது உயிர் மட்டும்தான்.

ஒருவேளை உணவு கிடைத்தாலே போதுமென்ற வாழ்க்கையில் புதுமாத்தளனில் தொடர்ந்த வாழ்க்கையையும் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி எறிகணை ஒன்று பறித்துச் சென்றது.

> நிவாரண உதவிகள் இல்லை.
> வாழ்வாதார உதவிகள் இல்லை,
> பிள்ளைகளின் கல்வியைத்
> தொடர வசதியில்லை.

இராணுவம் ஏவிய எறிகணை ஒன்று இந்தக் குடும்பத்துக்கு அருகில் வீழ்ந்து வெடித்ததில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொல்லப்பட்டனர்,

குடும்பத் தலைவரான, அழகன் இராசலிங்கம் அவரது பிள்ளைகளான இராசலிங்கம் யோகதர்சினி, இராசலிங்கம் பிரிவீனா, இராசலிங்கம் தர்சன், ஆகிய மூன்று பிள்ளைகளும் அந்த இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

இதனையடுத்து அவர்களது இறுதிச் சடங்கைக்கூட சரியாகச் செய்ய முடியாமல் குடும்பத்தின் எஞ்சிய உறுப்பினர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர். பின்னர் செட்டிகுளம் அருணாசலம் நலன்புரி நிலையத்தைத் தஞ்சமடைந்தது அந்தக் குடும்பம்.

2010 ஜூலை மாதம் 14 ஆம் திகதி நான்கு ஆண்டுகளின் பின்னர் அவர்களது சொந்தக் காணியில் அவர்கள் எறியப்பட்டனர்.

கடந்த சில தினங்களின் முன்னர் அந்தக் குடும்பத்தைச் சென்று பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இடம்பெயர்ந்து சென்றபோது ஏழு அங்கத்தவர்களுடன் சென்ற குடும்பம் மூன்றே பேருடன் திரும்பி இருக்கிறது. அதிலும் வீட்டின் உழைப்பாளிகளை இழந்துள்ளது.

விதவைப் பெண்ணும் எஞ்சிய இரு பிள்ளைகளுமாக நடைப்பிணமாக அந் தக் குடும்பம் மீளக்குடியமர்ந்துள்ளது.

சொந்த இடத்துக்கு குடும்பம் வந்தபோது அங்கு அவர்களது வீடு இல்லை. பயன்தருமரங்கள் இல்லை. பார்க்குமிடமெல்லாம் பற்றைக் காடுகள். வந்தவர்களால் மரநிழல் ஒன்றையே வாழ்விடமாக்கிக் கொள்ள முடிந்தது.

பின்னர் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் அவர்களுக்குத் தற்காலிக வீட்டைக் கட்டிக் கொடுத்தது. பேருக்கு ஓர் இருப்பிடம் இப்போது இருக்கிறது. ஆனால், வாழ்வாதாரம்? வருமானம்?

நிவாரண உதவிகள் இல்லை. வாழ்வாதார உதவிகள் இல்லை, பிள்ளைகளின் கல்வியைத் தொடர வசதியில்லை.

''நாளாந்த உணவுக்கும் தேவைகளுக்குமே எதுவுமின்றிச் சிரமப்படுகையில் கல்வியை எப்படி நினைத்துப் பார்ப்பது?'' என்று கேட்கிறார் குடும்பத் தலைவி.

அன்று ஒரு குறையும் இன்றி வாழ்ந்த குடும்பம் இன்று, ஒருநேர உணவுக்கே அல்லாடுகின்றது.

போரின் வடுக்களும் அதனால் ஏற்பட்ட வலிகளும் வன்னியில் ஏராளம். அவை ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வகையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சி சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாகச் செல்லும் வீதியில் உள்ள பனிக்கையடி என்ற கிராமத்தில் நிரந்தரமாக வசித்து, இப்போது மீளக்குடியமர்ந்த குடும்பம் ஒன்றின் வலிகளும் வேதனைகளுமே இவை.

வன்னி மண்ணில் மீளக் குடியமர்ந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் பல குடும்பங்களின் நிலைமைக்கு இந்தக் குடும்பம் ஓர் உதாரணம்.

இதேபோன்று ஆயிரம் ஆயிரம் குடும்பங்கள், சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து தங்களின் நாளாந்த வாழ்க்கையை நகர்த்த முடியாமல் வாழ்வில் விரக்தியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபக்தி

''பக்தி மூன்று வகைப்படும்' என்கிறார் திருமுருக கிருபானந்த வாரியார். தெய்வ பக்தி, அடியார் பக்தி. குருபக்தி.அடியார் பக்தியை விட, தெய்வபக்தியை விட, குருபக்தி தான் மிகவும் சிறந்தது என்கிறார் அவர். தெய்வங்களிடம் செய்த பாவம் குருநாதரிடம் தீருமாம். குருநாதரிடம் செய்த பாவம் தெய்வத்திடம் தீராதாம்.

''ஒரு காடு'' அங்கே அயோத தௌமியர் என்று ஒரு தபோதன். அவர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து குருகுலம் நடத்திக் கொண்டிருந்தார். பல திறம்பட்ட மாணவர்கள் அதில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். பாஞ்சால இராஜகுமாரன் ஒருவனும் அந்தக் குருகுலத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவன் பெயர் ஆருணி. மிகவும் கெட்டிக் காரனாக இருந்தான். அவன் தான் அங்கே முதல் மாணவன். ஒரு நாள் குருநாதர் அந்த அரசகுமாரனைக் கூப்பிட்டு, ''நமது குருகுலத்துக்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகிப் பயிரை அழிக்கிறது. அதனால் நீபோய் மடையை அடைத்து விட்டு வா'' என்றார். உடனே அந்த ராசகுமாரன் புறப்பட்டான்.

''நான் பெரிய இடத்துப் பிள்ளையே, இராஜகுமாரனே, பெரும் செல்வாக்கோடு வளர்ந்தவனே நான் போய் வயலில் வேலை செய்வதா? என்றெல்லாம் அவன் நினைக்கவில்லை.

''குருநாதர் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது எமது கடமை'' என்று நினைத்தான். உடனே ஒரு மண் வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு புறப்பட்டு வயலுக்குப் போனான். அங்கு தண்ணீர் கரையை உடைத்துக் கொண்டு வயலுக்குள் பாய்ந்து கொண்டிருந்தது. இவன் மண்வெட்டியால் களிமண்ணை புல்லோடு சேர்த்து வெட்டிப் போட்டான். இருந்தாலும் மடையை அடைக்க முடியவில்லை. தண்ணீர் வேகமாக வயலுக்குள்ளே போய்க் கொண்டிருந்தது. போடுகின்ற மண்ணெல்லாம் கரைந்து கரைந்து போய்க் கொண்டிருந்தது. இருந்தாலும் இவன் தன்னுடைய முயற்சியைக் கைவிடவே இல்லை. வெட்டி வெட்டிப் போட்டுக் கொண்டே இருந்தான். காலையில் அங்குபோனவன் சாயந்தரம் வரைக்கும் இப்படியே செய்து கொண்டிருந்தான். உடம்பும் மனமும் சோர்ந்து போய்விட்டது.

இருந்தாலும் குருநாதர் இட்ட கட்டளையை நிறைவேற்றாத தான் இன்னமும் இருக்க வேண்டுமா என யோசித்தான். என்ன செய்யலாம் என்று நினைத்தவன், குரு நாதர் இட்ட பணிக்காக இந்த உடம்பையே தியாகம் செய்யலாம் என்று முடிவு செய்தான். தண்ணீர் பாயும் வாய்க்காலுக்குக் குறுக்கே வீழ்ந்து மடையை அடைத்துக் கொண்டு படுத்துவிட்டான். இது மற்ற மாணவர்களுக்குத் தெரியாது.

''அன்றைக்கு இரவு, ஒரு விளக்கு முன்னால் உட்கார்ந்து குருநாதர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். முதல் வரிசையில் இருக்கின்ற இராஜகுமாரனைக் காணவில்லை. ''ஆருணி எங்கே?'' என்று மாணவர்களை விசாரித்தார்.

''சுவாமி அவன் காலையில் வயலுக்கு மடையை அடைப்பதற்காகப் போனவன், இன்னும் திரும்பி வரவே இல்லை'' என்றான் ஒரு மாணவன்.

குருநாதர் உடனே ஒரு தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு மாணவர்கள் புடை சூழ வயலுக்குப் போனார். அங்கே அவனைக் காணவில்லை. ''ஆருணி... ஆருணி....'' என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார். ''நான் இங்கே இருக்கிறேன் குருநாதா? என்று காலுக்கு கீழ் சத்தம் கேட்டது. குனிந்து பார்த்தார் அவன் மடையிலே படுத்திருந்தான். ''ஏன் இவ்வாறு படுத்திருக்கிறாய்?'' என்றார் குரு.

''காலையிலிருந்து இந்த மடையை அடைத்துப் பார்த்தேன் சுவாமி. முடியவில்லை. அதனால் தான் இப்படி குறுக்கே படுத்துவிட்டேன் என்னைத் தாண்டுவதற்குப் பயந்து தண்ணீரே தேங்கி நின்றுவிட்டது என்றான்.

அவனுடைய குரு பக்தியையும், அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி நிற்கிற தண்ணீரின் தேக்கத்தையும் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டு விட்டனர்.

''ஆருணி, எழுந்து வா'' என்று கூப்பிட்டார் குருநாதர். அவன் தண்ணீரைப் பிளந்து கொண்டு எழுந்து வந்தான். அதனால் அவனுக்கு உத்தாலகன் என்று பெயர் வந்ததாம். உத்தாலகன் என்றால் தண்ணீரைப் பிளந்தவன் என்று அர்த்தம்.

அந்த உத்தாலகன் போன்று இந்தக் காலத்து மாணவர்களுக்கும் 'குருபக்தி வேண்டும் என்று கூறினார். ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். உடனே மாணவர்கள் எழுந்து நின்று ''நீங்கள் எங்களை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவே இல்லை. அன்றைக்கு ஒருவன் தான் அப்படிச் செய்தான். இன்றைக்கு ஏகப்பட்ட உத்தாலகர்கள் இருக்கிறோம். எங்கள் வாத்தியார் கட்டளை இட்டால் உடனே வயலுக்குப்போய் மடையின் குறுக்கே படுத்துக்கொள்ள இந்த வகுப்பில் உள்ள மாணவர்கள் அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம்'' என்றனர். ''அப்படியா? என்று சந்தோசமாக ஆசிரியர் பதிலளித்தார். அப்போது ஒரு மாணவன் அடக்கமாக எழுந்து நின்று, ''வகுப்பில் பாடம் கேட்பதை விட மடையில் படுத்துக் கொள்வது கஷ்டமான காரியமாக இருக்காது'' என்றான்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பல்வேறு போட்டிகளில் முதன்மை பெற்ற பருத்தியடைப்பு கதிரேசானந்தா

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் இருந்தே ஊர்காவற்றுறை கல்வி வட்டாரத்தில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு, கலை நிகழ்வுகள், பாடல்களிலும் முன்னணி வகித்துப் போட்டிகளில் தனக்கெனத் தனித்துவம் மிக்கதாகவும் முதன்மை பெற்றதாகவும் பருத்தியடைப்பு கதிரேசானந்தா வித்தியாலயம் விளங்கியுள்ளது.



அந்தக் காலத்திலேயே ஆங்கிலக் கல்வியைப் புகட்டுவதில் அதிபர், ஆசிரியர்கள் அக்கறை கொண்டிருந்தமை அதன் வெற்றிக்குக் காரணமாக இருந்துள்ளது. ஆங்கில ஆசிரியையாக அப்போது பணியாற்றியவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்த திருமதி பு.பேரம்பலம். இவர் நடனத்திலும் திறமை மிக்கவராக விளங்கியதால் பருத்தியடைப்பு கதிரேசானந்த வித்தியாலயம் சிறந்த கலைக்கூடமாக விளங்கியதாக முதியவர்கள் தெரிவித்தனர்.

1974 இல் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற முதலாந்தர ஒன்றிணைந்த மாதிரி வகுப்பு நடத்தலில் பாலர்களுக்கான ஆடலும், பாடலும் என்ற பாடத்தில் மிகவும் திறமையுடன் இப்பாடசாலை விளங்கியது.

இது அப்போது இங்கு வருகை தந்திருந்த வடமாநிலக்கல்வி அதிபதி கல்வித் திணைக்கள பாடவிதான சபையைச் சேர்ந்த கல்வி அதிகாரி குலசேகரம், வட்டாரக் கல்வி அதிகாரி வ.நடராசா ஆகியோர் ஆடலும் பாடலும் பாடத்தில் பாலர்கள் காட்டிய திறமையை வியந்து பாராட்டியதாகப் பாடசாலைச் சமூகம் தெரிவிக்கின்றது.

இது தவிர பாலர் வகுப்புக்களுக்கு உட்பட்ட வகையில் அமைந்த பொருள்காட்சியில் நாள் காட்டி, நாள் நிலைப் பெட்டி, வேட்டையாடுதல் போன்றவையும் எண் சட்டம், மாணவர்களுக்கிடையிலான ஓட்டப் போட்டிகள் என்பவையும் இந்த அதிகாரிகளுக்குப் பிடித்தமானதாக அமைந்திருந்தது எனவும் அறியப்படுகின்றது. பாலர் வகுப்பு ஆசிரியை திருமதி யோ.இராமச்சந்திரன் முன்னோடி ஆசிரியையாகவும் சங்கீதத்தில் பயிற்சி பெற்றவராகவும் இருந்தமை இவற்றுக்கு உறுதுணையாக இருந்துள்ளது. இங்கு பயின்ற மாணவர்கள் பலர் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறக் காரணமாக விளங்கியவர் ஆசிரியர் சி.பேரம்பலம். இவர் விடுமுறைக் காலத்திலும் மாணவர்களுக்கு வகுப்புக்களை நடத்தி ஊக்கமளித்துள்ளார்.

இங்கு அதிபராக இருந்த க.செல்வராசா அனுபவம் மிக்கவர். 18 வருடங்கள் தலைமையாசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றியுள்ளார். மாணவர்கள் கல்வி, சமயம், கலை நிகழ்வுகளில் அக்கறை கொள்ளக் கூடியதாகத் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து இப்பாடசாலைக்குப் புகழைத்தேடிக் கொடுத்தவராவார். இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் பலர் ஆசிரியர்களான, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, எழுதுவினைஞர்களாகச் சிறந்த பதவிகளில் இருந்து வருகின்றனர்.

இடப் பெயர்வின் முன்னர் ஐநூறு மாணவர்களையும் அதிபருடன் ஏழு ஆசிரியர்களையும் கொண்டதாக இருந்துள்ளது. இன்று எல்லா வளங்களையும் இழந்து கட்டடமே முற்றாக அழிந்து வெறும் காணியாக உள்ள இங்கே தற்போது மீண்டும் உயிர்த்தெழும் பீனிஸ் பறவை போன்று சொந்த மண்ணில் முளையிட்டிருக்கும் கட்டடம் மேலும் பல வசதிகளை உள்ளடக்கியதாக மாற்றமடைய வேண்டும். இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு முன்னர் போல் சிறந்த பணியாற்றும் பொறுப்பை இயன்றவரை சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்பதே தமது இலட்சியம் எனக் கூறும் அதிபர் திருமதி சேதுமதி காந்தியம் உடன், ஆசிரியைகளும் கோட்டக்கல்வி அதிகாரி ரி.சோமசேகரம், வலயக் கல்வித்திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்குவதாகவும் தெரிவிக்கின்றார். (முற்றும்)

**லக்ஸ்மன்**

# வழிப்போக்கரின் காவல் தெய்வமாக மண்டைதீவு வழிப்பிள்ளையார்

மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் இந்த விநாயகரை மண்டைதீவு மக்கள் வழிப்பிள்ளையார் என்று கூறி, பக்தியோடு தொழுகின்றனர். மண்டைதீவு பண்ணை வீதியில் உள்ள கடற்படை முகாமைத்தாண்டி சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை சென்றால் குடிமக்களற்ற பகுதியில் பிரதான வீதியின் மேற்குப் புறத்தில் இந்த ஆலயம் உள்ளது.



சிறிய ஆலயமாக உள்ள போதும், அங்கிருந்து மக்களைப் பாதுகாத்து அருள்பாலிக்கும் இந்த பிள்ளையார் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம் என்று மண்டைதீவு மக்கள் தமது நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர்.

பல நூற்றாண்டு பெருமை மிக்க தெய்வமாக வழிப்பிள்ளையார் உள்ளார் என்றும், மக்கள் போக்குவரத்துக்கு இந்த வழியைப் பயன்படுத்தியே ஊரின் குடியிருப்புப் பகுதிக்குள் செல்ல வேண்டும், இரவு நேரத்தில் இந்த வழியால் செல்வதில் மக்கள் பீதியடைந்திருந்தனர்.

எனினும், குறிப்பிட்ட சிலர் இரவில் தாங்கள் வரும் போது தமக்குப் பின்னர் ஒருவர் நடந்து வருவது தமக்கு ஆறுதலாக இருப்பதாகவும், ஊர்மக்கள் குடியிருப்பு வரை அந்த மனிதர் பின் தொடர்வதும் ஊர் எல்லையில் திரும்பிப் பார்த்தால் அந்த இடத்தில் எவரையுமே காணமுடியாது எனவும், தமது முன்னோர்கள் கூறுவதாகவும். அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர், மண்டைதீவைச் சேர்ந்த முதியவர் ஒருவரின் கனவில் தோன்றிய பிள்ளையார் இந்த இடத்தில் தம்மை வைக்குமாறு கோரியதாகவும் இது சுமார் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட சம்பவம் எனவும், இந்தச் சம்பவத்தை தமது முன்னோர்கள் கூறியதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

கனவில் தோன்றிய விநாயகரின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக ஆரம்பத்தில் ஒரு பூவரசு மரத்தின் கீழ் மிகவும் சிறிய ஒரு இடம் அமைத்து, அதில் விநாயகரை வைத்து வழியால் போய் வருவோர் வழிபட்டுச் சென்றதாகவும் இப்போதுள்ள கோயிலை அமைத்து சொற்ப வருடங்களெனவும் கூறப்பட்டது.

இந்த ஆலயம் கட்டப்பட்டு, கடந்த ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இப்போது எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் வைக்கப்பட்டது. எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் வைக்கும் நிகழ்வு 5.2.2012 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதற்கான நிதியைத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினர் வழங்கியிருந்தனர். பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தச் சிறிய ஆலயத்தின் வடபகுதியின் வீதியில், கடல் நீர் தடுப்பு அணை கட்ட வந்தவர்கள் மக்கிகளைக் குவித்துள்ளதால், ஆலயத்தைச் சுற்றிக் கும்பிடுபவர்கள் சிரமப்பட வேண்டியுள்ளது.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக பெரிய அளவிலான சிமெந்துப் பொதிகளும் வைக்கப் பட்டுள்ளன. இவைகள் மக்கள் வழிபாட்டுக்கும் பூசைகளுக்கும் இடையூறாக உள்ளன.

தினமும் பூசைகள் இடம் பெறுவதாகவும் சிமெந்துப் பொதி, கொட்டப்பட்ட மக்கி என்பவற்றை சம்பந்தப்பட்டவர்கள் உடன் அகற்றி, தமது வழித்துணையான வழிப்பிள்ளையாரை வழிபடவும், மக்கள் ஒழுங்கான வழிபாடுகளைச் செய்ய உதவ வேண்டும் எனவும் ஆலயத்தின் நிருவாக சபை இதன் சிறப்புக்கு மக்களின் ஒத்துழைப்புடன் திருப்பணிகளைச் சிறப்புடன் நடத்த உதவுவார்கள் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புக்கு ஆதரவு அமெரிக்கா அறிவிப்பு

## தெரிவுக்குழு, பேச்சுவார்த்தை விடயங்களில்

**தெரிவுக்குழு மூலமே எந்தவொரு தீர்வுத் திட்டம் குறித்தும் பேசமுடியும் என்றும், தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு பிரதி நிதிகளை நியமிக்காதவரை அவர்களுடன் பேசப்போவதில்லை என்றும் இலங்கை அரசு விடாப்பிடியாக உள்ளது.**

கொழும்பு, பெப்.15

இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தும் விடயத்திலும், தெரிவுக்குழு விவகாரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப்பாட்டை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்வைத்து ஆராயலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறி வருகிறது.

ஆனால் தெரிவுக்குழு மூலமே எந்தவொரு தீர்வுத் திட்டம் குறித்தும் பேசமுடியும் என்றும், தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு பிரதிநிதிகளை நியமிக்காதவரை அவர்களுடன் பேசப்போவதில்லை என்றும் இலங்கை அரசு விடாப்பிடியாக உள்ளது.

இந்த நிலையில், முதலில் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடத்தப்படும் பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப்பாட்டை தெரிவுக்குழு முன்வைத்து ஆராய்வதே பொருத்தமானது என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்காவின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச்செயலர்றொபேட் ஓ பிளேக்,

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்களுக்கான அடிப்படைகளை உருவாக்க வேண்டும் -என்று கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் நல்லமுறையில் நிறைவுபெற அமெரிக்கா உதவும். இந்தப் பேச்சுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துரையாட முடியும்-என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா வெளியிட்டுள்ள ஆதரவு, இலங்கை அரசுக்கு மேலும் ஒரு பின்னடைவாக கருதப்படுகிறது. (ங)




நீர்கொழும்பு மீனவர்கள் எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்று மூன்றாவது நாளாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையைத் தாங்கியவாறு நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு பிரயோகம் நடத்தியுள்ளனர்.

## ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்கும் அமெரிக்கா

கொழும்பு, பெப்.15

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரிகள் நேரடியாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இரண்டு நாள் பயணமாக கொழும்பு வந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கும், பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம், மனிதஉரிமைகளுக்கான கீழ்நிலைச்செயலர் மரியா ஒட்ரேரோவும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

இதன்போதே ஜனாதிபதி மஹிந்தவுக்கு அமெரிக்காவின் தீர்மானம் அதிகாரபூர்வமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதனை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய றொபேட் ஓ பிளேக்கும், மரியா ஒட்ரேரோவும் உறுதி செய்துள்ளனர்.

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்தவில்லையென்றும், ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்றும் பிளேக் தெரிவித்துள்ளார்.

தானும், மரியா ஒட்ரேரோவும் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்தபோது அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு குறித்து விளக்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட மரியா ஒட்ரேரோ, பொறுப்புக் கூறுதல் மற்றும் மனிதஉரிமைகள் தொடர்பாக இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவளிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது குறித்து ஜனாதிபதி மஹிந்தவுக்கு தாம் அதிகாரபூர்வமான முறையில் உறுதிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் என்ன, அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தவுள்ளது என்பது குறித்து இலங்கைக்கு விளக்கமளிக்க இந்தத் தீர்மானம் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ங)

## ஜெனிவாவில் முன்வைக்கப்படவுள்ள தீர்மானம் பற்றி ஒட்ரேரோ விளக்கம்

கொழும்பு, பெப்.15

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவளிக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை அரசுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள அந்தத் தீர்மானம் என்ன என்று விளக்கமளித்துள்ளார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான கீழ்நிலைச் செயலர் மரியா ஒட்ரேரோ.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேலும் உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்றும், பொறுப்புக்கூறும் விவகாரங்களுக்குப் பதிலளிக்குமாறும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் இலங்கை அரசை இந்தத் தீர்மானம் கேட்டுக்கொள்ளும் - என்றும் ஒட்ரேரோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்தவுடன் கலந்துரையாடியதாகவும், அப்போது அவர், தாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து விரிவாக ஆராய்ந்து வருவதாகத் தன்னிடம் உறுதியளித்ததாகவும் குறிப்பிட்டார்.

அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான இலங்கையின் திட்டங்களை வெளிப்படுத்துமாறு அவரிடம் தான் வலியுறுத்தியதாகவும் ஒட்ரேரோ தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் நம்பகமான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2005 ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்துக்குப் பின்னர் கொழும்புக்கு வந்த அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரி மரியா ஒட்ரேரோ என்பது குறிப்பிடத்தக்கது.


## தெல்லிப்பழை வைத்தியசாலையில் கண் கிளினிக்

அளவெட்டி, பெப்.15

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து வருகை தரும் கண் வைத்திய நிபுணரால் நடத்தப்படும் கண் கிளினிக் ஒவ்வொரு மாதமும் வரும் மூன்றாவது புதன்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்று வருகிறது.

இதன்போது கண் சிகிச்சை பெறவிரும்புவோர் தங்களின் பெயர்களை கிளினிக் பிரிவில் பதிவு செய்யலாம் எனவும் மாசி மாத கண் கிளினிக் இன்று புதன்கிழமை நடைபெறும் எனவும் வைத்திய அத்தியட்சகர் ஏ.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார். (ங-36)

## இறங்குது ரூபா....ஏறுது விலை




## வைக்கோலுக்கு கிராக்கி

சுழிபுரம் காட்டு வயல் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் தற்போது நெல் அறுவடை இடம்பெற்று வருவதால் வைக்கோலுக்கு அப் பகுதியில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சுழிபுரம் பகுதியில் அதிகளவானோர் கால்நடைகளை வளர்ப்போராக உள்ள நிலையில் வயலில் கிடைக்கும் வைக்கோலினை போட்டி போட்டு வாங்குகின்றார்கள். (எ-14,28)

## விளைச்சல் அதிகரித்தும் அறுவடையில் மக்கள் அவதி

நவாலி,பெப்.15

நவாலி ஆனைக்கோட்டை பகுதிகளில் நெல் அறுவடை செய்யும் கூலி வேலை செய்வோருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது.

இந்தப் பகுதிகளில் தற்போது நெல் அறுவடை வேலைகள் ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் நெல் அறுவடை செய்வதற்கு, கூலிவேலை ஆள்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

இதன் காரணமாக அறுவடையை மேற்கொள்ளும் ஒரு ஆண்கூலிக்கு 1000 ரூபாவும் பெண் கூலிக்கு 600 ரூபாவும்வழங்கப்படுகின்றது.

இதேவேளை இயந்திரம் மூலம் சிலர் பரப்பு ஒன்றுக்கு 600 ரூபாவைக் கொடுத்து அறுவடை செய்கின்றனர்.

இயந்திரம் மூலம் அறுவடை செய்வதால் வைக்கோலை முழுமையாகப் பெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாகவே கூலிவேலை ஆள்களை நாடுகின்றனர். கூலி வேலை ஆள்கள் பற்றாக்குறையாக இருப்பதால், உரிய நேரத்தில் அறுவடை செய்யாமல் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த முறை நெல் விளைச்சல் அதிக ரித்துக் காணப்படுகிறது. நெல்லின் விலையும் நாளுக்கு நாள் குறைந்து வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.02.2012 HAPPY BIRTH DAY

# 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



## திரு. சின்னராசா சிவபாலசிங்கம்

### கிராம அலுவலர் (அல்வாய் வடக்கு, பொலிகண்டி மேற்கு)

### இந்து மத குரு பீடாதிபதியின் ஆசிச்செய்தி

மக்கள் சேவை மகேசன் சேவை என எமது பிரதேசத்தில் கிராம சேவையாளராக பதின் ஏழு வருடங்கள் கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் இளைப்பாறிச் செல்லும் சின்னராசா சிவபாலசிங்கம் அவர்கள் தனது பதவிக் காலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயலாற்றிய ஒரு செயல் வீரன் ஆவார்.

முப்பது வருடங்கள் சேவையில் கிட்டத்தட்ட அரைவாசி காலத்திற்குமேல் எமது பிரதேசத்தில் பொறுப்புணர்ச்சியுடன் தனது கடமையினைச் செவ்வனே செய்தவர் ஆவார்.

தன்னிடம் வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் தேவைகளைப் பொறுமையுடன் பூர்த்தி செய்வதை நான் நன்கு அறிவேன். இவர் ஓய்வுபெற்று செல்வதை நினைக்கும்போது எமக்கு பெரும் வேதனையாக இருக்கின்றது. என்ன செய்வது அது காலத்தின் கட்டாயமுமாகும்.

மணிவிழா நாயகனை நான் பாராட்டுவதுடன், எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து ஓய்வு நிலைக் காலங்களில் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று வளமுடன் வாழ எல்லாம்வல்ல வல்வை நகரின் காவல்தெய்வமாகிய அன்னை ஸ்ரீ முத்துமாரியைப் பிரார்த்திப்போமாக. வாழ்க வளமுடன்

சிவஸ்ரீ சோமாஸ் தண்டபாணிகதேசிகர் J.P, இந்து மதகுரு பீடாதிபதி
பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

### நிறைவாய் வாழ்க எம் பிரிய சிவபாலசிங்கம் ஐயா

பாரின் வாழ்வது பரமனின் கொடை எனில், அறுபது ஆண்டுகளில் நீங்கள் பதித்த தடம் அவர் அருள் அன்றோ. எம் மத்தியிலே ஒரு சமூகத்தொண்டனாய், நல் ஆலோசகனாய் வலம் வந்து சகலரும் சமமென எண்ணி பேதங்கள் மறந்து உங்கள் பணி ஆற்றினீர்கள். கிராமத்துக் காவலனாய், சேவகனாய், நல்ல தலைவனாய் 25 ஆண்டுகள் கடந்தும் நீங்கள் ஆற்றும் பணி அளப்பரியது. மக்களுக்கு துன்ப மெனில் கால நேரம் பாராது நீங்கள் நற்பணி ஆற்றுகின்றீர்கள்.

குடும்பத்தின் அடித்தளமாய், அன்புக் கணவனாய், பாசமிகு தந்தையாய், நீங்கள் விளங்கி, கண்டிப்புடன் பாசத்தை ஊட்டி, அறிவால் பிள்ளைகளை வளர்த்து நல் தந்தையாய் வீட்டிலும், கிராமத்து சேவகனாய் சமூகத்திலும், வீர புருஷனாய் பாரினில் வலம் வந்த உங்களை நிறைவாக வாழ்த்தி பரமன் துணை கொண்டு மேலும் பல ஆண்டுகள் நற்பணியாற்ற நிறைவாய் வாழ்த்துகின்றேன்.

- வண பிதா அ. அகஸ்ரீன், பங்குத் தந்தை,சக்கோட்டை.

### இன்னும் பல ஆண்டு வாழ்க

J/400 கிராம சேவையாளர் பிரிவுக்கு எஸ்.சிவபால சிங்கம் பதவி ஏற்ற காலம் தொடக்கம் சமூக தேவைகளையும் அபிவிருத்திகளையும் சிறு கைத்தொழிலையும் செய்வதற்கு வங்கி மூலம் உதவி செய்துள்ளார் என்பதுடன் விவசாயிகளுக்கு தேவையான உதவிகளையும் செய்துள்ளார். இவர் தனது காலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தந்துள்ளார். அத்துடன் விவசாய அமைப்பையும் அமைத்துள்ளார். அரசாங்கம் ஊடாக இவர் தென்னம்பிள்ளை விதையினம், உரவகைகள் வங்கிமூலம் பண உதவிகளையும் பெற்றுத் தந்துள்ளார். இவர் 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதுடன் இன்னும் பல ஆண்டு வாழ வாழ்த்துகிறோம். - கமக்கார அமைப்பு. *(தலைவர்)*

### பொலிகண்டி கந்தவன தேவஸ்தான பிரதமகுரு "குமரகுருமணி, கிரியாகலாமணி சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்கள் வழங்கிய ஆசியுரை

பொலிகண்டி மண் பிறந்து
சமூக சேவைகள் செய்திடவே
கிராம சேவகராய்......
சேவைகள் பல செய்திட்ட
சின்னராசா சிவபாலசிங்கமே!
சீரிய உம் சேவைகள் - எம்
சிந்தை விட்டகலாது எந்நாளும்
அறுபதாம் அகவை எய்தி அன்புசால் மனைவி, மக்கள்
உறுபயன் யாவும் உற்று ஓதிடும் திருமுறைப்
பெறுபயன் கேட்போர் எய்த முருகன் தன் சிந்தைஒன்றே
உறுதியென் றெண்ணும் நம்பி! உத்தமா நீடுவாழி!
வாழிய! வாழிய!! பல்லாண்டு வாழியவே!!!

### நீண்ட நாள் விருப்பில் செல்லும் விதானையார் சிவபாலசிங்கரே வாழ வாழியவே

பாடிடுக பாடிடுக கந்தனின் மெய்ப்பொருளை பாடிடுக மூட மதியே
பாடுவதில் தீர்ந்துவிடும் பழிபாவம் அத்தனையும்
கந்தவனத்தவன் சொன்ன வீதியே

நானும் விதானையாரும் குறைந்தது கடந்த 15 வருடங்களாக மிகவும் நெருக்கமாகப் பழகி வருகிறோம். கடந்த 15 வருடங்களாக வைத்தியசாலை அபிவிருத்தியிலே முன்னின்று உழைத்த பெருந்தகை. வைத்தியசாலை நிகழ்ச்சிகளிலே அவர்தான் மூலக்கரு அவரில்லாமல் எந்த நிகழ்ச்சியுமே வைத்தியசாலையில் இல்லை. மிகவும் சுறுசுறுப்பான பரசுராமன். ஏன் பிரதேச செயலக விழாக்களிலும் கூட மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் ஒரு தனி மனித இயந்திரம். அவரின் குடும்பததோடு எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

மிகப் பெரிய குடும்பமாக இருந்தும் நீண்டநேர காலங்களை விதானையார் என்ற கோதாவில் மக்களுக்காக சேவை செய்த அர்ப்பணிப்பு வள்ளல் - கண்ணபிரான் சுயநலம் கருதாது எந்த நேரத்திலும் உதவி செய்யும் பரந்த மனமுடைய பரந்தாமன். ஒரு தரமாவது இந்த வேலை செய்யமுடியாது என்று சொல்லவே மாட்டார். என்ன செய்வாரோ தெரியாது உதவி தேடி வந்தவர்களை சோர விடாது மனம் தளராது ஊக்குவித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யும் தன்னிகரில்லா சேவகன்- கர்ணன் பரம்பரை பொலிகண்டி, வல்வெட்டித்துறை அவரை அறியாத சனமே இல்லை விதானையார் உதவி பெறாத சனம் உண்டோ என்றால்- இல்லை என்று அடித்துக் கூறலாம். தன் டிவிசன் இல்லாவிட்டாலும் பரவாயில்லை ஏதோ சமாளித்து அவர்கள் வேண்டியதைச் செய்து முடிப்பதில் வல்லவனுக்கு வல்லவன்

இப்படியான ஒரு விதானையாருக்கு ஓய்வு வந்துவிட்டது. என்ன செய்வது ஒப்ந்து தான் ஆகவேண்டும் என்றாலும்

இந்த பொலிகை மைந்தனை, நாயகனை, தூயவனை,
மிகவும் நல்லவனை மறக்கவே முடியவில்லை
என் செய்வோம் பரம் பொருளே ஊர் கூடி வாழ்த்துவோம்
வாருங்கள் ஒன்றுகூடி வாழ்த்துப்பா பாடுவோம்
வாழ்வது ஒருமுறை. வாழ்த்தட்டும் தலைமுறை
வாழ்க விதானையாளர் வாழ்க பல்லாண்டு
முருகன் துணை புரிவாராக - வைத்திய அதிகாரி.

### சேவை நலன் பாராட்டு

அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலைய மக்களுக்கு 2006 தொடக்கம் இன்று வரையிலும் தன்னாலான சமூகப் பணிகளை இரவு பகல் பாராது மக்களோடு தானும் ஒரு மனிதராகக் கடமையாற்றிய எமது கிராம சேவகர் சி.சிவபாலசிங்கம் அவர்களது சேவை நலனை எமது கிராம மக்கள் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

இ.பஞ்சலிங்கம் (செயலாளர்).

கிராமத்தின் நற் தலைவனாய்
மக்களின் மகத்தான சேவகனாய்
பார்போற்றும் உத்தமனாய்
பாங்குடன் வாழி பல்லாண்டு

15.02.2012 இன்று அகவை அறுபதினைக் கொண்டாடும் அன்பு அத்தான் சி.சிவபாலசிங்கம் அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ பொலிகைக் கந்தனை வேண்டுகின்றேன்.

க.சூரியகுமாரன் (மைத்துனர்)

வானகம் போற்ற வையகம் வாழ்த்தி நிற்க
செம்மல் சின்னராசா சிவகாமலட்சுமி அம்மா புத்திரனாய் அவதரித்த
சீர்மேவும் சிவபாலசிங்கம் என்னும் சேயோன்அகவை அறுபதை
அடைந்திட்ட வேளையில் வங்கக்கடலலைகள் வாயார வாழ்த்தி நிற்க
உற்ற துணையவள் உவகை கொண்டாடிட ஒன்றித்த கிளைகளது
ஓர்மமாய் பூரிப்படைய கொடுத்துவைத்த விழுதுகளிங்கே
கோலாகலமாய்க் கொண்டாடிட மக்கள் சேவையதை மனதார
ஆற்றிவந்து கொண்ட சோதனைகளை நற்சாதனைகளாய் மாற்றிய
நின் வாழ்க்கைப் பாதையதை நற்றமிழால் விளம்பிட
நம் நாவில் சொற்றமிழ் வேறில்லை
கந்தன் கழலதனைக் காதலோடு வேண்டுகின்றோம்
எங்கள் விருட்சமிங்கு பல்லாண்டு வாழியவே

*அன்புடன் வாழ்த்துவோர்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
*"லலிதாவனம்"*
ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

### வாழ்த்துப்பா

பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்வாய் வடக்கு கிராம சேவையாளரும் சமூக சேவகருமான மேன்மை மிகு திருவாளர் சிவபாலசிங்கம் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவை ஒட்டிய அன்பு மடல்.

கார் மழை ஒத்த குளிர் தென்றலே! கடமை உயிர் மூச்சென நின்றவரே
பாரெலாம் போற்றி நிற்கும் பாவலனே - உம்
பணியதும் ஒளி தந்த பெருவாழ்வில்
சீர்நிறை சேவையாளன் செந்தமிழன் சிவபாலசிங்கம்
பொலிகை மண் பூத்திட்ட புடமிகு தங்கமென்றோ
அகவை அறுபதை அணைத்திட்ட
அண்ணலே அன்பால் நினைக்கிறோம்
அல்வையூரே உம் ஆளுமை கண்டு
அறுபதென்ன நூறே வேண்டுகின்றதே
கொவ்வை இதழ் புன் சிரிப்பு கொடு மனமிலா குணம் படைப்பு
உய்வார் கரும ஒருங்கிணைப்பு உறக்க மிலா தரும் விழிதுடைப்பு
வரமிகு அன்னையவள்- பெரு
வளர்ச்சியின் பங்குதாரரே நீவிர் வாழி உரம் கொள் அறங்காவல்
ஊக்கமதில் துணைநின்றவரே நீவிர் வாழி
கரம் கோர்த்து உலா வந்த கருணாநிதியே நீவிர் வாழி
சிரம் தாழ்த்தி வாழ்த்துகிறோம் சீராளர் நீவிர் வாழி
பரம் பொருளின் பாதக் கமலத்தில் அர்ச்சிக்கின்றோம்
பல்லாண்டு பல்லாண்டு வாழிய வாழியவே.

வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலனசபை, அல்வாய் வடக்கு.

### மணிவிழா வாழ்த்து

மானுடர்களாகிய நாம் வாழும் காலத்தில் செய்கின்ற நற்பணிகள் மூலம் சமூகத்தின் மதிப்பையும் உயர்வையும் அடைகின்றோம். அவ் வகையில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தான் உயர்திரு சின்னராசா சிவபாலசிங்கம் அவர்கள். நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையில் கிராம சேவகராக கடமையாற்றியதோடு, தாம் செய்த அப்பணியினுடாக பெருமை பெற்ற செம்மலாவார். அத்தகைய அன்பர் தனது அரச கடமையோடு ஆன்மிகப் பணி, சமுதாயப்பணி ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டவர். ஆன்மிகப் பணியினுடாக ஆச்சிரமத்தோடும் இணைந்து கொண்ட அன்பர்

அவர்தம் அறுபதாவது அகவையை பூர்த்தி செய்து அறுபத்தோராவது அகவையில் காலடி வைப்பதையிட்டும் அவர் ஆற்றும் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்கவும், வாழ்த்தி சந்நிதி வேற் பெருமானை வேண்டுதல் செய்து நிறைவு செய்கின்றோம்.

- குருபணியில் மோகன்சாமி.


ஓய்வு பெறும் கிராமசேவையாளர் **சிவபாலசிங்கம் ஐயா** அவர்களை ஆதிசக்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் நீடூழி காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்

### வாழ்த்துப்பா

செந்தமிழுக்கு சொந்த நிலத்தினிலே
வங்ககடலை வந்து மோதும் பொலிகை நெய்தலில்
தை மாசி குளத்தைபோல நிறைந்த - மனம்
கொண்டு வந்த நாயகனே.
சொந்த எண்ணங்கள் பல இருந்தும்
பந்தபாசங்கள் பல இருந்தும் எங்கள்
ஊருக்காய் ஆண்டுகள் பல அயராது உழைத்தாய்
எம் தேவைகள் பல உனது தேவையாக்கினாய்
தினம் தோறும் பல சேவைகள் நண்பனாக நின்று
கனம் ஏதும் பாராது எமக்காய்
திடமாக செய்த எம் நாயகனே.
பௌர்ணமி நிலா உன்மனது - பசுந் செந்தமிழ்
உன் பேச்சு - நீ கிராம சேவகனாக
அல்லது கிராமங்கள் பலவற்றின் நாயகனா?
நல்லெண்ணம் நிறைந்த உன் மனதினை
பாடவேண்டும் பல ஆயிரம் கவிதைகள்
நாடவேண்டும் பல கவிஞர்களை
ஓய்வு பெறும் எம் சமூக பறவைக்கு
எம் ஆதிகோவில் மாதர்களின்
அன்பான பண்பான வாழ்த்துகள்.

- அஞ்சனாதேவி (தலைவர்), இ.மஞ்சுளா (பொருளாளர்), சா.மதிவதனா (செயலாளர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

### சிவதீட்சை அளிக்கப்படும்

மகா சிவராத்திரி தினமாகிய எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதிரிபீட மன்றுளாடும் விநாயகர் ஆலயத்தில் சிவதீட்சை அளிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

அன்று காலை 9 மணி தொடக்கம் 11.30 மணி வரை இடம்பெறும் இந்த நிகழ்வில் 9 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் கலந்து கொண்டு சிவதீட்சை பெறலாம் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ந)

# குன்றும் குழியுமாக மானிப்பாய் கைதடி வீதி

மானிப்பாய், பெப்.15

வீதி அகலிப்புப் பணியினால் சீர் செய்யப்பட்ட மானிப்பாய் - கைதடி வீதியின் இருமருங்கும் குன்றும் குழிகளுமாகக் காணப்படுகின்றன. இதனால் தொடர்ச்சியாக வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக மானிப்பாயிலிருந்து கைதடி வரையான வீதி அகலிப்புச் செய்யப்பட்டன. இதற்காக வீதியின் இருமருங்கிலும் உள்ள வீடுகளின் மதில்கள் உடைக்கப்பட்டு அகலிக்கப்பட்டன.

அகலிக்கப்பட்ட வீதியை விட அகற்றப்பட்ட இடம் தாழ்வாக உள்ளதால் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்தும் போது விபத்துக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

**வீதி அதிக வளைவுகளைக் கொண்டதால் இரவில் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் பயணிப்போர் விழுந்தெழும்ப வேண்டியுள்ளது.**

குறித்த வீதி அதிக வளைவுகளைக் கொண்ட வீதியாக இருப்பதால் இரவில் பயணம் செய்யும் மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்கள் விழுந்தெழும்ப வேண்டியுள்ளது.

செப்பனிடப்பட்ட வீதியைச் சீராகச் சீர் செய்யாமல் தற்போது நான்கைந்து கிலோமீற்றருக்கு அப்பால் வீதிப்புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-9-14)

# மானிப்பாய் – உடுவில் வீதியில் காவலரண்கள் அகற்றப்பட்டன

மானிப்பாய், பெப்.15

மானிப்பாய் - உடுவில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த இரு இராணுவக் காவலரண்களும் கடந்த இரு தினங்களுக்கு முன்பாக இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளன.

மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள தளிர் நலன்புரி நிலையத்துக்கு முன்பாக வீட்டு உரிமையாளரின் காணியின் மூலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரணும், உடுவில் வீதியில் 25 ஆம் கிளை கூட்டுறவுச் சங்கம் இயங்கி வந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரணும்

**நலன்புரி நிலையத்துக்கு முன்பாக இருந்த காவலரணும் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரணுமே அகற்றப்பட்டுள்ளன**

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக அகற்றப்பட்டுள்ளன. (எ-14)

# மாணவர்களுக்கு உதவி

நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரனின் ஏற்பாட்டில் வன்னி மற்றும் யாழ் . மாவட்டத்தில் மக்களின் வாழ்வில் மேம்பாட்டை கொண்டுவரும் பொருட்டு உதவிகளைத் தொடர்ந்துசெய்துவரும் கனடா வாழவைப்போம் அமைப்பு தமது செயற்பாடுகளை தீவகப் பகுதிகளிலும் விஷ்தரித்துள்ளது.

இதன் ஓர் அங்கமாக அண்மையில் தீவகப் பகுதிக்குப் பயணம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

புங்குடுதீவு சரவணை சின்னமடு, புளியங்கூடல் ஆகிய பகுதிகளுக்கு சென்று மக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அத்தோடு அந்தப் பகுதி மாணவர்களின் நலன் கருதி கனடா வாழவைப்போம் அமைப்பின் அனுசரணையுடன் அப்பியாசக்கொப்பிகள் ஒரு தொகுதியையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினருடன் அந்தப் பகுதி கிராம பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வின்சன் ஆகியோரும் இணைந்து பணிகளில் ஈடுபட்டனர்.

அங்கு மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தீவகப்பகுதிகளின் கல்வி வரலாறு பற்றியும் இதனூடாக இன்றைய தீவக மாணவர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப்பொறுப்புப் பற்றியும் விளக்கம் அளித்தார். (ந)

# வலி.மேற்குப் பிரதேச சபை தலைவர் நிதி உதவி

சங்கானை, பெப்.15

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா. ஐங்கரன் இந்தக் கிராமத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வரும் பொதுமக்கள் பலரைச் சந்தித்துப் பேசியுள்ளார் .

மூளாய் வளர்மதி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது கண் சத்திர சிகிச்சை செய்வதற்கு நிதி வசதியற்று சிகிச்சை செய்யாமல் இருந்து வரும் மகாலிங்கம் சரோஜினியின் வறுமை நிலைமையை அறிந்து தனக்கு வழங்கப்பட்டவரும் தொகையில் 10,000ரூபாவை வழங்கிய தவிசாளர் உடனடியாக சிகிச்சையை மேற்கொள்ள அறிவுறுத்தினார். (ந-29)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா ஞானம்மா (பொன்னு)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், ஸ்கந்தபுரம் தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா ஞானம்மா (பொன்னு) 13.02.2012 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் கந்தையாவின் (இளைப்பாறிய தபால் ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து-வரோனிக்கா தம்பதியரின் அன்பு மகளும், சண்முகம்-இராமாசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியாம்பிள்ளை, வரப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சந்திரராஜா, சூரியகுமார் மற்றும் ரட்ணகுமார், லிங்கேஸ்வரி, ஜெயக்குமார் (ஜேர்மனி), விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயும், கணேசவிநாயகம் (சுவிஸ்), மனோரஞ்சிதம், விஜயராணி, யோகராசா, பங்கயவதனி (ஜேர்மனி), மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சிறிஸ்கந்தராஜா (சுவிஸ்), பத்மலோஜினி (சுவிஸ்), குகதாஸன், கமலதாசன், காலஞ்சென்ற ரமா மற்றும் ஐங்கரன், டிலக்ஸன், கோகிலவதனி, சஜீவ், சோபியா, ஜிந்துகா, ஜெயந்தன், யதுஷா காலஞ்சென்ற ரேகா மற்றும் தயாபரன் (லண்டன்), ஜீவன் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), ஜெருஷா, துர்க்கா (ஜேர்மனி), திவாகர் (ஜேர்மனி), மனோஜன் (சவுதி), வினோஜன், முகுந்தன், விதுஷன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.02.2012) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு இல.102, ஸ்கந்தபுர இல்லத்திலும், இல.65, இல்லத்திலும் நடைபெற்று பின்னர் ஸ்கந்தபுரம் அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அந்தோனியார் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.50/1, பலாலி றோட்,**
**திருநெல்வேலி.**

தகவல்:
**கா. யோகராசா (மருமகன்)**

(14435) (6,7,10)

14435

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். பல நாள்களாக பிற்போட்டுக் கொண்டே வந்த சில வேலைகளை இன்று வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பழைய வாகனங்களை மாற்றி புதியவை வாங்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**இடபம்:** உடல் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். மற்றவர்களுடன் சேர்ந்து எந்தக் காரியங்களையும் செய்யாமல் நீங்களே சுயமாகச் செய்ய முற்படுவீர்கள். பயணங்கள் அனுகூலம், சந்தோஷம் தருவதாக அமையும். தாயார் வழியில் அன்புத் தொல்லைகளுக்கு, சிரமங்களுக்கு ஆள்படலாம். தங்கு, தடையின்றி வேலைகள் நடக்கும் நாள்.

**மிதுனம்:** மனதில் பட்டதை பேசுவதன் மூலம் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் துடிப்போடு செயற்படும் நாள். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். எதிலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்காமல் நிதானமாகச் செயற்பட வேண்டும். ஆதாயமில்லாத சில விடயங்களில் தலையிட்டு விட்டு அவதிகளுக்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்களால் அன்புத்தொல்லைகளுக்கு ஆள்படலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

**சிங்கம்:** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள். நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள். சோர்வு, சோம்பல் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படுவர். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருளை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**கன்னி:** விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். அவசரமாக முடிக்க வேண்டிய சில வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலரின் வருகைக்காக காத்திருக்கலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைகளைச் செய்ய நேரிடலாம். கனவுத் தொல்லையுண்டு.

**துலாம்:** நேர்மை, நாணயத்தோடு நடந்து கொள்ளும் நாள். நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். நண்பர்கள் சிலரிடம் அவசர உதவிகள் கேட்கலாம். நீண்ட தூர பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பரிகாசம், கேலி பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்.

**விருச்சிகம்:** கோபம், வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்பட வேண்டும். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள், கருத்து வேறுபாடுகள் உருவாகலாம். நண்பர்கள், சக ஊழியர்களின் விமர்சனங்களைக் கேட்கலாம். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். நன்றி மறந்த சிலரை நினைத்துக் கவலை அடைவீர்கள்.

**தனுசு:** பல நாள்கள் செய்ய வேண்டிய வேலைகளை இன்று ஒரேநாளில் செய்யலாம். சேமித்த பணம் ஒன்றுக்குச் செலவு ஏற்படலாம். பிள்ளைகளுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். உங்களுக்கு பிரியமான பொருள் ஒன்றை மற்றவர்கள் கொடுக்கலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். கொடுத்த வாக்கு ஒன்றைக் காப்பாற்றுவீர்கள். இனிய நாள். .

**மகரம்:** எண்ணம் போல எல்லாம் நடக்கும் நாள். சில விடயங்களுக்காக அதிக சிரமங்களைச் சந்தித்தாலும், அதனால் கிடைக்கும் ஆதாயத்தால் சந்தோஷம் அடைவீர்கள். கலைஞர்கள் சக நண்பர்கள் மூலம் உதவிகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். நாவன்மை அதிகரிக்கும். தொழில் ரீதியாக சந்திக்கும் சில சிக்கல்கள் மூலம் புதிய அனுபவம் பெறுவீர்கள்.

**கும்பம்:** நீங்கள் செய்யும் வேலை ஒன்றால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். மருத்துவ செலவுகளைத் தவிர்க்க கண்ட இடங்களில், சாப்பிடுவதைத் தவிர்க்கவும். நண்பர்களின் ரகசியம் ஒன்றை அறிந்து கொள்வீர்கள். விரும்பாத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்கு மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

**மீனம்:** தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சில வேலைகளை வேகமாக ஆரம்பித்து விட்டு பின்னர் இடைநடுவில் விட்டு விடலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து விடலாம்.

**நாளை**

மாசி 4 வியாழக்கிழமை 16.02.2012
திதி:நவமி மு.ப. 10.21 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ. 01.56 வரை
சுபநேரம்: 08.03 - 09.33 வரை,
ராகு காலம்: 02.03- 03.33 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 5 | | 4 | 7 | 1 | | |
| 1 | | 3 | | | | 7 | 4 | 6 |
| | | | 6 | | 3 | | | |
| 4 | | | | | 6 | | 9 | |
| 3 | | | 9 | 2 | 8 | | | 4 |
| | 9 | | 4 | | | | | 7 |
| | | | 2 | | 1 | | | |
| 6 | 4 | 1 | | | | 3 | | 5 |
| | | 2 | 3 | 5 | | 9 | | 1 |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 7 | 9 | 5 | 2 | 1 | 4 |
| 2 | 1 | 7 | 4 | 6 | 8 | 3 | 5 | 9 |
| 9 | 5 | 4 | 3 | 2 | 1 | 7 | 6 | 8 |
| 1 | 4 | 2 | 9 | 8 | 3 | 5 | 7 | 6 |
| 3 | 7 | 8 | 6 | 5 | 2 | 4 | 9 | 1 |
| 6 | 9 | 5 | 1 | 7 | 4 | 8 | 2 | 3 |
| 5 | 2 | 1 | 8 | 3 | 6 | 9 | 4 | 7 |
| 4 | 3 | 9 | 2 | 1 | 7 | 6 | 8 | 5 |
| 7 | 8 | 6 | 5 | 4 | 9 | 1 | 3 | 2 |




# எம் நெஞ்சை நெருடும் ஓராண்டு மலர் அஞ்சலி

## அமரர்

# சுப்பன் குணசிங்கம் (குணம்)

[29-5717 சிற்றூர்தி (788 இளவாலை) உரிமையாளர்]

**தோற்றம்**
**31.05.1963**

**திதி: 15.02.2012**

**மறைவு**
**29.01.2011**

என் அருமைக் கணவனே,
நீர் என்னைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றதையா,
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம் பிரிவின் வேதனையைத் தாங்க முடியுமா
உமது அழகிய வதனமும் வசீகரப் புன்னகையும்
அன்பான வார்த்தைகளும் என்றென்றும்
என் நெஞ்சில் நிலைத்திருக்கும்
தெய்வமாய் நீர் இருந்து காத்திடுவீர்
என்றென்றும் நீர் என்னோடு வாழ்ந்த
இனிய நினைவுகளுடன் வாழும்



அன்பு மனைவி
**கு.கோமதி.**

நவாலி தெற்கு. (4414)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்

## கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் கோரிக்கை

ஐ.நா. மனிதவுரிமை சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று கனடாவைத் தளமாகக் கொண்ட தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இதுகுறித்து மேற்படி கனடா படைப்பாளிகள் கழகம் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமைத்த மூவர் அடங்கிய நிபுணர் குழு கொல்லப்பட்டவர்கள் தொகை 40 ஆயிரமாக இருக்கலாம் என்று அறிவித்துள்ளது.

மேலும் போரின் இறுதிக் காலத்தில் நடந்த குண்டு வீச்சு, செல் வீச்சு, மருத்துவமனைகள் மீதான தாக்குதல், உணவு, மருந்து, தண்ணீர் போன்ற அத்தியாவசியப் பொருள்களை தடை செய்தல் ஆகிய போர்க் குற்றங்களையும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களையும் இலங்கை அரசு இழைத்துள்ளதாக ஐ.நா. நிபுணர் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. படுகொலைகள் நடைபெற்ற போது ஐ.நா. கைகட்டிக் கொண்டு ஒதுங்கி நின்றதையும் அந்த நிபுணர் குழு அறிக்கை கண்டித்துள்ளது.

ஈழ மக்களின் இன்றைய அவல நிலைபற்றி உங்களுக்கு நாங்கள் எடுத்துக் கூறத்தேவையில்லை. இதையிட்டு ஆட்சிக்கு வந்த மறுகணமே ஜெயா தொலைக் காட்சிக்குக் கொடுத்த நேர்காணல் மூலமாகவும் அறிக்கைகள் மூலமாகவும் தமிழக சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலமாகவும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளீர்கள்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதலமைச்சர் விட்ட அறிக்கையில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடைய இராணுவத் தளபதிகள் ஆகியோர் மீது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை நம்பகத்தன்மை வாய்ந்த சான்றுகளின் அடிப்படையில் போர்க் குற்றச் சாட்டுக்களை விசாரிக்க அவர்களை பன்னாட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்த இந்திய அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டிருந்தீர்கள். இலங்கைத் தீவில் வாழ்ந்து கொண்டிருக்கும் அப்பாவித் தமிழர்களின் நிலைமை என்ன என்பதை கற்பனை செய்து பார்க்கவே அச்சமாக இருக்கிறது என்றும் சொல்லியிருந்தீர்கள்.

தற்போது இந்த மாத இறுதியில் ஆரம்பமாகும் ஐ.நா. மனிதவுரிமைகள் சபையின் அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் முயற்சி செய்கின்றன. அந்தத் தீர்மானத்துக்கு இந்திய மத்திய அரசின் ஆதரவைப் பெறும் முயற்சியில் இந்த நாடுகள் இறங்கியுள்ளன- என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்து.

# மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி, பெப்.15

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக இரண்டாம் கட்டப் போட்டிகளுக்கான நிரல் தயாரிப்பு தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அந்த கலந்துரையாடலில் வடமராட்சி வலயப்பாடசாலைகளில் கற்பிக்கும் உடற்கல்வி ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய விளையாட்டு உதவிப்பணிப்பாளர் த.செல்லக்குமார் கேட்டுள்ளார். (வ-8)

***

யாழ்ப்பாணம் பெப்.15

யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ் சென். பற்றிஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் செ. சத்தியசிவன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-17)

***

யாழ். சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த மெய்வண்மைப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் கலந்து கொள்வார்.

# திருக்கேதீஸ்வரத்தில் சிவத்தமிழ் மாநாடு

வலி. வடக்கு, பெப் 15

கடந்த 5 வருடங்களாக சிவத்தமிழ் மானுட விடியற்கழகம் சைவத் தமிழ் மக்களிடையே ஆன்மிக சமூக வேலைத்திட்டங்களுக்கு எழுச்சியை ஏற்படுத்தும் வகையில் சிவராத்திரி தினத்தை அண்டிய காலப்பகுதியில் சிவ வாரத்தை அனுட்டித்து வருகிறது.

இந்தக்காலப்பகுதியில் சிரமதானம், இரத்ததானம், ஜீவகாருண்ய சேவைகள், ஏழை மாணவர்களுக்கான கல்விப்பணி, மரம் நடுகை என்பவற்றை முன்னெடுப்பதுடன் இளைய தலைமுறையினரிடையே ஆன்மிக சிந்தனைகளை விதைக்கும் வகையில் யோகாசனம், தியானம், அறநெறி அறிமுகங்களை கிராமிய மட்ட ரீதியில் செய்தும் வருகிறது.

இதனடிப்படையில் இம்முறை ஆலயம் சமூக மையம் என்னும் தொனிப்பொருளில் நேற்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட் கிழமை மகாசிவராத்திரி தினம் வரை சிவ வாரமாக அனுட்டிக்கவுள்ளது. விசேட செயற்பாடாக இந்தக்காலப் பகுதியில் எதிர்வரும் 19 ஆம், 20ஆம் திகதிகளில் திருக்கேதீஸ்வரத்தில் சிவனருள் இல்ல அறக்கட்டளையின் அனுசரணையுடன் மேற்படி கழகம் சிவத்தமிழ் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் எமது கழகத்தால் நடத்தப்படும் 60 சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலையை சார்ந்த ஆசிரியர்களுக்கும், கிராம மட்டச் செயற்பாட்டாளர்களுக்குமான வதிவிடச் செயலமர்வாகவும், சமய சமூக ஆர்வலர்களது ஒன்றுகூடலாகவும் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

சைவத்தமிழ் மக்கள் இச்சிவ வார காலப்பகுதியில் அன்பே சிவம் என்னும் எமது இறையியல் கோட்பாட்டுக்கு உண்மையாக இருக்கும் வகையில் சமூக, ஆன்மிகப் பணிகளை தங்கள் பிரதேச மட்டத்தில் முன்னெடுக்குமாறு மேற்படி கழகம் கேட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு கிளிநொச்சி கண்டி வீதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் உள்ள எமது சிவத்தமிழ் அறநெறி மையத்திலோ அல்லது நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைந்திருக்கும் மூத்ததம்பி அன்னதான மடத்தில் உள்ள எமது மானுட சிறுவர் நல்வாழ்வு மையத்திலோ தொடர்பு கொள்ள முடியும் - எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

ASAP புலமைப்பரிசில்
2011-2012.
வடக்கு,கிழக்கு மாணவர்களுக்கானது

- நீங்கள் வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மாணவரா?
- பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்துள்ளீர்களா?
- வேலைவாய்ப்பினை எதிர்பார்த்துள்ளீர்களா?
- USAID நிறுவனத்தின் அனுசரணையுடன் அரசாங்கத்தினால் வழங்கப்படும் கணினி மற்றும் ஆங்கிலப் பயிற்சியில் பங்குபற்றி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொள்ளுங்கள்

விண்ணப்பப்படிவத்தினை IDM சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ள முடியும்.
மேலதிக தகவல்களுக்கு



IDM
NATIONS CAMPUS
Chavakachcheri Branch
Managed by Step into(pvt)Ltd.
No.276, Kandy Road, Chavakachcheri.
021 2 270 270 / 021 7 200 600
(சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில்)

அனுசரணை
ADB EKSP USAID

# மரண அறிவித்தல்

## சிவனேசச்செல்வன் சசிகுமார்



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், பழையகமம், முரசுமோட்டையை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான சிவனேசச்செல்வன் சசிகுமார் (13.02.2012) திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனேசச் செல்வன் மற்றும் சந்திரமலர் தம்பதியரின் ஏகபுத்திரனும், சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த துரைராசன்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சங்கீதாவின் அன்புக் கணவரும், சௌமிகா, சாருகா, சஸ்மிகா, சஞ்சய்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரநாதன், (பிரான்ஸ், இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்றவர்களான லீலாவதி, கிருஷ்ணசாமி (மந்துவில்) ஆகியோரின் பேரனும், யோகேந்திரா-லோமா (பிரான்ஸ்), ஸ்ரீகஜேந்திரா -பாமினி (பிரான்ஸ்), ஸ்ரீரவீந்திரா-ராஜி (பிரான்ஸ்), ஸ்ரீசுவேந்திரா- அனுசியா (பிரான்ஸ்), ஸ்ரீமேஜேந்திரா-யோகேஸ்வரி (பிரான்ஸ்), ஸ்ரீபவளேந்திரா-தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும், குணசேகரம்- ஜெயந்திமலர் (பிரான்ஸ்), புவிராசசிங்கம்- யோகசுகிர்தமலர் (பிரான்ஸ்), செந்தூரன்-சர்மிளா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பெறாமகனும், பாலமூர்த்தி-பிறிமிலா (பிரான்ஸ்), மணிவண்ணன்-சீமா (நோர்வே), சோபா, ஆர்த்தி, சிந்துஜா (நுண்கலைப்பீடம், மருதனார்மடம்), கெங்காதரன்-தீபா (அவுஸ்திரேலியா), அர்ச்சுனா (3ஆம் வருடம் முகாமைத்துவம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.02.2012 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs. S. SASIKUMAR
311,HITCHEN ROAD,
LUTON BEDS
LU2 7SL-U.K
T.P: 00441582431040.

தகவல்:
குடும்பத்தினர்
வே.துரைராசன்
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(C\2939) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமதுகல்லூரியின்ஆசிரியை திருமதி.செ. மோகன தாஸ் அவர்களின் மாமனாரும் பாடசாலையின் பழைய மாணவனும் மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளருமான ம.மோகனதாஸ் அவர்களின் தந்தையுமான

**Dr.A. மரியதாஸ்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/மானிப்பாய்
இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.

(C/8947)(6-7-8)

# மரண அறிவித்தல்



## சிவஞானம் பரமேஸ்வரி

*சங்கானை, வல்லை வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தை, ருத்ராமாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் பரமேஸ்வரி நேற்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கானை தபாலதிபர் நடராசா - ரத்தினம் தம்பதியரின் அருமைப் புத்திரியும், காலஞ்சென்ற முன்னாள்* News Agent *சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், சிவலோஜன், ரவிலோஜன், சாந்தலோஜன், ஸ்ரீலோஜன், சிவகுமார், ஞானகௌரி (சைவமங்கையர் கழகம் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும், ரில்லி, கௌரி, நாகேஸ்வரி, கலைவாணி, சிவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, ராஜ்குமார், அழகேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, மகேஸ்வரி, சுந்தரேஸ்வரி (பபா அன்ரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரஜீவ், கார்த்திக் சாய்ந்திரி* (Seylan Bank) *ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும், ஹிஷோ, கீர்த்திகா, பிரணவன், மாதங்கி, அனோஜன், அர்ச்சனா, டிலீசன், அனித்தா, சஞ்சே, கீர்த்தனா, சஜீந் திரன், ராகவி, கஸ்தூரி, சஜிரேஸ், சந்தோஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இடம்பெறும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்*

யாழ். வீதி,
மானிப்பாய். (14448) 45,6,7

தகவல்:
சி.ரவிலோஜன் (மகன்)

# பால் விற்பனை நிலையம் இருநேரமும் இயங்கும்

நவாலி,பெப்.15

நவாலி கிழக்கு பால் கொள்வனவு, விற்பனை நிலையம் தற்போது காலை, மாலை இரு நேரமும் இயங்கி வருகின்றது.

பால் தட்டுப்பாடு காரணமாக, பல நாள்களாக காலையில் மட்டும் இயங்கி வந்த இந்தச் சங்கத்திற்குப் போதியளவு பால், கால் நடை வளர்ப்போரிடமிருந்து பெறப்படுவதால் மேற்படி நிலையம் அதிகாலை 5 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இயங்குகின்றது.

இதனால் இந்தப் பகுதி மக்களும் அயல் கிராம மக்களும் சுலபமாகப் பாலினைக் கொள்வனவு செய்ய முடிகிறது. (எ-100)

## சிறுவர் பாடசாலைக் கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்.பெப்.15

பண்ணாகம், அண்ணா கலை மன்றத்தின் ஏற்பாட் டில் சிறுவர் பாடசாலையை அமைப்பதற்கான புதிய கட்டடத்துக்கு கடந்த தைப் பூச தினத்தில் அடிக்கல் நடப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற சுங்கத்திணைக்கள தட்டச்சாளர் பெ. கனகரத்தினத்தின் காணி அன்பளிப்பு செய்துள்ளனர். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மேற்பார்வையுடன் இதன் கட்டிடப்பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாடசாலையின் கட்டடப் பணிகள் பூர்த்தியாகும் என கலை மன்றத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ28)

## தையல் பயிற்சி

சுழிபுரம் யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர், சமய பாடம் கற்கும் மாணவர்களுக்கு தையல் பயிற் சியை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு தைப்பூச தினத்தன்று நடைபெற்றது. சம்புநாதர் ஆலயம் முன்பாகவுள்ள அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இந்தப் பயிற்சிநெறி சமய வகுப்பைத் தொடர்ந்து நடத்துவற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து தையல் மிசின் ஒன்றை வழங்க அறநெறிப் பாடசாலை நிர்வா கத்தினர் முன்வந்துள்ளனர்.

(எ-28)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

## உயர்திரு. சின்னராசா சிவபாலசிங்கம்

கிராம அலுவலர், பொலிகண்டி மேற்கு



தன்னை உருக்கி ஊருக்கு ஒளி தரும்
மெழுகுவர்த்தி உனக்கென்று இன்று
60 வருடங்கள் ஊரெல்லாம் எழுந்தன
உன் வருகை கண்டு உன் உடலுக்கு 60
சேவைக்கு 30 உன் அச்சமில்லா பேச்சுக்கும்
இனிமையான குரலுக்கும், நேர்மைக்கும்,
நீதிக்கும் அச்சமில்லா நெஞ்சத்திற்கும் பதினாறு
என்றும் பதினாறு தெரியா மானிடர்களுள்
வழிகாட்டியாய் கலங்கரை விளக்காய்
உன் நூறாம் அகவைக்கும்
எம் பேனா கிறுக்க நீ வாழ்க நீடூழி.
அல்லும் பகலும் அயராது உழைத்தபெருந்தகையே!
ஓய்வு பெறும் இந் நாளில் எல்லா வளமும் பெற்று
ஏற்றமுடன் வாழ எல்லாம் வல்ல பொலிகண்டி
கந்தவனபதி முருகனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
பொலிகண்டி மேற்கு மக்கள். கிராம சேவகர் பிரிவு J/393

(14496)(2-9-7)

# வீடு வாடகைக்கு

**கொடிகாமம் வீதி, நெல்லியடியில் பழைய தபால் கந்தோருக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய நான்கு அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.**

**தொடர்பு : 077 6116058**

(C/8948)(6-7-8)

## "ஸப்தஸ்வரம்" இசை ஒலிப்பதிவுக் கலையகம்
## MUSIC COMPOSING STUDIO



★. இந்து, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள்
★. மெல்லிசைப் பாடல்கள்
★. பாடசாலைக் கீதங்கள் அனைத்தும்
★. இந்திய, இலங்கை பாடகர்களின் குரல் நயத்துடன் இசையமைத்து ஒலிப்பதிவு செய்து தரப்படும்.

தொடர்பு : 077 6980573

ஸ்ரீகுகன் (இசையமைப்பாளர்)
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு
(கல்வியங்காடு), யாழ்ப்பாணம்.

# UNIVERSITY OF WESTMINSTER

## SCHOOL OF ELECTRONICS & COMPUTER SCIENCE

www.westminster.ac.uk



## ADMISSION FOR SEPTEMBER 2012 INTAKE

- Home to 2,000 students the School of Electronics and Computer Science is located in the heart of Central London
- Cutting-edge, industry relevant courses leading to careers in computer engineering and IT
- Accredited courses by professional bodies including Institution of Engineering and Technology (IET) and BCS – The Chartered Institute for IT
- Hands-on learning experience: 50% of time in the labs on computing courses; project-based learning by designing and building electronic circuits and maze-solving robots in the engineering courses
- State-of-the-art facilities including dedicated computer labs, electronics labs, network development and testing rooms, advanced multimedia labs, Cisco networking labs and electronic computer-aided design workstations.
- Cisco Network Academy, SAS and Oracle certification training

Presentation & Interviews by Professor Dik Morling - Head of Department of Electronic, Network & Computer Engineering

**Presentation Topic : MSc and Undergraduate Courses in IT and Electronics**

**Date : Saturday 25th February 2012**
**At : GNANAM HOTEL, Jaffna**
**Time : 9.30am- 2pm**

**For information, Please contact Sri Lanka representative's office**

WEST 1 International
UK Education Specialists

29/17A Visaka Road, Col 04
T : 011 2594463, 077 6852323
E : west1intl@eureka.lk
W : www.west1uk.net

DESIGNS/LV

## 30 வருடங்களாக திருத்தப்படாத வீதி

புங்குடுதீவு கேணிக் கரை வீதி கடந்த 30 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் நாளாந்தம் 300 தொடக்கம் 400 வரையான மக்கள் பயணம் செய்கின்றனர். நாளாந்த கடமைக்கு இந்த வீதியால் செல்லும் போது தாமதம் அடைவதாகவும் இதனால் பெரும் சிரமங்களை எதிரிகொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து இந்த வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## விரைவில் சிற்பக் கலாலயம்

சுழிபுரம்,பெப்.15

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆறுபடை வீட்டை வெளிப்படுத்தும் சிற்பக் கலாலயம் ஒன்று கட்டப்படவுள் ளது.

இந்தியவில்இருந்து [illegible] வேலைகளைச் செய்து வுள்ளனர். (எ-28)

# கண்ணீர் அஞ்சலி

**யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும் கந்தையா மகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை**

## முத்துக்கருப்பர் கந்தையா

**அவர்கள் 14.02.2012 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கள்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (14450)(6-7-8)

# மரண அறிவித்தல்

கலாபூஷணம்

## திருமதி இராஜமணி சிங்கராஜா



*மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி இராஜமணி சிங்கராஜா 10ஆம் திகதி கனடாவில் காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான வித்துவான் N.S உருத்திராபதி திருமதி யோகாம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான அளவெட்டி பசுபதி திருமதி தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிங்கராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மவதி அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குமாரசுந்தரம் மற்றும் தளையசிங்கம், காலஞ்சென்றவர்களான கனகராஜன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், ஸ்கந்தராஜா (கனடா), தர்மராஜா (கனடா), யோகராஜா (கொழும்பு), கோகிலத்வனி (கொழும்பு), ஆனந்தராஜா (கனடா), ஹம்சத்வனி(கனடா), மயூரத்வனி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், கமலாசினி (கனடா), நீதிமதி (கொழும்பு), விஜயராகவன் (கொழும்பு), உமாதேவி (கனடா), ஜெயேந்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஹரிணி (கனடா), வர்ஹினி (கனடா), தரங்கினி (கொழும்பு), தேனுகா (கொழும்பு), நீரஜா (கனடா), கௌமாரன் (கொழும்பு), வைஷாலி (கொழும்பு), தனாஸ்ரீ (கனடா), கஜானன் (கனடா), ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.*

கொழும்பு.

தகவல்:
வி.கோகிலத்வனி (மகள்)

(C\2941) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கூடைப்பந்தாட்டத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கூறுகிறார்

சுன்னாகம்,பெப்.15

வடமாகாணத்தில் கூடைப் பந்தாட்டத்தில் பல பாடசாலைகள் இணைந்து கொண்டுள்ளன.தேசிய ரீதியில் வெற்றிகளைப் பெறத்தக்க வகையில் கூடைப்பந்தாட்டத்தை வளர்ப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.இதற்கென பல பாடசாலைகளில் கூடைப்பந்தாட்ட மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி அதிபர் திருமதி கே.சிவராஜா தலைமையில் இடம் பெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது

யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் பிரபல்யம் பெற்றுள்ள பாடசாலைகளில் உள்ள வசதிவாய்ப்புக்களுடன் இப்பாடசாலையும் விளங்க வேண்டும். இன்று நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை சிறப்பானதாக இருந்தது.இடைவேளை நிகழ்வான இசையும் அசைவும் நல்ல முறையில் திட்டமிடப்பட்டதாக இருந்தது.

வேம்படி மகளிர்கல்லூரி, இராமநாதன்கல்லூரி, திருக்குடும்பம் கன்னியர்மடம் பாடசாலை, யாழ் இந்துக்கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களில் பாடசாலைகளில் அமைக்கப்பட்டு வருகின்றது. அதே போன்று இப்பாடசாலையிலும் இவ்வாண்டு இறுதிக்குள் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கு முயற்சியெடுக்கப்படும் என்றார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்க தலைவர் எஸ்.ரமணன் கலந்து கொண்டார். (த-38)

## மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலருக்கான பரீட்சை

வலி.வடக்கு, பெப். 15

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தரம் V பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இலங்கை மெய்வன்மைச்சங்கத்தினரால் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சை மார்ச் மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இந்த மாதம் 28ஆம் திகதியாகும்.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான படிவங்கள் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத் தலைவர் இளம்பிறையன் செயலாளர் சசிதரன், எம். பேட்டிபனிஸ்ரர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

## காலிறுதி ஞாயிறு

சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டம் ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (23)

## எல்லே போட்டிகள் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், பெப்.15

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுக்களில் பெண்களுக்கான எல்லே போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பித்த அனைத்துக் கழகங்களையும் குறித்த நேரத்தில் மைதானத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அன்றைய தினம் பி.ப 3 மணிக்கு மட்டுவில் வளர்மதி மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழக அணியும் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க. அணியும் மோதவுள்ளன. (த-9)

## வார இறுதியில் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுகிடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி 18 ஆம் திகதி சனிக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக மைதானத்திலும்,

பெண்களுக்கான எல்லைப் போட்டி 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்திலும், ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

## மேசைப்பந்தாட்டம் நாளை மானிப்பாயில்



வலிவடக்கு, பெப். 15

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையேயான 15, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

15 வயதுப் பிரிவு

அளவெட்டி அருனோதயக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

19 வயதுப் பிரிவு

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, அளவெட்டி அருனோதயக் கல்லூரி, தெல்லிப்ழை யூனியன் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம்.(த-86)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்களான தாமோதரம்பிள்ளை - பொன்னம்மா
தம்பதியரின் அன்பு மகன்

## அமரர் தாமோதரம்பிள்ளை வன்னியசிங்கம்

திதி: 15.02.2012



கூண்டுக்கிளிபோல் இருந்த எம் வாழ்வு சிதறியே போக
அண்ணாக்களையும் அக்காவையும் இழந்து - ஏன்
அம்மாவையும் கூட இழந்து - நாங்கள்
தவித்திருந்த வேளையிலும் - அப்பா நீங்கள்தானே
தனிமரமாய் நின்று எங்களை
அரவணைத்துக் காத்தீர்கள்
எங்களுக்கான வாழ்வையும் தேடித் தந்து
வாழவும் வழிபல சொல்லி வாழவைத்த - எங்கள்
அன்புத் தெய்வமே.... உங்கள் வாழ்வில்
எத்தனை சோதனைகள்... எத்தனை வேதனைகள்...
அதனையும் தாண்டி சந்தோஷம் எனும் பூங்காற்று
வீட்டில் தவழும் வேளையிலே....
வீடிழந்து வாசல் இழந்து ஊர் இழந்து
ஏதிலியாய் திரிந்த வேளையில்தான்
2009.02.18 அன்று மாலை வேளைதனில்
கடைக்கென சென்ற அப்பா..... வரவில்லையே?....
என்ற செய்தி காதைத் தீப்பிழம்பாக்கியது
வானலைகள் ஊடே கடல் கடந்து வாழும்
அண்ணாவின் காதில் சென்று சேர
அண்ணாவும் அண்ணியும் துடிதுடித்து
தொடர்பாடல் சேவையின் மூலம் தேட
நானோ அப்பாவுக்கு அருகிருந்தும் அப்பாவுக்கு
என்ன நிகழ்ந்தது என்று தெரியாமல் திகைத்துப் போய்
மூன்று நாள்களாக ஆகாரம் எதுவும் இன்றி
குண்டு மழைக்குள்ளும் குழைந்து குழைந்து தேடினேன்
என்ன நடந்தது அப்பா உங்களுக்கு என்ன நிகழ்ந்தது
எங்கு தேடுவோம்... தேடுகிறோம் அப்பா
தேடுகிறோம்.... தேடவேண்டிய இடங்கள் எல்லாம்
தேடினோம்... அப்பாவே எங்கள் அன்புத் தெய்வமே
உங்களைப் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காது
வெறுமையாய் நிற்கின்றோம்
தேடும் ஏக்கங்களுடனே இன்றுடன் மூன்று ஆண்டுகள் ஆனதுவோ
காலங்கள் விடைபெறலாம் உங்களின் பிரிவின்
ஏக்கங்கள் எம்மை வாட்டுகின்றனவே - ஆனாலும்
அம்மாவின் ஆத்மாவுடன் உங்களின் ஆத்மாவும்
சாந்தி பெற்றிருக்குமோ என்று மனதைத் தேற்றி
உங்களுக்கான ஆத்மகிரியைகளைச் செய்கின்றோம் அப்பா......

–உங்கள் ஆத்ம சாந்திக்காக [illegible]
பிள்ளைகள், [illegible]
பேரப்பிள்ளை மற்றும் உறவினர்கள்.


4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(11035)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் சண்முகநாதன்

(துரை அண்ணை)



யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியில் மணமுடித்தவரும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சண்முகநாதன் (09.02.2012) வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் (சாமியார்)- செல்வரத் தினம் தம்பதியரின் அன்பு மகனும், கனகாம்பிகை (ஜேர்மனி) அவர்களின் அன்புக்கணவரும், றதீஷா (லண்டன்), றதீஸ்வரன் (லண்டன்), வினுஷா (ஜேர்மனி), அனுஷா (லண்டன்), உஷா (லண்டன்), சகிலஷா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார், தயாளதர்ஷினி (லண்டன்), இளந்திரையன் (ஜேர்மனி), இளங்குமார், கலைச்செல்வன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சுதர்சன், றதீஸ்குமார், தர்சினி, நிறோஸ், சிந்துஜா, ஜதுசன், நிதுஷன், அபினாஷ், கவிஷா ஆகியோரின் ஆசைப் பேரனும், செல்வராசா, சித்திவிநாயகி, பாலாம்பிகை காலஞ்சென்ற திலகராணி, தருமராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலாம்பிகை, கணேசமூர்த்தி, பாமா, ருக்மணி, சிறீஸ்காந்தன் (சுதுமலை), விமலநாதன், காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதந்திரராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும், கலாயினியின் உடன்பிறவாச் சகோதரரும், நந்தா, கவிதா, விஜிதா ஆகியோரின் சிறியதகப்பனும், ராஜன், ராஜி, ரகு, ராகுலன், தியோனி, டானியல் கௌரி ஆகியோரின் பெரிய தகப்பனும், ராயு, ரஜன், காலஞ்சென்ற குகன் துர்கா, கோகிலா, தர்சி, தர்சிகா, சுரேகா, சுரேந்தன், சுரேந்தினி, கௌரி, கௌதமி, றஞ்சிதன், றமணன், றஷாத் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பிரேமன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: சகோதரி

றஞ்சிதா வைத்தியசாலை,
சுதுமலை, சங்குவேலி.

ஜேர்மன்
தொடர்பு: 004 942 146 76321 (14444) (45,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் பந்துவரை பரபரப்பு பார்வையாளருக்கே வெற்றி


இரண்டு பேருக்கும் அதிர்ஷ்டம் இல்லை

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற ஒரு நாள் ஆட்டம் இறுதிக் கணம் வரையில் பரபரப்பை ஏற்படுத்தி இறுதியில் சம நிலையில் முடிவடைந்தது. இலங்கை அணி வெற்றி பெறுவதற்கான சாத்தியம் இருந்தும் களத்தடுப்பில் சில தவறுகள் விட்டமையால் இந்தக் கதி நேர்ந்தது. அத்துடன் மஹேல மீண்டும் அணித்தலைவர் பொறுப்பை ஏற்ற பின்பு இலங்கை அணி முதல் முறையாக தோல்வியைத் தவிர்த்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் கொமன் வெல்த் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் நேற்றைய ஐந்தாவது ஆட்டத்தில் இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கை அணியில் திரிமன்னே மற்றும் தம்மிக்க பிரசாத் நீக்கப்பட்டு திஸ்ஸர பெரேரா, ஹேரத் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இந்திய அணியில் சேவாக், சகீர் கான் நீக்கப்பட்டு சச்சின், இர்பா பதான் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணிக்கு தரங்க 0, டில்ஷான் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமான ஆரம்பத்தையே அளித்தனர். அதன் பின்பு இணைந்து கொண்ட சங்ககார, சந்திமால் ஜோடி இலங்கை அணிக்கு சிறியதொரு நம்பிக்கையைக் கொடுத்தது. நிதானமாகத் துடுப்பெடுத்தாடினாலும் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் வேகமான இழப்பை ஈடுகட்டியது இந்த இணை.

51 ஓட்டங்களை மூன்றாவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் சங்ககார 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 19.4 பந்து பரிமாற்றங்களில் 79 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே மூன்றாவது இலக்காக சங்ககார ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் மஹேல, சங்காவைத் தொடர்ந்து களமிறங்கினார். தொடர்ச்சியாக துடுப்பாட்டத்தில் ஏமாற்றி வந்த மஹேல நேற்றைய தினம் இந்தியப் பந்து வீச்சை சிறப்பாக சமாளித்து ஓட்டங்களைக் குவித்தார். மறு முனையில் சந்திமாலும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் போட்டுத் தாக்கி ஓட்டங்களைச் சேகரித்தார். இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு கலக்கல் கொடுத்த சந்திமால் 56 பந்துகளில் தனது 5 ஆவது அரைச்சதத்தை எட்டிப் பிடித்தார்.

அதன் பின்னர் அவரது ஆட்ட வேகம் அதிகரித்தது. மஹேல மற்றும் சந்திமால் இருவரும் இலங்கை அணியை மிகப்பெரிய இலக்கை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தனர். துரதிஷ்டவசமாக 94 ஓட்டங்கள் இருவரிடையேயும் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் மஹேல 49 பந்துகளில் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 173 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே அந்த இலக்கு சரிக்கப்பட்டது.

தொடர்ந்து நுழைந்த மத்தியூஸ், வந்த வேகத்தில் மறுமுனையில் கலக்கிக் கொண்டிருந்த சந்திமாலை 81 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டாக்கினார்.' அடுத்துக் களமிறங்கிய திஸ்ஸர பெரேரா 5 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணி 184 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. அதனைத் தொடர்ந்து மத்தியூஸ், குலசேகரா ஜோடி இணைந்து நிதானமாக ஆடியது. ஓட்டங்களைப் பெறுவதற்கு தொடர்ந்தும் இருவரும் அந்தரித்துக் கொண்டிருந்ததால் மத்தியூஸ் 17 ஓட்டங்களுடன் 'ரன்அவுட்டில்' வெளியேற்றப்பட்டார்.

மத்தியூஸின் இழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய சேனநாயக்க இழந்திருந்த இலங்கையின் உற்சாகத்தை உச்சிக்கு ஏற்றினார். அதிரடிகளால் போட்டுத் தாக்கி இறுதிக் கட்ட தாக்குதல்களை வெற்றிகரமாக முன்நகர்த்திக் கொண்டிருந்தார். இறுதிப் பந்து பரிமாற்றத்தில் குலசேகர 12, மலிங்க 0 ஆட்டமிழந்தனர். இறுதியில் 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. சேனநாயக்க 14 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 22 ஓட்டங்கள் விளாசினார்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் வினய் குமார் 46 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அஸ்வின் 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

மிக இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய இந்திய அணிக்கு கம்பீர், சச்சின் ஜோடி சுமாரான தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தது. இருவரும் வேகமாக ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கினாலும் 6 பந்து பரிமாற்றங்களில் 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சச்சினை 15 ஓட்டங்களுடன் இந்திய அணி இழந்தது. தொடர்ந்து நுழைந்த இந்திய அணியின் 'ஹாண்ட்சம் போய்' ஹோக்லியும் 15 ஓட்டங்களுடனும், ரோகித் சர்மாவும் 15 ஓட்டங்களுடனும், ரெய்னா 8 ஓட்டங்களுடனும் இலங்கையின் சீரிய பந்து வீச்சில் சிக்கி சின்னாபின்னமாகினர்.

27.4 பந்து பரிமாற்றங்களில் 118 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய அணிக்கு அணித்தலைவர் டோனி, கம்பீர் ஜோடி இணைந்து தூக்கி நிறுத்த போராடியது. ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கம்பீர் 62 பந்துகளில் தனது 30 ஆவது அரைச்சதத்தை அடித்தார். மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய இந்த ஜோடியின் ஆட்டம் மூலம் இலங்கை அணியிடமிருந்து வெற்றி பறிக்கப்படும் என்றே பலர் பகல் கனவு கண்டனர். 40.3 பந்து பரிமாற்றங்களில் அணி 178 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை கம்பீர் 91 ஓட்டங்களுடன் ஓட்டமொன்றை பெற முற்பட்டபோது குலசேகரவினால் 'ரன்அவுட்டாக்கப்பட்டார்'. அடுத்த நுழைந்த ஜடேஜாவும் 3 ஓட்டங்களுடன் முடிச்சைக் கட்ட இந்தியாவின் வெற்றி ஊசல் ஆடத்தொடங்கியது.

30 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் 46 ஆவது பந்து பரிமாற்றத்தை திஸ்ஸர பெரேரா வீசினார். டோனி ஆறு ஓட்டம், அஸ்வின் 4 ஓட்டம் விளாசி ஆட்டத்தின் முடிவை மாற்றியமைக்க முற்பட்டனர். அடுத்த பந்து பரிமாற்றத்தை குலசேகர சிறப்பாக வீச 18 பந்துகளில் 28 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டது. மலிங்க 48 ஆவது பந்து பரிமாற்றத்தை வீச இரண்டாவது பந்தில் அஸ்வின் கொடுத்த பிடியெடுக்கும் வாய்ப்பை சங்கா வீணாக்கினார். இருப்பினும் அஸ்வினை பிடித்த சனியன் நான்காவது பந்தில் அவரை 14 ஓட்டங்களுடன் வெளியேற்றியது.


அடுத்து இர்பான் பதான் நீண்ட காலத்தின் பின்னர் களமிறங்கினார். 12 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் 49 ஆவது பந்து பரிமாற்றத்தை மத்தியூஸ் வீசினார். நான்காவது பந்தை எதிர்கொண்ட இர்பான் பதான் ஆறு ஓட்டம் விளாசினார். இருப்பினும் அடுத்த பந்து வீச்சிலேயே 'ரன் அவுட்டானார்'. அடுத்த பந்தை எதிர் கொண்ட டோனி நான்கு ஓட்டங்கள் விளாசி தனது 200 ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் 44 ஆவது அரைச்சதத்தை அடித்தார்.

இறுதிப் பந்து பரிமாற்றத்தில் 9 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் மலிங்க வீசிய முதலாவது பந்தில் டோனி 2 ஓட்டங்கள் பெற்றார். அடுத்த பந்தில் ஓர் ஓட்டம் பெற்று வினய் குமாரிடம் சந்தர்ப்பம் வழங்கினார். மூன்றாவது பந்தில் வினய் குமார் ஓர் ஓட்டம் பெற்றுக் கொள்ள 3 பந்துகளில் இந்திய அணி 5 ஓட்டங்கள்பெற்றால் வெற்றி என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்தைப் போன்று இந்த ஆட்டமும் ரசிகர்களின் இதயத் துடிப்பு வீதத்தை அதிகரித்தது. பரபரப்பாண கணத்தில் நான்காவது பந்தினை மலிங்க வீச டோனியால் ஓர் ஓட்டத்தை மட்டுமே பெற முடிந்தது. ஐந்தாவது பந்தை எதிர்கொண்ட வினய் குமார் தட்டி விட்டு ஓர் ஓட்டத்தை பெற முற்படுகையில் இலங்கை அணியின் மத்தியூஸால் 'ரன்அவுட்டாக்கப்பட்டார்'.

இறுதிப் பந்தில் நான்கு ஓட்டங்கள் பெற்றால் இந்திய அணி வெற்றி என்ற நிலையில் யுமேஸ் யாதவ் களமிறங்கி மறுமுனையில் ஓட்டத்துக்கு தயாராக இருக்க டோனி பந்தை எதிர்கொண்டார். சீறி வந்த மலிங்கவின் வேகத்தை 'எக்ஸ்ரா கவர்' திசையில் தட்டி நகர்த்தி விட்டு, டோனி மூன்று ஓட்டங்களை மூச்சிரைக்க ஓடி முடித்து இந்தியாவின் தோல்வியை தடுத்துக் கொண்டார்.

50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் இந்திய அணியும் 9 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. டோனி 69 பந்துகளில் 58 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். பந்து வீச்சில் இலங்கை சார்பில் திஸ்ஸர பெரேரா, மலிங்க தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகனான டோனி தெரிவானார். சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்களில் நேற்றைய ஆட்டத்துடன் சேர்த்து 26 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்துள்ளது. (5)


துடுப்பால் சண்டித்தனம் காட்டும் சந்திமால்


போனால் போகட்டும் போடா. ஆட்டமிழந்து வெளியேறும் ரோகித்


சிங்கம் ஒன்று புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது ஜெட்லைனஸ் வி.க

யாழ்ப்பாணம்,பெப். 15

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்ப்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஜெட்லைனஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை ஈச்ச மோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஜெட்லைனஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஜெட் லையினஸ் விளையாட்க் கழக அணி 2.0 என்ற செற் கணக்கில் ஈச்ச மோட்டை விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது.

(23)




## பாராட்டி வாழ்த்துகிறோம்

அல்வாய் வடக்கு (J/400) கிராம சேவைப் பிரிவின் கிராமசேவை உத்தியோகத்தராக, கிராம அபிவிருத்திக்காக அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் ஐந்து வருடங்களாகச் சேவையாற்றிய

**சின்னராசா சிவபாலசிங்கம்**

அவர்களை அகவை அறுபதில் சேவை நிறைவு பெறும் இந் நாளில் மணிவிழா காணும் நாயகனை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
அல்வாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
வட அல்வை இளங்கோ சனசமூக நிலையம்,
இளங்கோ விளையாட்டுக்கழகம், இளங்கோ மழலைகள் கல்விப் பூங்கா.

## கண்ணீர் அஞ்சலி



கிளி/முருகானந்தா கல்லூரியின் ஒய்வுபெற்ற ஆசிரியை திருமதி கிருஸ்ணவேணி நவரத்தினராசா அவர்களின் அன்புக் கணவர்

**மயில்வாகனம் நவரத்தினராசா**

*அவர்கள் கடந்த 11.02.2012 அன்று இந்தியாவில் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த் திக்கின்றோம்.*

**ஆசிரிய நண்பர்கள்,**
**முரசுமோட்டை.**

(14496)(6-10)

## மரண அறிவித்தல்

### செல்லையா தங்கச்சிப்பிள்ளை



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா தங்கச்சிப்பிள்ளை 13.02.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற கருணானந்தம் மற்றும் இலங்கேஸ்வரி, நித்தியானந்தம், பவானந்தம், பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தாயும். இராசரத்தினம், சகுந்தலாதேவி, மகாராசா, ஞானேஸ்வரி, சத்தியபாமா, கமலநாதன் (சிற்றூழியர், யா/சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் தர்சினி, மதனசூரியா, சுபாசினி, எழில்மதனி, இமையகாந்தன், எழி லரசி, பிரதீபன், காலஞ்சென்றவர்களான ஜீவகாந்தன், சுகந்தினி, சதீஸ்தீபன் மற்றும் பிறேமினி, தபோதினி, கீதாயினி, பவேந்திரன், நிசாந்தி, திலக்சன், நிதர்சன்,ஜெனனி, நிசாந், சுபதீபன், சுசீபன், தேனுயன், லக்சாயினி, பிரசாந்தி, பாலகிருஸ்ணன், குலேந்திரன், ஜெயரூபன், யஸ்ரின் ஆகியோரின் பேர்த்தியும், றிஷி, விகாஸ், கரிகாலன், பவ்னா, சஜித் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.02.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தி யோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**ஏழாலை மேற்கு,**
**தம்புவத்தை.**

(14495)(6-8)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



**புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட**

## திருமதி நடராசா சிவக்கொழுந்து

**தோற்றம்: 10-08-1931**
**மறைவு: 25-02-2011**
**திதி: அட்டமி 15.02.2012**

அன்புடனே எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எமக்கு நல்வழி காட்டி
இல்லத்தின் குலவிளக்காய் நல் ஒளி வீசி
ஈடிலாப் பாசமுடன் எம்மை
ஆளாக்கி வைத்த தாயே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம் துயரம்
என்றும் உங்கள் அன்பு முகத்தை
நெஞ்சில் நினைந்து ஏங்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு.**

(14494) (6,10)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17 ★ 07 ★ 1948

விண்ணில் 26 ★ 02 ★ 2011

**பெருமாள் பாக்கியம்** (திதி - நவமி)

ஆண்டுகள் ஒன்று
ஓடி மறைந்தாலும் - எம்மால்
தாங்க முடியவில்லை உங்கள் பிரிவை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.

(14511)

பாலகுமாரன்
(மகன் - லண்டன்)

# தவறிவிட்டது

அரியாலையைச் சேர்ந்த தியாகலிங்கம் சபிந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (900733569V) சாரதி அனுமதிப்பத்திரம், வாகனக் காப்புறுதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம் என்பன ஆடியபாத வீதிக்கும் நாயன்மார்கட்டு சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்பு. 0778039554

# சேவை நலன் பாராட்டுகிறோம்



## திருமதி மாசிலாமணி இராஜேஸ்வரி (SLPS-I)

(பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை)

**சேவை விவரம்**

மு/ பாண்டியன் குளம் ம.வி 26.04.1982- 04.05.1989
மு/ மல்லாவி மத்தியகல்லூரி 05.05.1989- 04.08.1989
யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் 05.08.1989- 31.12.1989
கம்/ போலவலான ஆசிரிய பயிற்சிக் கல்லூரி 01.01.1990- 31.121991
யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் 01.01.1992- 01.02.1992
யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி 02.02.1992- 09.01.2005
யா/ கைதடி முத்துக்குமாரசாமி ம.வி 10.01.2005 - 15.02.2015

நாட்டின் பல பாகங்களிலும் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து இறுதியாக எமது பாடசாலையில் 10.01.2005 - 15.02.2012 வரை தனது அன்பாலும் அரவணைப்பாலும் அனைத்து மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்று இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் எங்கள் ஆங்கில ஆசான் அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி

# வவுனியாவில் வேலை வாய்ப்பு

அச்சகத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை கணினி இயக்குபவர்(Photo shop, Page maker தேர்ச்சியுடையவர்கள்)OFF SET- இயக்குபவர்(Camada) புத்தகம் கட்டுபவர்(Binder)
தொடர்புகள்(சனிக்கிழமைக்கு முன்)
0243243265. 0242226747

# THAIROSE வைற்றிங் கிறீம்

## பாவனையாளருக்கு உருக்கமான ஓர் வேண்டுகோள்

யாழ் மற்றும் வன்னி மாவட்டங்களில் THAIROSE வைற்றிங் அதிகளவு போலி விற்பனையாளர்களாலும் மற்றும் நடமாடும் வியாபாரிகளினாலும் பரவலாக போலியான கிறீம் அதிகளவில் மிகக் குறைந்த விலையிலும் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன. இதை கருத்தில் கொண்டு தரமான கிறீமை பெற்றுபலன் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதிகபட்ச சில்லறை விலை 680/-
வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

இனங்காணும் முறை-
பெட்டியில் உள்ள கற்லொக்கில்
விநியோகஸ்தர்களின் இறப்பர் முத்திரை
பொறிக்கப்பட்டிருக்கும்.

யாழ். மாவட்ட முகவர்
மயூரா விநியோகஸ்தர்
25, நவீன சந்தை, மின்சார வீதி,
யாழ்ப்பாணம்.

THAIROSE WHITING COMPANY,
47b, முஸ்லிம் பள்ளிவீதி, கோரக்கான,
கெசல்வத்த, பாணந்துறை.

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27 ★ 03 ★ 1936

## அமரர் மகேஸ்வரி பரமானந்தம்

இறப்பு 25 ★ 02 ★ 2011

ஆண்டு ஒன்று கடந்தாலும்
உங்கள் அன்புருவம் மறக்கமுடியாது
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலா
இனி ஒரு பிறப்பு இருக்குமெனில்
இணைந்தே இருக்க விரும்புகின்றோம்
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
பிள்ளைகள்

# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி ஞானகி சங்கர் அவர்களின் அன்புத் தந்தை

## திரு. கு.ஞானசேகரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நலன்புரி சங்கம்


# ஸ்ரீராம் மெடிக்கல்

ஆனைக்கோட்டைச் சந்தி.



யாழ். பிரபல வைத்திய நிபுணர்கள் பார்வையிடுவர்.

பார்வையிடும்நேரம்
தினசரி 4.30 - 7.30 பி.ப.


# மரண அறிவித்தல்கள்

## Dr.அ.மரியதாஸ்



(ஓய்வுபெற்ற வைத்தியர்)

அடம்பன் வீதி யாழப்பாணததைப் பிறப்பிடமாகவும் நவாலியை வதிவிடமாகவும் கொண்ட Dr.அ.மரியதாஸ் நேற்றுமுன்தினம் (13.02.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி மேரி நாயகியின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான திருமதி மேரிஜோசேபின் ஜேம்ஸ், அ.அரசரட்ணம், அ.ஜேம்ஸ் மற்றும் திருமதி ஜெயராணி தொம்மைக் குட்டி, திரு மதிரஞ்சிதம் ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரனும் A.C.ஆனந்தராஜா (பொறியியலாளர் சுவிற்சிலாந்து), E. ரவீந்திரராஜா (ஆசிரியர்-சென் பீற்ற றேஸ் கல்லூரி பம்பலப்பிட்டி), M.R.மோகன தாஸ் (யாழ்மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனர்), Dr.ஜோய் ஜேசுதாஸ் (ஆஸ்திரேலியா),றோய் மேவின் (ஆசிரியர் Bond international college கிரலப்பினை) ஆகியோரின் அன்புத்தந்தையும் அஞ்சலிகா, தர்சினி, செல்வ மகள், சுகிர்தா, ஆகியோரின் அன்பு மாமனும் வோகான்,ஹம்லின் ஆகியோரின் பிரியமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.02.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு நவாலி புனித பேதுறு ஆலயத்தில் பி.ப. 3.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்

தகவல்:
M.R.மோகனதாஸ் (மகன்)

## பொன்னம்பலம் நடராசா



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா நேற்றுமுன்தினம் (13.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும், தங்கராசாவின் அன்புச் சகோதரனும், பரமசிவம் (கனடா), ஜெயலிங்கம் (லண்டன்), ஜெயலச்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, வவா, கனகநாயகம் ஆகியோரின் அன்பு மாமனும் செந்தூரன், கீர்த்தனா, குகதர்சன், நந்துசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2012) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயில் வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

(வி/8957)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிதம்பரநாதன் மகேஸ்வரி



நீர்வேலியைச் சேர்ந்த சிதம்பரநாதன் மகேஸ்வரி நேற்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - இரா சம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இரா சம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிதம்பரநாதனின் அன்பு மனைவியும் மீரா (நூலகர்,வலி. வடக்கு பிரதேச சபை, பொது நூலகம், அள வெட்டி), சகிரா, சஜீவன் (லண்டன் M.B.A University) ஆகியோரின் அன்புத் தாயும் இ. பார்த் தீபனின் அன்பு மாமியும் சாஜகான், சரண்யா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பாலசிங்கம் (கனடா), நடராஜா, சுப்பிர மணியம் (R.V.G), கந்தசாமி (ஞானலக்ஷ்மி லொறி உரிமையாளர்), கங்காதரன் ஆகி யோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி (கனடா), புஸ்பலீலா, சரஸ்வதி, கேதீஸ் வரி (றஞ்சி), கந்தசாமி (பிரான்ஸ்), குமார சாமி (கொலண்ட்), பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2012) புதன்கிழமை பி.பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு
..., நீர்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இரத்தினசிங்கம் செல்லம்மா



காரைநகர், மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகவும், சம்பந்தர்கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் செல்லம்மா 13.02.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவசிவாயம்- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சின்னத்துரை மற்றும் சுப்பிரமணியம், மகேசன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவமணி மற்றும் நேசரத்தினம் , நாகேஸ்வரி, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் புஸ்பராணி, செல்வராசா, புவனேஸ்வரி, பேரின்பராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் பரமநாதன், நாகேஸ்வரி, சற்குணராசா, விக்கினராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சுபத்திரா, கஜவதனன், யசோதரன், பிரியதர்சினி, சுபாஜினி, சாயிசங்கர், சாயி கணபதி, சிவகாமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2012) வியாழக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பந்தர்கண்டி,
காரைநகர்.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து 17 இல் கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

## அனைவரையும் அழைக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப்.15

அரசால் நாட்டில் கட்டவிழ்த்து விடப்படுகின்ற நாசகாரச் செயல்கள் அனைத்தும் தேசிய லேபலொன்று ஒட்டி நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அரசின் இந்தச் செயற்பாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதன் மூலம் பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் இணைப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். மக்களை இந்தப் பெரும் சுமையிலிருந்து மீட்பதற்கு மக்களுக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும் குரல் கொடுப்பதற்கு, நாளை மறுதினம் 17ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடவுள்ளது.

மிகவும் பிரமாண்டமான முறையில் மக்களின் பணத்தைச் சுரண்டுவதற்கு அரசு பல நுட்பங்களைக் கையாளுகின்றது. எரிபொருள் விலையேற்றத்தால் வாழ்க்கைச் சுமையை தாங்கமுடியாமல் அல்லலுறும் மக்களுக்கு அரசு என்ன மானியம் வழங்கப் போகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த அரசு சர்வதேசத்திடம் பெரும் கடன்தொகையைப் பெற்று நாட்டைக் கடனாளியாக்கியுள்ளது. அரசின் இந்த நாசகாரச் செயல்களை மூடி மறைப்பதற்காகத் தனது சுமையை அப்பாவி பொதுமக்கள் மீது சுமத்துகின்றது. எரிபொருள் விலையேற்றம் அபரிமிதமான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை அடியொற்றி மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கப்படும் எனவும் கூறுகின்றது.

அரசால் நாட்டில் புதிய புதிய பிரச்சினைகள் முளைக்கின்றனவே தவிர, இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகத் தெரியவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு அரசு என்ன செய்யப்போகின்றது?

'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சிக்கு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பணம் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் வீணாக செலவழிக்கப்பட்டுள்ளது. 'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சி நடந்த இடத்தைத் தற்போது சென்று பார்த்தால் வெறும் தரையாகவே இருக்கும்.

அரசின் நாசகார செயல்கள் அனைத்தும் மென்மேலும் அதிகரித்தவண்ணமே உள்ளன. நாம் எவ்வளவு எடுத்துக் கூறினாலும், அரசு உணர்வதாக இல்லை. அரசால் நாட்டில் கட்டவிழ்த்து விடப்படுகின்ற நாசகாரச் செயல்கள் அனைத்தையும் தேசிய லேபலொன்றை ஒட்டி நடைமுறைப்படுத்துகின்றது.

எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக விமானக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயத்தின்போது நாட்டிற்குச் சொந்தமான விமானத்தை எடுத்துச்சென்று, அதனை அங்கேயே நிறுத்திவைத்துவிட்டு, மீண்டும் அந்த விமானத்திலே நாடு திரும்பினார்.

நாட்டின் சேவையில் ஈடுபடுத்தவேண்டிய விமானத்தை ராஜபக்ஷ தனது தனிப்பட்ட காரணங்களுக்கு எடுத்துச்செல்வது மட்டுமல்லாமல், தான் செல்லும் நாட்டிலே அந்த விமானத்தையும் நிறுத்திவைத்துக் கொள்கின்றார்.

தற்போது சிங்கப்பூர் விஜயம் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு இன்னுமொரு விமானத்தை எடுத்துச்சென்றுள்ளார். இவ்வாறு செய்தால் நாட்டின் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடையவே செய்யும். அத்தோடு, விமானசேவையிலும் ஸ்தம்பிதம் ஏற்படும்.

அரசின் நாசகாரச் செயற்பாடுகளின் காரணமாக அப்பாவி மக்களே பெரிதும் அல்லல்படுகின்றனர். மக்களைத் துன்பங்களிலிருந்து மீட்பதற்கு ஆதரவாகவும், அரசிற்கு எதிராகவும் நாம் குரல் கொடுப்போம் - என்றார்.

# குடிதண்ணீர் திட்டத்துக்கு 41 மில்லியன் ஒதுக்கிடு

யாழ்ப்பாணம் ,பெப்.15

இரணைமடுக் குளத்திலிருந்து புங்குடுதீவு வரை குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்காக 41 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலக வங்கிக் குழுவின் நேரடிப் பார்வையில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பெரும் நீர் விநியோகத் திட்டத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டே பூர்த்தியடையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் 60 வீதமான மக்கள் இந்த நீர் விநியோகத்திட்டத்தின் மூலம் பயனடைவர். இதன் முதற்கட்டப் பணிகளை கிளிநொச்சி முதல் புங்குடுதீவு வரை 23 பாரிய நீர்த் தாங்கிகளும் 2நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைப்பதற்கான காணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன. இதனைவிட பளைப் பிரதேசத்திலும் கல்லுண்டாய்ப் பகுதியிலும் இரண்டு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன . 18 மில்லியன் ரூபா செலவில் 6நீர்த் தாங்கிகளும் , 520 கிலோ மீற்றர் குழாய்களும் அமைக்கப்படுவதுடன் 23 மில்லியன் ரூபா செலவில் வடமராட்சி உட்பட குடாநாட்டில் உவர்நீர்த் தடுப்பணைகளும் அமைக்கப்பட்டுச் சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (எ-14)

# வடமராட்சி மீனவர் போராட்டம்

வடமராட்சி வடக்கு மீனவர்கள் நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் தொழிலுக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

எரிபொருள் விலையைக் கண்டித்து தமக்கு மானியம் வழங்கக் கோரியே இவர்கள் தொழிலுக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நேற்றையதினம் மீன்பிடி அமைச்சின் ஊடாக கடற்றொழிலாளர்களுக்கு மானியவிலையில் எரிபொருள் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

# சிங்கப்பூரில் ஜனாதிபதி மகிந்த



சிங்கப்பூருக்கான இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ நேற்றுப்பிற்பகல் அந்த நாட்டின் ஷாங்கி விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

சிங்கப்பூர் ஜனாதிபதி கலாநிதி டேன் கெங் யேமின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று இருதரப்பு பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் ஜனாதிபதி கைச்சாத்திடவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ங-சி)

# பிளேக்குக்கு விசராம்!

1

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மின்சார நாற்காலி தண்டனை விதிக்க அமெரிக்கா முனைப்புக் காட்டி வருகிறது. அமெரிக்கா, அரசிற்கும் படையினருக்கும் எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களைக் கண்டு அரசு கலக்கமடைய வேண்டியதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாலைதீவில் இடம்பெற்று வரும் குழப்ப நிலைமைகளுக்கு அமெரிக்காவே பொறுப்பு என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ங-சி)

கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டச் செயலகத்தின் மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனராக கடமையாற்றும் திரு.எம்.ஆர் மோகனதாஸ் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் Dr.அ.மரியதாஸ்

அவர்கள் 13.02.2012 ஆம் திகதி இறைபதம் அடைந்ததனையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்

ஆசிரியர் தேவை

[illegible] (English Medium) Maths, Bio-Che, Phy, English படிப்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. தொடர்பு. 0718946461

# இலங்கைக்கு தொடர்ச்சியாக மேற்குலகம் அநீதியிழைப்பு

1

டலின்போது அமெரிக்க இராஜதந்திரிகளிடம் ஜனாதிபதி மஹிந்த மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் மனித உரிமையை நிலைநாட்டுவதில் நாம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம். இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். இவ்வாறெல்லாம் மேற்கொண்ட போதிலும் மேற்குலக நாடுகள் எமக்கு அநீதியையே இழைக்கின்றன.

மேற்குலக நாடுகளுடன் நட்புறவைப் பேணிவரும் எமக்கு அந்நாடுகள் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன, அநீதி இழைக்கின்றன. என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-சி)

# வன்னிப் பகுதியில் இன்னும் 1 மில்லியன் மிதிவெடிகள்

1

தவிகளுடன் மிதிவெடி அகற்றும் 15 பெரிய கனரக இயந்திரங்களின் மூலம் மிதிவெடிகளை அகற்றும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற 893 மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு இலங்கை அரசு மிதிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறது - என்றுள்ளது. (த-3)

# அத்தியாவசியப் பொருள்களும் கிடுகிடுவென விலை எகிறின

1

வால் உயர்த்தப்பட்டிருந்தது. யாழ். நகரப்பகுதி வர்த்தக நிலையங்களில் நேற்று இந்த விலை அதிகரிப்பை உணர முடிந்தது. முன்னர் ஒரு கிலோ 83 ரூபாவாக விற்கப்பட்ட சீனி நேற்று முதல் 5 ரூபா அதிகரித்து 88 ரூபாவாக உயர்ந்தது. கொழும்பிலும் சீனியின் விலை உயர்ந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும், குறிப்பாக கோதுமை மா, மைசூர் பருப்பு, சமையல் எண்ணெய், அரிசி, செத்தல் மிளகாய், மல்லி, இஞ்சி, உள்ளி, தேங்காய் எண்ணெய், மஞ்சள், சீரகம், சோயா ஆகியவற்றின் விலைகளையும் சில தினங்களில் உயர்த்த வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். வர்த்தகர்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தனர்.

இந்தப் பொருள்கள் பெரும்பாலும் கொழும்பில் இருந்தே எடுத்துவரப்படுகின்றன. பார ஊர்திகளே இதற்கெனப் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருளான டீசல் லீற்றர் ஒன்றுக்கு 35 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் நாம் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனவும் வர்த்தகர்கள் கூறினார்கள்.

சில வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பொருள்கள் முடிவடைந்து விட்டதாகவும் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நேற்று பொருள்களை வாங்குவதற்கு வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற நுகர்வோர் ''ஒரு பக்கம், எரிபொருள் விலை உயர்வு மறுபக்கம் பொருள்களின் விலை உயர்வு. எல்லாம் எங்கள் தலைகளில்''தான் எனவும் விசனப்பட்டுக் கொண்டனர். (த-17)

# சவேந்திர சில்வா நியமனம் குறித்து நவநீதம்பிள்ளை பெரும் அதிருப்தி

1

றையும் அனுப்பி வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் வெளியே வந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், இது கவலைக்குரிய விடயம். பரிசீலனை விடயத்தில் ஐ.நா. மிகவும் தெளிவான கொள்கையைக் கொண்டது. இது எனது பணியகம் செய்யும் வேலையின் ஒரு பகுதியாக உள்ளது.

மனித உரிமை மீறல்களைப் புரிந்தவர்கள் என்று சந்தேகப்படும் தனிநபர்கள் பற்றிய பட்டியல் ஒன்றை நாங்கள் பேணி வருகிறோம்.

இந்த நபர் (மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா) தொடர்பாக, ஐ.நா பொதுச் செயலருக்கு கவலை தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன் - என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்து தொடர்பாக உடனடியாக கருத்து எதையும் வெளியிட ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் மறுத்துவிட்டார்.

அத்துடன் நியூயோர்க்கில் உள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதி பணியகமும் இதுதொடர்பாக கருத்து வெளியிட மறுத்துள்ளது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி சாந்தபுரத்தில் 'மர்மமனிதர்கள்' நடமாட்டம்

கிளிநொச்சி, பெப்.15

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் இரவு வேளைகளில் மர்ம நபர்கள் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாகப் பெண்கள் தனித்திருக்கும் வீடுகளில் இரவு வேளைகளில் இப்படியான நபர்கள் புகுவதாகவும் தாம் விழிப்படைந்து கூச்சலிட்டால் அவர்கள் தப்பியோடி விடுகின்றனர் என்றும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 15 நாள்களாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாகவும் நேற்றிரவு 7.30 மணிக்கு சாந்தபுரம் 14ஆம் ஒழுங்கையில் வீடொன்றுக்குள் அரைக்காற்சட்டை அணிந்த ஒருவன் புகுந்ததாகவும் வீட்டார் கூச்சலிடவே அவன் தப்பிச்சென்றுவிட்டான் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதேபோன்று அருகிலுள்ள காட்டுக்கு விறகு முறிக்கச் சென்ற பெண்ணொருவர் காட்டுப்பகுதியில் நிர்வாணமாக ஒருவர் நின்றதைக் கண்டு பதறி ஓடி வந்தார் என்றும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் அருகிலுள்ள இராணுவத்தினரிடம் முறையிட்டால், அப்படியான நபர்களை பிடித்துத்தருமாறு அலட்சியமாகக் கூறுகின்றனர். பொலிஸாரிடம் முறையிட்டால் தகுந்த ஆதாரங்களின்றி முறைப்பாட்டைப் பதிவு செய்யமுடியாது என்று தெரிவிக்கின்றனர் எனவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

(10-6)

உங்கள் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க
தொ.பே.: 0215671111
தொலைநகல் 021 222 9731

தேவை
அலுவலக சிற்றூழியர் தற்காலிகம் ஆண்/பெண் நேரில் வரவும்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

அவுஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

நாங்கள் என்ன மந்திரத்திலா மாங்காய் பறிக்கின்றோம்

இல்லவே இல்லை...

அந்த நாட்டு குடிவரவு குடியகல்வு நடைமுறைகளிக்கமைவாகவே சட்டபூர்வமான ஆலோசனைகளையே உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம்.

எப்படி இதனை உறுதி செய்யலாம்?...

ஆஸ்திரேலியா மெல்பேர்ண் நகரிலுள்ள எமது அலுவலகக் கிளைக்கு உங்கள் உறவுகளை அனுப்பி 0061412479209 எமது ஆலோசனைப்படி குடிபெயர்ந்த 5 குடும்பங்களுடன் தொடர்புபட்டு அனைத்தையும் அலசி ஆராயலாம்

இம்மாதம் 25ஆம் நாளின் பின் எம் நிர்வாக சபையின் கட்டாய கட்டளைப்படி

'மன்னிக்கவும் ஆஸ்திரேலியா விசா ஆலோசனை வழங்குவது முடிவுக்கு வந்துள்ளது''

என்கின்ற பதிலே தங்களிற்காகக் காத்திருக்கப்போகின்றது.
எனவே தாமதிக்காது தற்போது இவ்விசேட ஆலோசனைச் செயற்திட்டத்துக்காக எம்முடன் இணைந்திருக்கும் 106 குடும்பங்களுடன் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.
(எந்தத் தடவையும் நீங்கள் எந்த நேரமும் எம்மிடம் வந்து ஆய்வு செய்து கொள்ளலாம்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்,
தலைமைக் காரியாலயம்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016
கிளைகள், 11ஏ,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி. 0214914527
www.thisaikaddi.lk
thisaikaddi@sltnet.lk



IELTS
BRITISH COUNCIL
IELTS FOR UK
STUDENT VISA APPLICANTS
"BRITISH COUNCIL
TRAINED TRAINERS"
Course Schedule — Sat & Sun
Duration — 10 Weeks
Time — 8.30 to 11.30
கடந்த காலங்களில் இங்கு IELTS கற்று 100% எமது மாணவர்கள் 6.5 மேல் மதிப்பீடுகள் பெற்றுள்ளனர்
புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 18.02.2012
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road,
Thirunelvely - Jaffna.
Tel. 021 222 0384
077 8803887



2012 புதிய ஆண்டில் குமரகுருவின் புதிய திட்டங்கள்
0% வட்டி கடன் கொள்முதல் வசதிகள்
05.02.2012 – 23.03.2012 வரை அதிகூடிய கொள்முதல் செய்யும் வாடிக்கையாளருக்கு தங்கநாணய பரிசில்கள்
உங்கள் பொருட்களுடன் இலவசமாக வீடுவரை செல்லும் வாகன வசதிகள்
ATM VISA MASTER CARD ஊடான கொள்முதல் வசதிகள்
வெளிநாட்டு நாணயங்களுக்கான கொள்முதல் வசதிகள்
கிளிநகரில் உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அதிநவீன வசதிகளுடன்
குமரகுரு மல்ரிசொப்
அன்பான
வாடிக்கையாளர்களுக்கு
23.03.2012 எமது குமரகுரு மல்ரிசொப் வாணிபத்தின் முதலாவது அகவை நிறைவுநாள் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்பாக கேட்டுக்கொள்கிறோம்.
இப்படிக்கு
உரிமையாளர்
பணியாளர்கள்.

கடன் கொள்முதல் வசதிகள்
0% வட்டி
குமரகுரு மல்ரிசொப்பின் முதலாம் ஆண்டு நிறைவுநாளான 23.03.2012 அன்றிலிருந்து நிலையான வாடிக்கையாளர்களுக்கான கடன் கொள்முதல் வசதிகள் 0% வட்டிவிதத்தில் பதிவுகளுக்கு முந்துங்கள்
புதிதாக வாடிக்கையாளர் அட்டை பெறவிரும்புவோர் 05.02.2012இல் இருந்து குமரகுரு வாணிபத்தின் எக்கிளைகளிலும் பெறமுடியும்.
அத்துடன் 1000/= ரூபாவுக்கு மேல் கொள்முதல் செய்யும் ஒரு வாடிக்கையாளருக்கு 1Kg சீனி 50/= விலைக்கு 1Kg பெறமுடியும்.

1வது அகவையில்
குமரகுரு மல்ரி சொப்
0% கடன் கொள்முதல் வசதிகளுடன்



மாபெரும் மலிவு விற்பனை

கிளிநகரில் உதயமாகி முதலாவது அகவைகாணும்
குமரகுரு மல்ரிசொப் வாணிபத்தின்
முதலாவது ஆண்டின் நிறைவுநாளை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
05.02.2012 தொடக்கம் 23.03.2012 வரை
05.02.2012 இல் இருந்து 23.03.2012 வரை அதிகூடிய பெறுமதிக்கு கொள்முதல் செய்யப்படும் வாடிக்கையாளர்களுக்கு தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எதை உடையவன்
என்பதன்று
எத்தகையவன் என்பதே
இன்றியமையாக் கேள்வி
-ஆர்.எஸ்.
ஸ்டீவன்சன்

# புதன் பொய்கை A

உதயன் 15 பெப்ரவரி 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# பாடசாலையின் வினைத்திறன் அதிகரிப்புக்கு பொறுப்புக் கையளித்தல் மிக அவசியம்

**நடேசு தயாளன்**
யா/கொழும்புத்துறை துரையப்பா
வித்தியாலயம்

ஒரு நிறுவனம் கிடைக்கப்பெறும் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி வினைத்திறனுடன் செயற்பட்டு நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளினை அடைந்து கொள்ளுதல் வினைதிறன் எனப்படும் இந்த வினைத் திறனினை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் பாடசாலை என்ற சமூக நிறுவனம் மீது இன்று பல விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. கல்வியை வழங்குவோர் தமக்குத் தேவையான அறிவை வைப்புச் செய்யும் இடமே பாடசாலை. சமூகத்துக்குத் தேவையான கல்வியைப் பாடசாலைகள் வழங்குவதில்லை. ஊழியப் படையினை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாயுள்ளது.

பாடசாலையென்பது ஓர் இறந்த அமைப்பு என்று பல விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் எதிர்காலப் பாடசாலை என்ற எண்ணக் கருவும் தற்போது தோற்றம் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

தாம் உருவாக்கிக் கொண்ட சகல குறிக்கோள்களையும் உயரிய மட்டத்தில் அடையும் பாடசாலையானது வினைத் திறனுடைய பாடசாலையாகக் கொள்ளப்படுகின்றது. விக்டோரியா ஜே.பேக்கரின் " த பிளக்போட் இன் த ஜங்கிள் " என்ற நூலில் வினைதிறனுடைய பாடசாலையானது பின்வரும் இயல்புடையதாகக் காணப்படும் என்று கூறப்படுகின்றது.

1. மாணவரது பாடசாலை அடைவு உயர் மட்டத்தில் காணப்படல்.
2. பாடசாலை மாணவர்களது இடைவிலகலானது மிகக் குறைவாகக் காணப்படல்
3. பரீட்சை அடைவு மட்டங்கள் உயர்வாகக் காணப்படல்
4. பாடசாலைக்கும், சமூகத்துக்குமிடையே மிக நெருக்கமான உறவு காணப்படல்
5. சிறந்த நூலகம் காணப்படல்
6. பாடசாலையின் பௌதிக வளங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படல்
7. கற்றல் சாதனங்கள் பொருத்தமானதாகக் காணப்படல்
8. இணைபாடவிதானச் செயற்பாடுகள் சிறப்பாக இடம் பெறல்
9. கற்றல் செயன்முறையானது ஆக்கபூர்வமானதாகவும், புதுமைப் பாங்குடையதாகவும் காணப்படல்

இவ்வாறு வினைதிறனுடைய பாடசாலையாக ஒரு பாடசாலையை மாற்ற வேண்டுமானால் அம்மாற்றத்துக்குப் பங்காற்றக் கூடிய காரணிகள் தொடர்பில் எமது கவனம் திசைதிருப்பப்படல் அவசியமானதாகும். மாற்றங்கள் கட்டாயமானதும் அவசியமானதுமான ஒரு யுகத்தில் வாழும் நாம், கல்வித் திட்டமிடல், ஒழுங்குபடுத்துதல், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்ற விடயங்களில் எமது கவனத்தினைச் செலுத்துதல் அவசியமானதாகும்.

வினைத்திறனுடைய பாடசாலை உருவாக்கத்துக்குப் பல்வேறு காரணிகள் அவசியமாயுள்ள நிலையில் அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாததான பணிக் கையளிப்புத் தொடர்பில் கவனம் செலுத்துதல் மிக இன்றியமையாததாகும். நிறுவனத்துக்கான நோக்கத்தினைத் தீர்மானித்து அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் பணியாளரை ஊக்குவித்து அவர்களிடையே பணிக் கையளிப்பினை மேற்கொண்டு அதற்கான ஊக்கத்தை வழங்கும் போது அதனூடாகச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு பிரிவினர் அதிகாரத்தினை, மற்றொரு பிரிவினருக்கு அதிகாரபூர்வமாக வழங்குதலும் அதனடிப்படையில் அதிகாரத்தினைப் பெற்றுக் கொண்டவர் செயற்படுதலும், அதிகாரத்தினை வழங்கியவர் அதனை மேற்பார்வை செய்தலும் இதனுள் அடங்கும். இங்கு முகாமையாளர் அதிகாரங்களைக் கையளித்தலும், அதற்கான கூட்டுப் பொறுப்புடனான செயற்பாடுகளும் அதிகாரக் கையளிப்பாகக் கொள்ளப்படுகின்றது. பாடசாலையினுடைய வினைத்திறன் அதிகரிப்புக்குப் பொறுப்புக் கையளித்தல் அவசி யமானதாகும். பொறுப்புக்களைக் கையளித்தல் என்பது அடிப்படையான முகாமைத்துவத் திறனாகும். பொறுப்புக்கள் கையளித்தலானது மேலிருந்து கீழாகவோ பக்கப்பாடானதாகவோ அமையலாம் பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டவர்கள் தமது மேலாளருக்குப் பொறுப்புக் கூற வேண்டியுள்ள அதேவேளை மேலாளர்கள் வேலையைச் செய்து முடிப்பதிலும் கவனம் செலுத்து தல் அவசியமானதாகும்.

பாடசாலையில் ஆசிரியர், பகுதித் தலைவருக்குப் பொறுப் புக் கூற வேண்டியவராகவும் உள்ள அதேவேளை, பகுதித் தலைவர்கள் வேலை நடைபெறுவதனை நோக்குவதாகவும், உறுதிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். பொறுப்புக் கையளித்தல் என்பதோர் கலையாகும்.

இது பாடசாலை என்ற நிறுவனத்தினது நடத்தை சார் எதிர்பார்ப்புக்கள் பொருளாதார எதிர் பார்ப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடையது. இந்தப் பொறுப்புக் கையளித்தலின் மூலம் பின்வரும் அனுகூலங்களை அடைந்து கொள்ள முடியும்.

1. நேரத்தினைச் சரியாகப் பயன்படுத்தலாம்
2. இச் செயற்பாடானது பாடசாலை முகாமையாளரது சுமையைக் குறைப்பதுடன் நேரத்தினைப் பயனுடையதாகப் பயன்படுத்தவும் முடிகிறது.
3. தொடர்பாடல் செயன்முறையினை அதிகரிக்கின்றது.
4. வேலைப் பிரயோகத்தினை அதிகரிக்கின்றது.
5. ஊக்கல் செயன்முறையாக அமைகின்றது.
6. தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சியினை பெற முடிகின்றது.
7. பொறுப்புக்களைக் கையளிப்பவரும் பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டவரும் பாடசாலை என்ற நிறுவனத்தினை வினைத்திறனுடைய அமைப்பாக்குவதில் பங்காற்ற முடிகின்றது.
8. தனது தொழில் நிலையில் திருப்தியினைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட பொறுப்புக் கையளித்தலில் தாக்கத்தினை அல்லது பின்னடைவினை ஏற்படுத்தும் காரணிகளாவன.

1. சக பாடிகள் தொடர்பான பாடசாலை முகாமையாளரின் பய உணர்வுகள்.
2. சக பாடிகளின் மன உணர்வுகள்
3. நிறுவன ரீதியான காரணிகள்

சிறந்த வெற்றிகரமான பொறுப்புக் கையளிப்பென்பதுவோர் சமூகத்திறனாகும். முகாமை மட்டத்திலுள்ளோருக்கு இந்தத் திறன் குறைவாக அமைந்து காணப்படுவதனால் அது நிறுவனத்தினுள் பின்வரும் விளைவுகளைத் தோற்றுவிப்பதாக இருக்கும். அதாவது நிறுவனத்திலுள்ள ஊழியர்கள் ஆற்றல் குறைவானவர்களாகவும் அவர்களது வேலைகளை ஆற்ற முடியாதவர்களாகவும் மாற்றும். இந்த நிலையானது பாடசாலையின் வளர்ச்சியில் உள்ளகப் பங்காளரின் ஈடுபாட்டினைக் குறைப்பதோடு அதன் வினைத் திறன் மிக்க செயற்பாட்டிலும் பாதிப்பினை உண்டு பண்ணும்.

பொறுப்புக் கையளித்தலின் பிரதான இடத்தினைப் பெற்றுக் கொள்வது குறிக்கோள்கள் தீர்மானிக்கப்படுதலாகும். இதற்குப் பொருத்தமான கட்டமைப்பு நிறுவனத்தில் தோற்றுவிக்கப்பட்டு அதனூடாக இக் குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படும்.

பொறுப்புக்களைக் கையளிப்பவரும் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்பவரும் தொடர்பில் கொள்கைகள் நடைமுறைகள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுதல் அவசியமானதாகும் இதற்காகப் பாடசாலை என்ற நிறுவனத்துள்ளே சிறப்பான தொடர்பாடலும் ஒன்றிணைப்பும் காணப்படுதல் இன்றியமையாததாகும். இதன் பின்னர் குறித்த வேலையில் பொறுப்பளிக்கப்பட்டவர் செயற்படுவது தொடர்பில் முகாமையாளர் தனது கண்காணிப்பினைக் கொண்டிருத்தல் அவசியாகும்.

**பாடசாலை முகாமையாளரைப் பொறுத்தவரை பொறுப்புக் கையளித்தலின் நன்மைகளாவன**

1. நேரத்தினை முக்கிய வேலைகளுக்குச் செலவழித்துக் கொள்ள முடியும்
2. அதிபரும் ஆசிரியரும் தமது தொழில் திருப்தியினை அதிகரித்துக் கொள்ள முடியும்
3. சக ஊழியர்களின் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் வேலையில் நம்பிக்கையுடன் செயற்படவும் வழியேற்படல்
4. சக ஆசிரியர்களது உள்ளார்ந்த ஆற்றல்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்
5. குழு வேலைக்கான ஊக்குவித்தல் கிடைத்தல்
6. ஊக்கலை உருவாக்கலாம்
7. செலவினைக் குறைத்துக் கொள்ள முடியும்
8. பெறுபேறுகளை அடைந்து கொள்வதனை விரிவு படுத்தலாம்.

**பாடசாலையில் பொறுப்புக்களைக் கையளிக்கும் போது பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகளாவன:-**

1. கையளிக்கப்பட வேண்டிய விடயத்தினைத் தெளிவாக விளங்கிக் கொள்ளல்
2. பொறுப்புக்களினதும், அதிகாரத்தினதும் எல்லைகளை வரையறுத்துக் கொள்ளல்
3. தேவையான வளங்களையும் கருவிகளையும் வழங்குதல்
4. ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களில் தலையீடுகளைத் தவிர்த்தல் இதன் மூலம் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டவர் சுதந்திரமாகச் செயற்பட முடியும்.
5. எவ்வாறு கண்காணித்தல் என்பது தொடர்பான உடன்பாட்டினைக் கொண்டிருத்தல்
6. பொறுப்புக் கையளிக்கப்பட்ட விடயங்களைக் குறித்த வேளையில் ஆற்ற முடியும் என்பதனை உறுதிப்படுத்திக் கொள் ளல்.
7. தேவையான போது மட்டும் தலையீட்டினை மேற்கொள்ளல்
8. சுதந்திரமான வேலைச் சூழலினை ஏற்படுத்திக் கொடுத்தல் அதாவது தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட எல்லாச் செயற்பாட்டுக்குமான சுதந்திரம் காணப்படல்.

பாடசாலை முகாமையாளர்கள், பொறுப்புக்களைக் கையளிக்க விரும்பாமைக்கான காரணங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

1. பாடசாலை முகாமையாளரிடம் காணப்படும் தானே செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு
2. பொறுப்புக்களைக் கையளிப்பது தொடர்பிலான பயம்
3. ஆபத்தினை எதிர் கொள்வதற்கான விருப்பமின்மை
4. சகபாடிகள் அதிகாரத்தினைக் கையாள்வதில் வேலையைச் செய்வதில் ஆற்றலற்றவர்கள் என்ற மனப்பாங்கு
5. தம்மிலும் பார்க்கச் சிறப்பாகச் செயற்படுவார்கள் என்ற அச்ச உணர்வு
6. பாடசாலை முகாமையாளர்கள் கொண்டுள்ள குறைவான முகாமைத்துவப் பயிற்சி
7. புதிய முகாமைத்துவச் சிந்தனைகள் எண்ணக்கருக்கள் தொடர்பான அறிவு போதாமை.

வினைத் திறனான பாடசாலை உருவாக்கத்துக்கு ஆசிரியர் கல்வி முகாமையாளர்கள் என்போர் தொடர்ந்து கற்பவர்களாக இருப்பதோடு முகாமையாளரானவர்கள் சேவைகளைத் திசைமுகப்படுத்தும் திறன் பெற்றவர்களாகவும், நேர்க்கணியச் சிந்தனையுடையவர்களாகவும் ஏனைய ஆளணியினரை நம்பும் மனப்பாங்குடையவராகவும் விளங்குதல் மிகவும் இன்றியமையாததாகும்.

வினைதிறனுடைய எதிர்காலப் பாடசாலையானது தனது ஊட்டப் பிரதேச மாணவர்கள் அனைவரும் பாடசாலைக்கு வரச் செய்வதிலும் வருகை தந்த மாணவர்களின் தொடர் வருகையிலும் கவனம் செலுத்துதல் இன்றியமையாதது. வருகை தந்த மாணவனுக்குத் தரமானதும் சமமானதுமான கல்வியை வழங்குதல் தொடர்பில் அரசால் வழங்கப்படும் நிதியிலும் உதவியிலும் பூரணமாகப் பங்கு கொள்வதோடு சிறந்த முகாமைத்துவத் தின் மூலம் நல்லாட்சியும் நிறுவன உரித்தாளருக்குச் சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுத்தலும் அவசியமானதாகும்.

இச் சந்தர்ப்பத்தில் கீத் டாவிஸ்(Keith Davis) இன் பின்வரும் சூத்திரங்கள் தொடர்பிலும் எமது கவனம் திசை திருப்பப்படல் அவசியமானதாகும்.

**வினைத்திறன் = மனித இயக்கப்பாடு X வளங்கள்**

அரசினால் எத்தகைய வளங்கள் வழங்கப்பட்ட போதிலும் பாடசாலையில் மனித இயக்கப்பாடு பூச்சிய மாக இருக்குமாயின் விளைதிறனும் பூச்சியமாகும். எனவே கல்வி முகாமையாளர்கள் . மனித இயக்கப் பாட்டினை அதிகரிப்பதற்கு வலுவூட்டற் செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

**மனித இயக்கப்பாடு = மனிதரின் திறன் X பாராட்டு**

கல்விச் செயன்முறையில் பங்கு கொள்ளும் மனித வளங்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை இனங் கண்டு வாய்ப்புக்களை வழங்குவதோடு சிறப்பாகச் செயற்படும் சந்தர்ப்பங்களில் பாராட்டுக்களையும் வழங்குவதனூடாகக் கல்வி நிறுவனங்களில் மனித வள இயக்கப்பாட்டினை அதிகரிக்கலாம்.

*(பக்கம் பார்க்க...)*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு இணைந்திருக்கும் உயிரினம்

பொதுவாக சில உயிரினங்கள் தங்களின் நிறத்தினை சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் திறன் வாய்ந்தவை. அவற்றில் பல்லி இனம் சூழ்நிலைக்கு ஏற்ப தன் நிறத்தினை மாற்றும் வல்லமையைக் கொண்டுள்ளது. அவ்வாறு இயற்கைச் சூழ்நிலையோடு ஒளிந்து காணப்படும் இந்த உயிரினத்தினை இங்கு காணலாம்.



# பூச்சியின் ஒலியே இசையின் அடிப்படை




சீனாவில் 16.5 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய பூச்சிப் படிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மற்றும் ப்ரிஸ்டல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இணைந்து மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் அரிய கண்டுபிடிப்பாகும்.
இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகையில், ஜுராசிக் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் மிகச்சிறிய பூச்சியின் படிமம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது 16.5 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது என்பது முதல்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.
நுண்ணிய தொழில்நுட்ப சாதனங்களைக் கொண்டும் ஆர்க்கபோய்லஸ் என்ற பண்டைய இசை ஆராய்ச்சியாளர்களின் உதவியுடனும் படிம நிலையில் இருந்த பூச்சியின் ஒலி குறித்து ஆராயப்பட்டது. இந்தப் பூச்சி உற்சாகமான ஒலிக்குச் சொந்தமானது.
இந்த ஒலிதான் உலகின் மிகத் தொன்மையான இன்னிசைக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.
இதுகுறித்த தொடர் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

# மென்மையான உணர்வைத் தரும் செருப்பு



மென்மையான புல் மீது நடப்பது போன்ற உணர்வைத் தரும் ஆஸ்திரேலிய நிறுவனம் தயாரித்த செருப்புகள் தற்போது விற்பனையில் கொடிகட்டிப் பறக்கின்றன. இந்தச் சிறப்பான செருப்பு வகைகளை குசா என்ற நிறுவனம் தயாரித்து இருக்கிறது. இதில் பயன்படுத்தும் புல் செயற்கையானவை என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
இந்த நிறுவனத்தின் இணையத் தளத்தில் இந்த வகை செருப்புகள் சூடான கடற்கரை மணலில் நடந்தாலும், வெறும் காலில் புற்கள் மீது நடப்பது போன்ற உணர்வைத் தரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# அபூர்வ அணில்



என்னதான் இறைவனால் படைக்கப்பட்ட உலகு என்று கருதினாலும் அவனது அருளால் சில சந்தர்ப்பங்களில் சில அதிசயங்கள் நிகழத்தான் செய்கின்றன. இவ்வாறு காணப்படும் பல அதிசயங்களுக்கு மத்தியில் புதிதாக ஊதா நிறத்தில் அணில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இரு சிறுவர்கள் தமது வீட்டுத்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்த வேளையில் இந்த அதிசய அணிலை கண்டுபிடித்துள்ளனர்.
தற்போது இந்த அணிலுக்கு பேஸ்புக்கில் 3000 நண்பர்கள்.

# பனிக்கட்டியில் மறைந்திருக்கும் ஏரி





பனி படர்ந்து இருக்கும் அந்தாட்டிக்காவில் உலக நாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர். அதன்மூலம் பல்வேறு கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து வருகின்றன. அண்மையில் அந்தாட்டிக்காவில் பனிக் கட்டிகளுக்கு அடியில் ஏரி இருப்பது தெரியவந்துள்ளது. இதனை ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ரஷ்யாவின் ஆராய்ச்சி நிறுவன நிபுணர்கள் அங்கு உறைந்து கிடக்கும் ஐஸ்கட்டியை டிரில்லிங் யந்திரம் மூலம் துளையிட்டனர். சுமார் 3,768 மீற்றர் ஆழத்துக்கு பூமியில் துளையிட்டனர். அப்போது அதன் அடியில் ஏரி மறைந்து இருப்பது தெரியவந்தது. அதுவும் பனிக்கட்டியாகத்தான் உள்ளது. அந்த ஏரியின் மீது 2 கோடி ஆண்டுகளாக ஐஸ் கட்டி மூடிக்கிடக்கிறது.
எனவே அங்கு சில நுண்ணிய உயிரினங்கள் வாழ்கின்றன. இந்த தகவல் ஐஸ்கட்டியை துளையிட்டு ஏரியில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீரின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (27)

**கேது ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் மேலும் தொடர்கின்றன.**

பெயர் எண் 34

குடும்ப வாழ்க்கையில் குறையுடன் வாழ்வார்கள். ஏதேனும் தீய பழக்கத்திற்கு கண்டிப்பாக அடிமையாகி விடுவார்கள். மது, மாது, சினிமா, போதை தரும் வஸ்துக்களுக்காக அதிகம் செலவு செய்வார்கள். அங்கக் குறைகளை உண்டாக்கும். தீய வழியில் உறவுகளை உண்டாக்கும். பணம் சம்பாதித்துத் தவறான வழியில் செலவு செய்ய வைக்கும்.

பெயர் எண் 43

விசித்திரமான மனப்போக்கு உடையவர்கள். வாழ்க்கையே புரட்சியாகத் தோன்றும். மாறுபடும் மனோநிலை, இருபுத்தி உடையவர்கள். ஆதலால் அடிக்கடித் தொழிலை மாற்றிக் கொண்டேயிருப்பார்கள். விசாலமான அறிவு இருக்கும். தன்முயற்சி பிறருக்குப் பலிதமாகும். இது ஒரு துரதிருஷ்டமான எண்.

பெயர் எண் 52

பெரும்புகழ், கீர்த்தியை உண்டுபண்ணும். சரித்திரம் படைப்பார்கள். தன் புத்திசாலித்தனத்தால் மற்றவரின் மனதை மாற்றும் வல்லமை படைத்தவர்கள். குடும்ப வாழ்க்கை குழப்பங்கள் மிகுந்ததாக இருக்கும். சொந்த வாழ்க்கை சுகமற்று, பொது வாழ்க்கை புனிதமடையும். புகழுடன் மறையும் புண்ணியத்தைப் பெற்றிருப்பர். வாழ்வின் பிற்கூறில் பெரிய முன்னேற்றம் உண்டாகும்.

பெயர் எண் 61

கலைத்துறையில் மாபெரும் சாதனை படைப்பார்கள். புகழ் மேன் மேலும் வளரும். தன் இஷ்டப்படியே எல்லாவற்றையும் செய்வார்கள். குடும்ப வாழ்வில் குறிப்பிடும் படியான நன்மைகள் எதுவும் நடக்காது. ஆரோக்கியம் குன்றும். கவலையைச் சுமந்து கொண்டே காலங்கழிப்பார்கள். குடும்ப வாழ்க்கை வெளித் தோற்றத்திற்கு வெற்றிகரமாகத் தோன்றும்.

பெயர் எண் 70

தீவிரவாதத் தன்மை உடையவர்கள். எடுத்த காரியத்தில் தீவிரத்தன்மையுடன ஈடுபடுவார்கள். படபடப்புடன் செயலாற்றுவார்கள். அடிக்கடி தோல்வி, ஏமாற்றங்கள், சிரமங்கள் ஏற்படும். முன்கோபம் மிக்கவர்கள்.

பெயர் எண் 79

வாழ்க்கையில் ஆரம்பத்தில் கஷ்டமும், போராட்டமும் இருக்கும். சாமர்த்தியத்தாலும், மிதமிஞ்சின மனோபலத்தாலும் தீவிரமாக முன்னேறுவார்கள். பிற்பகுதியில் பிரபலமடைவார்கள். குடும்ப வாழ்க்கை குழம்பி விடும். நல்ல திடமான அதிஷ்டமும், வெற்றியும் பின்னாளில் உண்டாகும்.

பெயர் எண் 88

சாத்விகத்தை விரும்புவார்கள். சிறு குழந்தையைக் கூட மரியாதையாகவே அழைப்பார்கள். தனக்குக் கீழ் உள்ளவர்களைத் தனக்குச் சமமாக மதிப்பார்கள். மனதில் கருணையும், பாசமும் இருக்கும். சகல ஜீவனிடத்திலும் அன்பு செலுத்துவார்கள். பெரும்புகழும் கீர்த்தியும் உண்டாகும்.



பெயர் எண் 97

கலைவாணி சரஸ்வதியின் பூரண ஆசி பெற்ற எண்ணாகும். கல்வியில் சிறப்புண்டாகும். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவார்கள். செல்வ வளத்துக்கு எந்தக் குறையுமிருக்காது. பெரிய மனிதர்களின் நட்பும், பாராட்டும், உதவியும் கிடைக்கும். வெற்றி வேந்தர்களாக நடைபோடுவார்கள்.

**கேது ஆதிக்க எழுத்துக்களின் குணாதிசயங்கள்**

O.... நிரந்தரமான அறிவையும் தீர்க்கமான அபிப்பிராயத்தையும், வெற்றிக்காகப் போராடும் உறுதியையும் தரவல்லது. புதுப்புது முயற்சிகளும் கருத்துக்களும் உருவாகும். ஆக்க சக்திகள் கொண்டது. உலக மக்கள் நலமுடனும், வளமுடனும் வாழ விரும்புவார்கள். தெய்வ பலமிருக்கும். கடினமான காரியத்தை யும் சுலபமாக முடிப்பார்கள். மனோசக்தி மிக்கவர்கள். அடிக்கடி உடம்பில் கோளாறுகள் தோன்றி மறையும்.

Z ... புத்தியைக் கூர்மையாக்கும். மாறாத அபிப்பிராயம் இருக்கும். அழுத்தமானவர்கள். பொதுஜன நன்மைக்காக உழைக்கும் மனோபக்குவமிருக்கும். வெற்றி பெறுவதற்குத் தேவையான அனைத்துக் குணங்களும் இருக்கும். பேச்சிலே தந்திரமும் மிருதுவான தன்மையும் கலந்து காணப்படும். அதிக கவலையும் நரம்புக் கோளாறுகளும் உண்டாகும். வளைந்து கொடுத்துச் செயல்படுவார்கள். நிர்வாகத் திறமையும் உறுதியான லட்சியமும் உடையவர்கள். குடும்ப வாழ்க்கை சுகமுடையதாக இருக்கும். செல்வம், புகழ் கொண்ட மனிதராக வாழ்வார்கள்.

**பிறப்பு எண் 7 விதி எண் 1**

கேது சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நல்ல குணத்தையும் அறிவையும் சிந்தனாசக்தியையும் பெற்றிருப்பார்கள். உயர்ந்த உள்ளம் கொண்ட மனிதர்கள். கதை, கவிதை, கட்டுரை, கலாசார நாட்டமுடையவர்கள். இளமைக் காலத்திலேயே காதல் வயப்படுவார்கள்.

முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டார்கள். எடுத்த காரியத்தை முடித்தே தீருவார்கள். செயல்களில் தீவிரமான லட்சிய வெறி குடிகொண்டிருக்கும். தனக்கென்று தனிக்கொள்கை வைத்திருப்பார்கள். அதன்படிதான் நடந்து கொள்வார்கள்.

மிகவும் குழப்படைவார்கள். எதிலும் முடிவெடுக்க முடியாமல் திணறுவார்கள். நண்பர்களிடம் நன்மதிப்பு இருக்கும். நாணயமிக்கவர்கள். ஆளும் குணம் படைத்தவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையா கக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,6,15,24,2,11, 20,29

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை, வெளிர் பச்சை.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், முத்து, ஒபல், சந்திரகாந்தக்கல், ஜேட், சூரியகாந்தக்கல், டைகர்ஸ் ஐ, வைடூரியம்.

*(தொடரும்)*

# காதலை அசிங்கப்படுத்துகிறார்கள்

யாழ்ப்பாணத்தில் கலாசாரம் பாழாகிப் போகின்றது என்று பலரும் கூப்பாடு போடுகின்றனர். அது பல்வேறு வகையில் சீரழிவதாக இங்கிருப்பவர்களை விட புலத்தில் இருப்பவர்களே அதிகம் கவலைப்படுகின்றனர். அவர்களது கவலை எவ்வாறானதெனில் தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுவதைப் போன்று இருக்கின்றது. அதாவது இங்கு கலாசார சீரழிவு ஏற்படுவதாகக் கூப்பாடு போட்டுக் கொண்டு மறைமுகமாக அதற்குத் துணை நிற்கின்றனர்.

இங்குள்ளவர்களுக்கு கைத் தொலைபேசியும், காசும் அனுப்பி அவர்களைப் பாழடித்து விட்டு பின்பு கலாசாரம் கெட்டுப் போய்விட்டது என்று ஒப்பாரி வைக்கின்றனர்.

**ஏன்... எதற்கு... எப்படி?**

அண்மைக் காலத்தில் வடபகுதியில் தமிழர்களின் பிரதேசங்களில் காதலர் தின கொண்டாட்டங்கள் புதிதாக முளைவிடத் தொடங்கியிருக்கின்றன. உண்மைக் காதலை ஊருக்கு சொல்லித்தான் தெரிய வைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் தற்போது ஊதாரித்தனமாக காதலை ஊருக்கே தெரிவிப்பதைப் போன்று, வீதிகள் தோறும் காதலர்கள் தமது பெயர்களைப் பொறித்து வைக்கின்றனர்.

இரவோடு இரவாக வீதிகள் எங்கும் காதலர்களின் பெயர்கள் பொறிக்கப்படுகின்றன. அத்துடன் வீட்டு மதில்களிலும் இந்த வீர வித்தைகளைக் காட்டுவர். அவர்களைப் பொறுத்தவரையில் இவ்வாறு ஊரெங்கும் தமது பெயர்களைப் பொறிப்பதுதான் காதலர் தினக் கொண்டாட்டம் என்று கருதுகின்றனர்.

எரிபொருள் விலையேற்றத்தினால் நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இதைப் பற்றி எதுவுமே கவலைப்படாதவர்களாக, விலையேற்றத்தையும் பொருட்படுத்தாது அதிக விலை கொடுத்தாவது 'ரின்னரை' வாங்கி வீதி முழுக்கத் தமது பெயர்களைப் பொறித்துச் செல்கின்றார்கள். இவர்களது கூத்துக்களை வீட்டாரும் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்.

நேற்றும் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் காதலர்களின் இந்த வீர தீரச் செயல்களைப் பலரும் அவதானித்திருக்க முடியும். மக்களின் தேவைகள் எதோவாக இருக்கையில், அதுவும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வெல்லப்பட வேண்டிய விடயங்கள் இன்னும் எத்தனையோ இருக்கையில் நாட்டை ஆளப் போகின்ற இந்த இளம் சமுதாயம் இவ்வாறு தறிகெட்டுப் போகலாமா ?

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

ஏனைய நாளிதழ்களில் காணமுடியாத துணிச்சலையும்,சில பத்திரிகைகள் குழிதோண்டிப் புதைத்து விட்ட நடுநிலையையும் காவிக்கொண்டு கடந்த கால் நூற்றாண்டு காலமாய் எழுதுகோலால் ஓர் உரிமை யுத்தத்தை ஆரம்பித்து இன்னமும் விவேகம் குன்றாமல் களம் கண்டு கொண்டிருக்கிறது உதயன். இடர் மிக்க காலங்களில் பலத்த சவால்களை எதிர்கொண்டு தன்னிகரில்லா நாளிதழாக மேன்மை பெற்றுத் திகழ்கிறது. காலவோட்டத்துக்கு ஏற்றாற்போல வடிவமைப்பில் மாற்றங்களைச் செய்துள்ளது.

அயல் நாட்டின் பிரபல தமிழ்ச் சஞ்சிகையைப் போல ''மாணவப் பத்திரிகையாளர்கள்'' திட்டத்தை ஆரம்பித்து இளைஞர்களை பத்திரிகைத் துறையில் உள்ளிழுத்து பெரும் அரசியல் மாற்றத்துக்கு வித்திட்டால் என்ன? ஒரு பத்திரிகையில் ஆசிரிய தலையங்கத்துக்கு இணையாக கேலிச் சித்திரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். ஆனாலும் உதயனில் அவற்றைக் காணவில்லை. சினிமா விமர்சனம் என்ற பெயரில் திரைப்படங்களின் திரைக் கதைகளை அப்படியே எழுதுதல் முறையல்ல! தேர்ந்தெடுத்த திரைப்படங்களின் நிறை, குறைகளைச் சுட்டிக்காட்டி ''தரம்'' மிக்க விமர்சனமாக உயர்த்தப்படல் வேண்டும். ''உதயனை விமர்சியுங்கள்'' பகுதியின் மூலம் வாகசர்களின் கருத்துக [illegible] வரவேற்கத்தக்க [illegible]

தி.வைதேகி
A/L 2011

# பாடசாலையின் வினைத்திறன் அதிகரிப்பு....

*(A பக்கத் தொடர்ச்சி...)*

**மனித இயலுமை= அறிவு X திறன்**

பாடசாலையிலுள்ள மனிதவளத்தினது அறிவினையும் திறன்களையும் பெருக்கமடையச் செய்வதனூடாக மனித இயலுமைகளை அதிகரிக்கச் செய்வதோடு அதனூடாக பாடசாலையின் வினைத்திறனினையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

**ஊக்கல் பாராட்டு = மனப்பாங்கு X வாய்ப்பு**

பாடசாலையிலுள்ள மனித வளத்தினது இயலுமைய அதிகரிப்பதில் பாராட்டுவதில் தலைமைத்துவத்தின் நேர்மனப்பாங்கான விருப்பும் சந்தர்ப்பங் கிடைக்கும் போதான பாராட்டுக்களும் பாடசாலையிலுள்ள மனித வளத்துக்கு ஊக்கலை வழங்குவதனூடாகச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொழில் புரிபவர் என்ற வகையில் பணிப்புரைகளை ஏற்று நடப்பவர் என்ற நிலைக்கப்பால் ஒருவருடன் நிறுவனம் தொடர்பான கருத்துக்களைத் தீர்மானங்களைக் கேட்டறிவதன் மூலம் நிறுவனத்தின் செயலார்வமுள்ள அங்கத்தவராக அவரை மாற்ற முடியும். எனவே வினைத்திறனுடைய எதிர்காலப் பாடசாலை உருவாக்கத்துக்கு மேற் கூறப்பட்டுள்ள விடயங்களில் கல்வித்துறைசார்ந்தோர் கவனம் செலுத்துவதனூடாக பாடசாலையில் இருந்து வெளியேறும் மாணவர்கள் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்காற்றக் கூடியவர்களாகவும் ஆரோக்கியமான சுகவாழ்வுடையோராகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்துடன், சமூக வாழ்க்கைக்குப் பங்காற்றுவோராகவும் விளங்குவதற்கு வாய்ப்புருவாகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

இதற்காக ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமல்ல கல்வி நிர்வாகிகளும் பாடசாலையின் ஏனைய உரித்தாளர்களும் தம்மை இற்றைப்படுத்துதல் என்பது எதிர்பார்க்கப்படும் செயலொழுங்காகும்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோமாளி'சுப்பிரமணிய சுவாமி வந்து சென்றதே தெரியல...

இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஈழத்தமிழர்களுக்குச் செய்த துரோகம் வார்த்தைகளால் சொல்ல முடியாது. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இவருக்கும் தொடர்பு இருப்பதாக இந்தியாவில் வெளிவந்த ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த வழக்கிலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காகவே ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தவர் தான் இன்றுவரை அவரது பயணம் முடியவில்லை, தொடர்கிறது.

பார்ப்பனிய இனத்தைச் சேர்ந்த இவர் மனித நேயம் இல்லாமல் தமிழ்நாட்டுத் தமிழர்களையும் ஈழத்தமிழர்களையும் ஒடுக்குவதில் முன்னின்று செயற்படுகிறார். அதாவது பார்ப்பனியருக்குக் கீழே தான் தமிழர்கள் என்ற நிலையை உருவாக்க அயராது உழைத்து வருபவர். அண்மையில் இவர் இலங்கை வந்ததும் தெரியாமல், போனதும் தெரியாமல் சென்றிருக்கிறார். ஈழத் தமிழ் மக்கள் இவரைக் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. ராஜீவ் காந்தி படுகொலையை அடுத்து விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை முழுமையாக நிராகரிக்கத் தொடங்கினார். ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பனும் சோனியா காந்தியின் அரசியல் எதிரியும் ஜெயலலிதாவின் தோழனும் ஆவார்.

ஈழத்தில் போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும் இந்தியாவில் இருந்துகொண்டு ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் இந்த சுப்பிரமணிய சுவாமி. இந்திய அரசியலில் கோமாளிப் பட்டம் பெற்றுள்ள இவர் இலங்கை வந்து சென்றது வெறும் அரசியல் விளம்பரத்துக்காகவே என்பது மக்களுக்கு நன்கு தெரியும். எதிர்காலத்தில் பாரதிய ஜனதாக் கூட்டணி ஆட்சி அமைத்தாலும் கூட இவர் போன்றவர்கள் அரசியல் அதிகாரம் மிக்கவர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பம் கிடையாது. அதேநேரம் எமது இன்றைய அரசியல் பிரச்சினையை இவரிடம் விவாதிப்பது நேரத்தை வீணடிக்கும் செயற்பாடாகும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவின் வருகை மூலமாக எமக்கு எதுவும் பெற்றுக் கொள்ள முடியாதநிலையில் தமிழர்கள் உள்ளனர். ஈழத்தமிழர் பிரச்சினையை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு சென்றும் முடிவு பெற முடியாத நிலையில் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையில் தமிழர்கள் உள்ளனர். இந்தத் தருணத்தில் இவர் போன்ற பகலில் ஒன்றும் இரவில் ஒன்றுமாகப் பேசித்திரியும் அரசியல்வாதிகளை மதித்துப் பேசுவது கூட எம்மை நாம் தாழ்த்திக் கொள்வதற்கு நிகராகும். இதனால் இவரைச் சந்திப்பதை பலபேர் தவிர்த்துள்ளனர். ஈழத்தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கக் கூடாது. இது இந்திய நலனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிலைப்பாட்டில் உள்ளவர்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்று கூறி வந்தவர் இன்று புலிகள் போராட்டம் முடிவுக்கு வந்த நிலையில் அவர்களைப் பற்றியே பேசித் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவதை ஒத்திவைக்கவும் மறைமுகமாக முயற்சி செய்து வருகிறார். வெளிப்படையாக ஒன்று பேசி உள்ளளவில் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் இறங்கியுள்ளார். இலங்கைப் பிரச்சினையில் மூக்கை நுழைக்கும் இவர் ஒருபோதுமே இலங்கைப் பிரச்சினை தீர்ந்துவிடக் கூடாது என்று நினைக்கக் கூடியவர். கொழும்பு பயணத்தை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்த சுப்பிரமணிய சுவாமி வலிகாமப் பகுதி ஒன்றில் உள்ள தொண்டு இல்லத்துக்குச் சென்றிருக்கிறார். அந்தத் தொண்டு இல்லத்தின் உரிமையாளர் வலிகாமப் பகுதியைச் சேர்ந்தவர். வெளிநாட்டில் வசிக்கிறார். இவர் ராணுவ அதிகாரி ஒருவருடன் நல்ல உறவைப் பேணி வருகிறார். யாழ்ப்பாணம் வரும் ஒவ்வொரு தடவையும் முதல் வேலையாக அந்த ராணுவ அதிகாரியைப் படைமுகாமில் சந்தித்து விட்டுத் தான் மிகுதி வேலையில் இறங்குவார்.

இவரது இல்லத்துக்குத் தான் சுப்பிரமணிய சுவாமியும் சென்றுள்ளார். எமது இனம் போரில் அடிபட்டு நொந்துபோய் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் நிலையில் இதற்குக் காரணமாக இருந்தவர்களை இந்த இல்லம் வரவேற்று உபசரிப்பதைப் பார்க்கின்றபோது இந்த மண்ணில் பிறந்து தாய் மண்ணுக்கே தீங்கு செய்பவர்களையும் பார்க்கின்றோம்.

தொண்டு இல்லம் என்று திறந்துவிட்டு அடிக்கடி ராணுவ அதிகாரிகளின் கூட்டங்களும் இடம்பெறுகின்றன. தமிழர் விரோத சக்திகள் வந்து போவதற்கு என்ன காரணம் என்று புரியாமல் அந்தப் பகுதி மக்கள் விழிக்கின்றனர். போர் இடம்பெற்ற காலப்பகுதியில் ஏ-9 பாதை மூடியிருந்ததால் வெளியிலுள்ளவர்கள் இங்கு வராமல் இருந்தனர். இப்பொழுது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு முடிவு நிலையில் பலபேரின் மறைமுக வேஷங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன. அப்படிப்பட்டவர்களின் செயற்பாடுகள் அவர்களிடம் வருபவர்கள் கள்ள நோக்கத்துக்காகத்தான் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

எமது மண்ணின் வளங்களை நாமே பறிகொடுத்து நிற்கின்ற சூழலில் எமது மண்ணில் இருந்து கொண்டே அதற்குத் துணை போகின்றவர்களை என்ன செய்ய முடியும். ஒரு கணம் சிந்திப்பார்களா? முள்ளி வாய்க்காலில் குற்றுயிராக விழுந்து கிடந்து செத்த எமது உறவுகளை நினைக்க மறுக்கின்றவர்கள் தமிழினமாக இருக்க முடியாது. அவர்கள் வேறு இனமாக இருக்க் வேண்டும். அல்லது கலப்பினமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்களுக்கு நடத்துள்ள துயரங்களை இலகுவில் மறந்துவிட முடியும்.

சுப்பிரமணியசுவாமி ஈழத்துக்குச் செய்த துரோகம் உலகத்துக்கே தெரியும். இந்த நிலையில் இவரைத் தொண்டு இல்லத்துக்கு வரவேற்றது அந்தத் தொண்டு இல்லத்தின் உரிமையாளருக்கும் தமிழர் விரோத செயற்பாட்டுக்குப் பங்குண்டு என்பது வெளிப்படை

சுப்பிரமணிய சுவாமி தமிழ் குழுக்களில் ரெலோ இயக்கத்துடன் நல்ல உறவினைப் பேணி வந்தவர். ஏனெனில் ரெலோ இவரது சொல்லைக் கேட்டு வந்ததால் ரெலோவை இவருக்குப் பிடிக்கும். விடுதலைப் புலிகளை இவருக்குப் பிடிக்காது. விடுதலைப் புலிகள் இவரின் செயற்பாடுகளுக்கு தலை வணங்குவதில்லை. அதனால் ஆரம்பத்தில் இருந்தே விடுதலைப் புலிகளை இவர் வெறுத்து வந்தார். சுப்பிரமணிய சுவாமியைப் பற்றி சுவாரசியமான சம்பவங்கள் நிறைய இருக்கின்றன.

ஒருமுறை சுப்பிரமணிய சுவாமியை திருச்சி விமானநிலையத்தில் வைத்து ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் விளக்குமாறினால் அடித்தபோது திரும்பி விமானத்தில் ஏறி ஓடினார். இவர் பெயரில் ஒரு திரைப்படமே வெளிவந்தது. உடனே இவர் தன்னுடைய பெயரில் எப்படி படத்தை எடுப்பார்கள் என்று நெருப்பு எடுத்துவிட்டார். முருகன் பெயரை எப்படி நீ எடுத்துக் கொண்டாய் என்று கேட்டதன் பின்னர்தான் இவரின் பிரச்சினை முடிவுக்கு வந்தது. இப்படியாக கோமாளியாக வலம் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர் பிரச்சினை கறைபடிந்த வரலாற்றில் சுப்பிரமணிய சுவாமி காரணமாக இருந்தவர் என்பது ஈழவரலாற்றில் பதிவாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

■ பித்தன்

# நெல்லுக்கு 'அட்மிஷன்'

முன்னைய காலங்களில் வன்னிப் பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களைப் பற்றி வேடிக்கையான கதைகள் நிறைய உண்டு. அவற்றில் ஒன்று செத்தல் மிளகாய் கதை.

கிளிநொச்சியில் ஓர் ஆசிரியர் [யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்] மாணவர்களுக்கு ஏனோதானோ என்றுதான் கற்பிப்பார். அவரைப் பொறுத்தவரை வன்னி மாணவர்களுக்குக் கற்பித்தாலும் கற்பிக்காவிட்டாலும் ஒன்றுதான். '' இவங்களுக்கு என்னதான் படிப்பிச்சாலும் கடைசியில தோட்டம்தானே செய்யப்போறாங்கள்'' என்பது தான் அவர் அடிக்கடி உச்சரிக்கும் மந்திர வாக்கியமாக இருந்தது. கற்பிக்காமலே தன்னுடைய மாணவர்களுக்கு பரீட்சையின்போது புள்ளிகள் இடுவதற்கு அவர் ஒரு நூதன வழியைக் கையாண்டார். யார் அதிகம் செத்தல்மிளகாய் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கே அதிக புள்ளி. அப்போது [1970 களில்] வன்னியில் காடு வெட்டி, கமம் செய்யும் பலரும் மிளகாயையே அதிகம் பயிரிட்டிருந்தனர். எனவே தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்காக மூடைக்கணக்கிலும் செத்தல் மிளகாயை குறித்த 'வாத்தியாருக்காக' அள்ளிக் கொடுத்தனர் பல பெற்றோர்.

மூடைகளை எண்ணிப்பார்த்து அதற்கேற்ப புள்ளிகளை ஆசிரியர் போடுவார். தமது பிள்ளைகள் குறைவான புள்ளிகளை எடுத்துவிட்டால், அடுத்தமுறை இன்னும் அதிகமான செத்தல்மிளகாயை அனுப்பி வைக்கப் பெற்றோர் தயங்கவில்லை. எனவே செத்தல் மிளகாய்க்காக அடிக்கடி பரீட்சைகளை ஆசிரியர் வைப்பாராம். அவர் ஆசிரியத் தொழில் செய்து உழைத்த பணத்தைக் காட்டிலும், செத்தல் மிளகாய் விற்றுச் சேர்த்த பணம் பல மடங்கு என்று சொல்லுவார்கள்.

இந்தச் செத்தல் மிளகாய்க் கதை உண்மை, பொய் என்பதற்கப்பால் வன்னிப் பகுதி மாணவர் பற்றிய பெரும்பாலான ஆசிரியர்களிடம் அப்போதிருந்த எண்ணக் கருவை வெளிப்படுத்தியிருந்தது. ''எப்போதுமே யாழ்ப்பாணம் போன்ற பெரு நகரங்களுடன் வன்னிப் பகுதியில் – காட்டுக்குள் வசிக்கும்– மாணவர்கள் கல்வித் துறையில் போட்டியிட முடியாது. வன்னி மாணவர்கள் ஏதோ ஒப்புக்குத்தான் கற்கிறார்கள். நாங்களும் மனமிரங்கி அவர்களுக்காக அங்கு சென்றுகற்பிக்கின்றோம்.'' என்று அந்தக் காலப் பகுதியில் வன்னியில் படிப்பித்த வாத்தியார்கள் தம்முடைய சகாக்களிடம் சொல்லிக்கொள்வார்கள்.

## கோணல் கோலங்கள்

நான்கு தசாப்தங்கள் உருண்டோடிய பின்னும் இன்னமும் அந்த எண்ணம் பலரிட்த்தே மாறவில்லை. அடி மனதில்பல ஆசிரியர்கள்வன்னி மாணவர்கள் பற்றிய பழைய விம்பமே ஒட்டியிருப்பதாக வன்னிப் பகுதிப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். ஆரம்பத்தில் வன்னிப் பகுதி மாணவர்கள் கல்வியில் பின் தங்கியவர்களாகக் கருதப்பட்டபோதும் தொடர்ந்தும் நிலைமை அப்படியே நீடிக்கவில்லை. 1990 களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு நிகரான – சில வேளைகளில் அதை விடவும் அதிகமான – அறிவுசார் கட்டுமானம் ஒன்று வன்னிப் பகுதியில் எழுப்பப்பட்டிருந்தது. முள்ளிவாய்க்கால்வரை அந்த கட்டுமானம் பலமாகவே இருந்தது. ஆனாலும், இப்போதும் வன்னிப்பகுதிமாணவர்களின் திறனை அல்லது அவர்களது கற்றல் ஆர்வத்தைத் தவறாகவே பல ஆசிரியர்களும் பாடசாலைகளும் விளங்கிக் கொண்டுள்ளன.

■ ஓடுகாலி

போர்க்காலத்தில் வன்னிப் பகுதியில் அடிக்கடி கேட்ட வாசகங்களில்,'' போர் வடிவங்கள் மாறலாம் ஆனால் போராட்டம் மாறாது'' என்பதுவும் ஒன்று. அதைப் போன்றே செத்தல் மிளகாய் விவகாரமும் வேறு வடிவங்களில் உயிர்வாழ்ந்து வருகின்றது.

கிளிநொச்சியில் உள்ள பாடசாலையில் மாணவர்களைப் புதிதாக அனுமதிப்பதற்கு கட்டணங்கள் வெவ்வேறு விதமாக நிர்ணயிக்கப்படுகின்றது. வழமையாக புதிய அனுமதி பெறுவதற்கு 5 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாமல் பாடசாலை அபிவிருத்திக்கு நன்கொடையாக வழங்க வேண்டும். குறித்த மாணவரின் சகோதரர்கள் யாராவது அங்கு கற்றால் அவர்களின் எண்ணிக்கைக்கேற்ப இந்தத் தொகையில் சிறப்புச் சலுகைகளும் உண்டு. இரண்டு சகோதரர்கள் கல்வி கற்றால் ஆயிரம் ரூபாவும், ஒரு சகோதரர் கல்விகற்றால் இரண்டாயிரம் ரூபாவும் அறவிடப்படுகின்றது.

இவ்வாறு புதிய அனுமதிக்காக பணத்தைக் கட்ட முடியாத பெற்றோருக்கு பாடசாலை நிர்வாகம் பழைய செத்தல் மிளகாய் ஐடியாவுக்குப் புதிய முலாம் பூசிய யோசனையொன்றை முன்வைத்துள்ளது. அதாவது பணத்தின் பெறுமதிக்கேற்ப நெல் மூடைகளைப் பாடசாலைக்குக் கொடுத்துவிட்டு, 'அட்மிஷன்' பெறலாம் என்பதுதான் பாடசாலை நிர்வாகத்தின் அந்தத் திட்டம். போரால் வாழ்வின் எல்லா ஆதாரங்களையும் இழந்துபோன இந்தப் பகுதி மக்கள் தற்போதுதான் தம்முடைய வாழ்வின் இரண்டாவது 'இன்னிங்ஸை' ஆரம்பித்திருக்கின்றனர். எந்தவிதமான அடிப்படைப் பொருளாதாரக் கட்டுமானம் இன்றி வெற்றுப் புள்ளியிலிருந்து தமது வாழ்வை தொடங்கிய மக்களிடம் பாடசாலை அனுமதிக்குக் கட்ட பணம் ஏது? ஆகவே நெல் மூடைகளை கொண்டுவந்து கொடுத்துவிட்டு தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு பல பெற்றோர் தலையாட்டி உள்ளனர். இப்போது அறுவடைக் காலம் நடப்பதால் விரைவிலேயே நெல் மூடைகளோடு பாடசாலைக்குப் படை எடுக்கும் பெற்றோரைக் குறித்த பாடசாலை வாசலில் விரைவில் காணமுடியும். தமது உடலை எப்படி வருத்தினாலும் பரவாயில்லை, எவ்வளவு செலவானாலும் கவலையில்லை என்றெண்ணித் தமக்கு மிஞ்சிய நெல்லைக்கூட பிள்ளைகளின் கல்விக்காக தியாகம் செய்கின்ற வன்னிப் பெற்றோரை கருணை கண் கொண்டுபார்ப்பதற்கு இதுபோன்ற பாடசாலைகள் தவறிவிடுகின்றன. பெற்றோரை எப்படிக் கசக்கிப் பிழிந்து பாடசாலையின் கட்டட வளங்களைப் பெருக்குவது, அதிபர் அறையின் வசதிகளை அதிகரிப்பது என்று இத்தகைய பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டங்களைப் பெருக்கிக் கொண்டே வருகின்றன. அதற்கு நெல் மூடைகளும், பண நோட்டுக்களையும் வாங்குவதில் மட்டுமே குறியாக உள்ளன. என்றுதான் இந்தச் செத்தல் மிளகாய் மனோநிலை மாறுமோ தெரியவில்லை. ''கிளிநொச்சி முருகா! [illegible] நீயும் இதை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய்?'' என்று பல பெற்றோர் மனதுக்குள் மன்றாடுவது இந்தப் பாடசாலைகளின் செவிகளில் கடைசி வரைக்கும் ஏறுவதே இல்லைப்போலும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org